விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்
Thamil Naatham

இராகம் 01 | தாளம் 26 | வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 10 புதன்கிழமை (25.07.2012) | பக்கங்கள்: பதினாறு

'கல்வி ஒளி' இலவச இணைப்பு உள்ளே...

## வடக்கில் நேற்று வைத்தியர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டம்

### ஆஸ்பத்திரிகள் ஸ்தம்பிதம்


யாழ்.போதனா வைத்தியசாலை விவகாரம் தொடர்பாக வடமாகாண அரசாங்க ஆஸ்பத்திரிகளின் வைத்தியர்கள் நேற்று பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். போதனா வைத்தியசாலையின் அரசாங்க சொத்துக்களின் துஷ்பிரயோகம் தொடர்பான விசாரணையில் அதிருப்தி தெரிவித்துள்ள வைத்தியர்கள், பூர்வாங்க விசாரணையில் பரிந்துரைக்கப்பட்டதன் பிரகாரம் மேலதிக விசாரணை நடத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். 02

## இஸட் புள்ளியால் பாதிக்கப்பட்ட எமக்கு தீர்வு பெற்றுத் தாருங்கள்

### பழைய பாடத்திட்ட மாணவர்கள் கோரிக்கை

திருத்தி அமைக்கப்பட்டுள்ள இஸட் (Z) புள்ளி மீள் வெளியீட்டினால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக ...ம் பழைய பாடத்திட்டத்தின்படி உயர்தரப் பரீட்சையில் தோற்றி சித்தி பெற்றுள்ள மாணவர்கள், தமக்கு நீதியான தீர்வைப் பெற்றுத்தந்து தமது ஏமாற்றத்துக்கும் மன உளைச்சலுக்கும் முடிவு கட்டுமாறு கோரியுள்ளனர். இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது. 02



நல்லூர் கந்தசுவாமி ஆலய கொடியேற்றத் திருவிழா நேற்று மிகவும் பக்திபூர்வமான முறையில் நடைபெற்றது. இத்திருவிழாவின் போது முருகன், வள்ளி-தெய்வானை சமேதராக எழுந்தருளி அடியவர்களுக்கு அருள் பாலிப்பதை படத்தில் காணலாம்.

# மன்னார் நீதவானுக்கு அச்சுறுத்தல் விடுத்தவர் மீது கடும் நடவடிக்கை

### நீதிமன்றத்தினூடாக எடுக்கப்படும் என்கிறார் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர்

மன்னார் நீதவானுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை மற்றும் பொலிஸாரின் விசாரணை அறிக்கை கிடைத்ததும் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தினூடாகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரான அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பொன்று நேற்று முற்பகல், கொழும்பிலுள்ள மகாவலி கேந்திர நிலையத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், இச்சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துமாறு இரகசிய பொலிஸாருக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை வழங்கியுள்ளார்.

மேற்படி சம்பவங்கள் தொடர்பான விசாரணை அறிக்கை கிடைத்ததும் சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களுக்கு எதிராக சட்டம் தன் கடமையைச் செய்யும் என்றும் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.



அரசாங்கம் என்றவகையில், மேற்படி சம்பவத்துக்கு கண்டனம் தெரிவிக்கின்றோம். அத்துடன், சம்பவம் தொடர்பான 02



அண்மையில் சர்சைகளை ஏற்படுத்திய வவுனியா, நெலுக்குளத்தைச் சேர்ந்த கணேசன் நிமலரூபனின் பூதவுடல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படுகையில் எடுக்கப்பட்ட படம்.

## கொலன்னாவை சம்பவம் துமிந்தவுக்கு நினைவில்லை

### சி.ஐ.டி.சொல்கிறது

கொலன்னாவை துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின்போது ஜனாதிபதியின் ஆலோசகர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் தனக்கு நினைவில் இல்லையென நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா சிங்கப்பூரில் வைத்து தமக்கு கூறியதாக கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். 02

## அரசியல்வாதிகளின் பிள்ளைகள், மனைவியர் தேர்தலில் போட்டியிட தடை

### அமைச்சர் சுசில்

தேர்தல் நடைபெறும் மூன்று மாவட்டங்களையும் சேர்த்து முன்னாள் அமைச்சர்களுக்கு தாம் பயன்படுத்திய அரச வாகனங்கள் மற்றும் அரச சொத்துக்களை மீள வழங்குமாறு அறிவித்துள்ளோம். பலர் அவற்றை திருப்பி வழங்கியுள்ளதோடு மீள வழங்காதவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று 02

## அஸாமில் கலவரம் 50ஆயிரம் பேர் நிர்க்கதி

இந்திய அசாம் மாநிலத்தில் இரு பிரிவினர் இடையே ஏற்பட்டுள்ள மோதல் தொடர்கிறது. இதனால் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வீடுகளை இழந்து வசித்த பகுதியில் இருந்து இடம்பெயர்ந்துள்ளனர். இவர்கள் அனைவரும் அரசு அமைத்துள்ள முகாம்களில் பாதுகாப்பாகத் தங்கவைக்கப்பட்டுள்ளனர். 02

## காவத்தையில் செய்தியாளர்கள் மீது தாக்குதல்

காவத்தையில் தாயும் மகளும் எரித்துப் படுகொலை செய்யப்பட்ட கொடஹேதன வீட்டுக்குச் செய்தி சேகரிக்கச் சென்ற நிருபர்கள் மீது கற்கள் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வீட்டோடு சேர்த்து எரிக்கப்பட்ட பெண்களின் உறவினர்களே தம்மைத் தாக்க 02

## யுத்தத்தின் பின்னரும் ஆட்கள் காணாமற் போகின்றனர்களாம்

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னரும் யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்டு காணாமல் போனவர்களின் பெயர் பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது என மக்கள் போராட்ட இயக்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அஜித் குமார நேற்றுத் தெரிவித்தார்.

லலித் மற்றும் குகனின் கடத்தப்பட்டு காணாமல் போனமை தொடர்பாக யாழ்.நீதிமன்றில் 02

தமிழ் பேசும் மக்களின் எழுச்சிக் குரல்

# புலிகளை ஏன் சட்டவிரோத இயக்கமாக அறிவிக்கக்கூடாது? இப்படியும் கேட்கிறது டெல்லி நீதிமன்றம்

சட்டவிரோத இயக்கமாக ஏன் அறிவிக்கக்கூடாது? என்று விளக்கம் கேட்டு விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டு உள்ளது.

டெல்லியில் உள்ள சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்பு) நடுவர் மன்ற பதிவாளர் அனில் குமார் கவுசல் இதற்கான அறிவிப்பை 23-7-2012 அன்று வெளியிட்டுள்ளார்.

அதில் கூறப்பட்டிருப்பதாவது:-

1967-ம் ஆண்டு சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டத்தின் 4-ம் பிரிவைச்சேர்ந்த (2) உட்பிரிவின் கீழ், உங்களுடைய இயக்கத்தை சட்டவிரோதமான இயக்கம் என்று ஏன் அறிவிக்கக்கூடாது என்பதற்கும், இத்தகைய அறிவிப்பை உறுதி செய்கின்ற உத்தரவு ஒன்றினை ஏன் பிறப்பிக்கக்கூடாது என்பதற்கும் காரண விளக்கத்தை இந்த அறிவிப்பு வெளியான நாளில் இருந்து 30 நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும்.

சட்டவிரோதமான இயக்கமாக அறிவிக்கக்கூடாது என்பதற்கான மறுப்போ அல்லது பதிலோ இருப்பின் 30 நாட்களுக்குள் டெல்லியில் ஷேர்சா சாலையில் உள்ள உயர்நீதிமன்ற மருத்துவப்பிரிவு கட்டிடம், 3-வது தளத்தில் அமைந்துள்ள சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்பு) நடுவர் மன்றப் பதிவாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்யலாம். மறுப்புரை, பதில், ஆவணங்கள் ஆகியவை வட்டார மொழியில் இருந்தால் அதன் உண்மையான ஆங்கில மொழி பெயர்ப்பும் அத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

இதுதொடர்பான கூடுதல் நடவடிக்கைகளுக்காக டெல்லி உயர் நீதிமன்ற 'ஏ' கட்டிட தொகுதியில் உள்ள நீதிமன்றம் எண்: 20-ல் அடுத்த மாதம் (ஒகஸ்டு) 27ம் திகதி பிற்பகல் உரிய சட்டத்தரணி மூலம் நடுவர் மன்றத்தில் ஆஜராகலாம்.

இவ்வாறு அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

# நல்லூர் உற்சவத்தில் தங்க சங்கிலி அபகரிப்பு

யாழ்ப்பாணம் நல்லூர் ஆலயக் கொடியேற்றத்தில் கலந்துகொள்வதற்காக நேற்று வருகை தந்திருந்த பக்தர் ஒருவரின் நான்கு பவுண் தங்கச் சங்கிலி காணமல் போயுள்ளமை தொடர்பில் தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாக யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம்' ஆனைக்கோட்டை கூழாவடி வீதியை வசிப்பிடமாகக் கொண்ட 65 வயதுடைய கனக சபை சரவஸ்வதி என்ற பெண்ணின் தங்கச் சங்கிலியே இவ்வாறு காணாமல் போயுள்ளது.

நல்லூருக்கு வரும் பக்தர்கள் தங்களது ஆபரணங்கள் தொடர்பாக விழிப்புணர்வுடன் இருப்பதோடு தங்க ஆபரணங்கள் அணிந்து வருவதை தவிர்க்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். நாட்டின் பல பாகங்கலிருந்து மக்கள் வருகை தருவதினால் சுமார் 600 பொலிஸார் வெளிமாவட்டங்களில் இருந்து வர வழைக்கப்பட்டுள்ளனர். யாழ். நல்லூரைச் சுற்றி சுமார் 1200 பொலிஸார் கடமையில் ஈடுபட்டுள்ளனர். அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்தியாவுக்கு படகு மூலம் செல்லமுயன்ற 8 பேர் கைது

இந்தியாவுக்குசட்டவிரோதமாக படகுமூலம் செல்லமுயன்ற இலங்கையர் எட்டுப்பேரைமன்னாரில் கடற்படையினர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இந்தியாவுக்குச் சென்றுஅங்கிருந்து அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முயன்றதாக கூறப்படுகிறது. கைதுசெய்யப்பட்டுள்ளவர்களில் இரு குடும்பங்களைச் சேர்ந்த 3 பெண்கள், ஆண்கள் இருவரும் அடங்குகின்றனர்.

இவர்கள் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை,அவுஸ்திரேலியாவுக்குச் செல்லமுயன்ற போது கிழக்கு கடற்பகுதியில் சிலதினங்களுக்கு முன்னர் கைதுசெய்யப்பட்ட 53 பேரை ஒகஸ்ட் 6 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலைநீதவான் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

# புடவை வியாபாரத்தில் ஈடுபட்ட 3 இந்திய வியாபாரிகள் கைது

யாழ்ப்பாணத்தில் புடவை வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த 3 இந்திய வியாபாரிகள் இளவாளை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுற்றுலா விசாவில் இலங்கை வந்த இவர்கள் சட்டவிரோதமாக புடவை வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

விசா முடிவடைந்த பின்னரும் இளவாளை பகுதியில் புடவை வியா பாரத்தில் ஈடுபட்டிருந்த போதே இவர்கள் மூவரும் பேரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

மேற்படி 3 இந்திய வியாபாரிகள் தொடர்பான தகவல் இந்திய உயர் ஸ்தானிகராலயத்திற்கு தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து நேற்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது, எதிர்வரும் 27ஆம் திகதி வரை இவர்கள் மூன்று பேரையும் விளக்கமறியலில் வைக் குமாறு உத்தரவிட்ட மல்லாகம் நீதிவான் நீதிமன்ற நீதிபதி, பின்னர் குடிவரவு மற்றும் குடியகல் திணைக்களத்திடம் கையளிக்கு மாறும் தெரிவித்தார்.

## வடக்கில் நேற்று...(தொடர்)

இவ்விசாரணை பாரபட்சமின்றி நீதியான முறையில் உடனடியாக நடத்தப்பட வேண்டுமெனக் கோரி யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.

வடமாகாணம் தழுவிய ரீதியில் மருத்துவர் சங்கத்தின் தாய்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் இப்பணிப் பகிஷ்கரிப்பை முன்னெடுக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவ சங்கத் தலைவர் எஸ்.நிமலன் தெரிவிக்கையில், "யாழ். போதனா வைத்தியசாலையிலுள்ள நோயாளர்களுக்கு ஏற்படும் குறைபாடுகளுக்கு பணிப்பாளரும் சுகாதார அமைச்சில் அங்கம் வகிக்கும் உயரதிகாரிகளும் பொறுப்பேற்க வேண்டும்.

இப்போராட்டத்தின் மூலம் சுகாதார அமைச்சர் உடனடியாக தலையிட்டு யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் பவானி பசுபதிராஜாவை உடனடியாக மாற்ற வேண்டும் என்றார்.

இதே வேளை யாழ். வைத்தியசாலை தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்துமாறு கோரி வவுனியா பொது வைத்தியசாலையிலும் வைத்தியர்கள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ்விடயம் தொடர்பாக கருத்து தெரிவித்த இலங்கை மருத்துவர் சங்கத்தின் வவுனியா கிளை செயலாளர் வைத்திய கலாநிதி எம்.எம்.எம்.அனஸ்.

பகிஷ்கரிப்பு போராட்டம் நடைபெறுகின்றபோதும் அவசர சேவை மற்றும் நோயாளர் விடுதிகளின் பார்வை என்பன இடம்பெறுவதாக குறிப்பிட்டார்.

## யுத்தத்தின் பின்னரும்...(தொடர்)

வழக்கு விசாரணை நேற்று நடைபெற்றது. இந்த வழக்கு முடிவில் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## காவத்தையில்...(தொடர்)

முயன்றனரென்றும், ஆபாச வார்த்தைகளால் தம்மைத் திட்டினரென்றும் காவத்தைப் பொலிஸ் நிலையத்தில் பத்திரிகை நிருபர்கள் புகார் செய்துள்ளனர். இரண்டு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளின் முன்னிலையிலேயே தம்மைத் தரக்குறைவாகச் சிலர் திட்டினரென்று ஊடகவியலாளர்கள் பொலிசில் தெரிவித்த...

## அசாமில் கலவரம்...(தொடர்)

கோக்ராஜ்கர் மாவட்டத்தில் போடா பழங்குடியினருக்கும், சிறுபான்மையினத்தவர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதில் இதுவரை கலவரம் மற் றும் துப்பாக்கிச்சூட்டில் 21 பேர் கொல்லப்பட்டுள்ளனர். கலகர்களை முடியாமல் மாநில அரசு தவித்து வருகிறது.

இந்த கலவரம் காரணமாக பலர் வீடுகளை இழந்துள்ளனர். இவர்கள் 75 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். கோக்ராஜ்கர் பகுதியில் வெடித்த கலவரம் நேற்று அருகில் இருக்கும் துப்ரி, ஸிரங், உதல்கிரி உள்ளிட்ட மாவட்டங்களில் பரவியிருக்கிறது.

ராஜ்தானி எக்ஸ்பிரஸ் ரயில் மீது கல்வீசி தாக்கப்பட்டது. இந்த ரயில் போக்குவரத்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதனால் பயணிகள் பலரும் ரயில்வே நிலையத்தில் தவிக் கும் நிலை ஏற்பட்டுள்ளது.

## அரசியல் வாதிகளின்...(தொடர்)

ஐ.ம.சு.மு செயலாளர் அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த தெரிவித்தார். ஐ.ம.சு.மு நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அவர், யாராவது அரச வளங்களை மீள வழங்காமல் பயன்படுத்துவதாக முறைப்பாடு கிடைத்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அரசியல் வாதிகளின் பிள்ளைகள் மற்றும் உறவினர்களுக்கு தேர்தலில் போட்டியிட இடமளிப்பதில்லை என்ற எமது கொள்கையில் மாற்றம் கிடையாது. அதன் பிரகாரமே வேட்பாளர் பட்டியல் தயாரிக்கப்பட்டது. ஏற்கெனவே உள்ள உறுப்பினர்களுக்கு மீள போட்டியிட அனுமதி வழங்கப்பட்டது அமைச்சர்களின் மனைவிமார், பிள்ளைகள் போன்றோரும் தேர்தலில் போட்டியிட நேர்முகப்பரீட்சைக்கு வந்திருந்தனர். ஆனால் அவர்களுக்கு இடம் வழங்கப்படவில்லை.

## இஸட்புள்ளியால்...(தொடர்)

2011 க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் பெறுபேறுகள் 25.12.2011 அன்று வெளியாகின. மீண்டும் மாற்றியமைக்கப்பட்ட பெறுபேறு மறுநாள் 26.12.2011 அன்று வெளியாகின. பழைய பாடத்திட்டத்திற்கு அமைவாக பரீட்சைக்கு தோற்றிய நாம் 26.12.2011 வெளியிடப்பட்ட இஸட் (Z) புள்ளி, மாவட்ட நிலைகளின் பிரகாரம் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகுவோம் என்ற நிலையிலிருந்தோம். எனினும் பெறுபேறு வெளியாகி 7 மாதங்கள் கடந்த பின்னர் 2012ஆம் ஆண்டிற்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு இன்னும் இரண்டு வாரங்களே உள்ள நிலையில் உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு அமைவாக மீண்டும் 22.07.2012 அன்று புதிய இஸட் (ஞு) புள்ளி, மாவட்ட நிலை, தேசிய நிலை என்பன வெளியிடப்பட்டன.

26.12.2011 அன்று வெளியிடப்பட்ட பெறுபேறுகளின்படி மருத்துவ பீடம், பொறியியல் பீடம் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகுவோம் என 7 மாதங்களாக பெரும் எதிர்பார்ப்புடன் காத்திருந்த பழைய பாடத்திட்டத்திற்கு அமைவாக பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களாகிய நாம் 22.07.2012 வெளியாகிய பெறுபேற்றின்படி அந்நிலைகளை அடைய முடியாத நிலைக்கு பின் தள்ளப்பட்டுள்ளதுடன் பெரும் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளோம்.

பல்கலைக் கழக அனுமதி கிடைக்கும் என்ற எண்ணத்தில் இருந்தமையினால் கடந்த 7 மாதங்களாக உயர்தரப் பரீட்சைக்கான எவ்விதமான ஆயத்தங்களையும் நாம் முன்னெடுக்கவில்லை. எனினும் 2012 க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு வெறுமனே 2 வாரங்களே உள்ள நிலையில் புதிய இஸட் (Z) புள்ளி தொடர்பான அதிர்ச்சியிலிருந்து மீளாத நிலையில் மீண்டும் உயர்தரப் பரீட்சைக்கான ஆயத்தங்களை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளோம்.

மேலும் பழைய மற்றும் புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக தனித்தனியே கணிக்கப்பட்ட இஸட் (Z) புள்ளிகள் ஒன்றாக சேர்க்கப்பட்டு தர நிலைப் படுத்தப்பட்டமையினாலேயே பழைய பாடத்திட்டத்திற்கு அமைவாக பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களாகிய நாம் பின்தள்ளப்பட்டுள்ளதாக நம்புகின்றோம். 3ம் தடவையாக பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் மீண்டும் உயர்தரப் பரீட்சைக்கு தோற்ற முடியாத நிலையில் உள்ளோம்.

இது தொடர்பாக ஏற்கனவே பல்கலைக்கழக அனுமதியை எதிர்பார்த்திருந்த பழைய பாடத்திட்ட மாணவர்களாகிய எமக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் நியாயமான தீர்வைப் பெற்றுத் தருமாறு கேட்டுக் கொள்கிறோம் என்றுள்ளது.

## கொலன்னாவை சம்பவம்...(தொடர்)

சிங்கப்பூரிலுள்ள மௌன்ட் எலிசபெத் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் துமிந்த சில்வாவிடம் பெற்றுக்கொண்ட வாக்குமூலத்தை குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் நேற்று சமர்ப்பித்தது.

தேர்தல் வேட்பாளரொருவரிடம் பேசியது மாத்திரம் நினைவிலுள்ளதாகவும் அதன் பின் வைத்தியசாலையொன்றில் நித்திரை விட்டெழுந்ததும் நினைவிலுள்ளதெனவும் துமிந்த சில்வாவின் வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் சத்திர சிகிச்சை நிபுணர், சில்வாவுக்கு தலையிலும் கையிலும் மேலும் 2 சத்திரசிகிச்சைகளை செய்ய வேண்டியுள்ளதாகவும் கூறியுள்ளார்.

## மன்னார் நீதவானுக்கு...(தொடர்)

விசாரணைகளை துரிதப்படுத்துமாறு உரிய பாதுகாப்பு தரப்பினருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் நீதியும், நீதிமன்றங்களும் சுயாதீனமாகச் செயற்பட வேண்டும் என்பது ஜனாதிபதியின் எதிர்ப்பார்ப்பாகும். மன்னார் விடயத்திலும் நீதிமன்றம் சுயாதீனமாகச் செயற்படும். உரிய விசாரணை அறிக்கை வந்தவுடன் சம்பந்தப்பட்டவர்கடுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் நீதிமன்றத்தினூடாக எடுக்கப்படும்.

# மூன்று ஏ கிடைத்தும் பல்கலைக்கழகம் கிடைக்காவிட்டால் எவ்வளவு அநியாயம்

## அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் ஏ சித்திகள் பெற்றும் பல்கலைக்கழகம் அனுமதி கிடைக்காவிட்டால் நியாயம் என்ன என அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பியுள்ளது.

இஸட் புள்ளி வெளியிடப்பட்டதன் பின் ஏற்கனவே பல்கலைக்கழக அனுமதி பெற்றிருந்த மாணவர்கள் சிலர் பாதிக்கப்பட்டுள்ளதாக ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சஞ்சீவ பண்டார தெரிவித்துள்ளார்.

இதனால் பல்கலைக்கழக மாணவர் அனுமதி தொகையை அதிகரித்து, பாதிக்கப்பட்டுள்ள அனைத்து மாணவர்களுக்கும் அநீதியின்றி தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

2012ஆம் ஆண்டு உயர்தர பரீட்சை எழுத ஒரு வாரத்தில் அனுமதி பெற்றுத் தருவதாக அரசாங்கம் கூறியுள்ள போதும் ஒரு வாரத்தில் பரீட்சைக்குத் தோற்ற தயாராக முடியுமா என கேள்வி எழுப்பியுள்ளயுள்ளார்.

மாத்தறையில் தெரெசா திஸானி முன்னர் மூன்று ஏ சித்தி எடுத்து மாவட்ட நிலையில் 232ஆவது இடத்தை பிடித்திருந்தார். இஸட் புள்ளி வெளியான பின் அவரது மாவட்ட நிலை 523ஆக மாறியுள்ளது. மாத்தறையில் 325 பேர் கலை பிரிவில் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்படுவர். அதன்படி அவரால் தற்போது பல்கலைக்கழகம் செல்ல முடியாது. இது என்ன நியாயம்?

ஹம்பாந்தோட்டையில் துசார விமுக்தி 3 ஏ சித்தியுடன் மாவட்டத்தில் 4ம் நிலையில் இருந்தார். இசெட் புள்ளி வெளியிட்டதன் பின் அவரது மாவட்ட நிலை 216 ஆகும். ஹம்பாந்தோட்டையில் 210 பேர் மாத்திரமே பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறுவர். இவருக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைக்காது. இது என்ன நியாயம்?

இவ்வாறு பல மாணவர்கள் பிரச்சினையில் விழுந்துள்ளனர்.



இதனைக் கண்டித்து நாம் போராட்டங்களில் ஈடுபடுவோம். அதில் பங்குபற்றுமாறு பெற்றோரிடம் கேட்டுக் கொள்கிறோம். அரசாங்கம் இம்மாணவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டும் என அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சஞ்சீவ பண்டார மேலும் தெரிவித்துள்ளார்.

# இடியன் துப்பாக்கி வைத்திருந்தவர் கைது

(வலிகாமம்)

சட்டவிரோதமாக இடியன் துப்பாக்கி வைத்திருந்த சந்தேகநபர் ஒருவர் வவுனியா பொலிசாரினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வவுனியாவைச் சேர்ந்த குறிப்பிட்ட நபர் இடியன் துப்பாக்கி வைத்திருப்பதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்து பொலிஸார் சோதனை மேற்கொண்ட வேளையில் அவரிடம் இருந்து இத் துப்பாக்கி கைப்பற்றப்பட்டது.

சந்தேக நபர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு வவனியா நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதைத் தொடர்ந்து சந்தேக நபர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# அநீதியின்றி மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி

க.பொ.த உ/த பரீட்சைக்கு பழைய மற்றும் புதிய பாடத்திட்டங்களில் தோற்றி பல்கலைக்கழக அனுமதி பெற்ற அனைவரும் பல்கலைக்கழகம் செல்ல அனுமதி அளிப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இஸட் புள்ளி வெளிடப்பட்டுள்ள நிலையில் எந்த மாணவர்களுக்கும் அநீதி இழைக்கப்படாது பழைய, புதிய பாடத்திட்டத்தில் இரு பிரிவாக மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்படுவர் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இஸட் புள்ளியில் ஏற்பட்ட சில பிரச்சினைகள் காரணமாக பல்கலைக்கழக மாணவர்களுக்கான அனுமதியில் பல்வேறு சிக்கல்கள் தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விசேட தேவையுடையோருக்கான மாகாண மட்ட விளையாட்டுப் போட்டி

வலிகாமம்

வடமாகாண விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

முதல் தடவையாக நடைபெறும் இந்த விளையாட்டுப் போட்டியில் ஐநூறுக்கும் மேற்பட்ட விசேட தேவையுடைய வீர வீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

இதற்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் வட மாகாண கல்வித் திணைக்களத்தின் விசேட தேவையுடைய மாணவர்களின் பாட இணைப்பாளர் திருமதி ஜே.நிஷாந்தி மேற்கொண்டுள்ளார்.

முதல் தடவையாக பாரியளவில் நடைபெறும் இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

# உடற் கல்வி பட்டதாரிகளுக்கான சந்திப்பு இன்று

(வலிகாமம்)

யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி விஞ்ஞான அலகினால் உடற்கல்வி பட்டம் பெற்று வெளியெறிய மாணவர்களுக்கான சந்திப்பு இன்று 25 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிக்கு அண்மையாகவுள்ள யூனிவேசல் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

உடற்கல்வி பயிற்சி நெறியை பூர்த்தி செய்து தொழில் புரிபவர்களும் தொழில் அற்று இருப்பவர்களையும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளும் படி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# முள்ளியவளையில் திருட்டு

(வலிகாமம்)

முல்லைத்தீவு பொலிஸ் பகுதிக்கு உட்பட்ட முள்ளியவளைப் பகுதியில் இருந்து சுமார் நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருட்டுப் போயுள்ளதாக முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையத்தில் முறைபிடப்பட்டுள்ளது.

கடந்த 17 ஆம் திகதி இந்தத் துணிகரமான திருட்டு இடம்பெற்றுள்ளது. இது சம்பந்தமாக முல்லைத்தீவுப் பொலிசார் விசாரணைகளை மேற்கொள்கின்ற போதிலும் இதுவரைக்கும் எந்தவோரு சந்தேக நபரும் கைது செய்யப்படவில்லை.

# காத்தான்குடியில் வாகன விபத்து: குடும்பஸ்தர் பலி

மட்டக்களப்பு - காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லடியில் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு சுமார் 8.30 அளவில் கல்லடி, சிவானந்தா தேசிய பாடசாலைக் முன்பாகவுள்ள வளைவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அம்பாறையில் இருந்து மட்டக்களப்பு நோக்கச் சென்ற விமானப் படையினரின் வாகனம் துவிச்சக்கர வண்டியில் இருந்து இறங்கி வீதியை கடக்க முனைந்தபோது பாதசாரி மீது மோதியதில் இவ்விபத்து நேர்ந்துள்ளது.

இந்த சம்பவத்தில் நொச்சிமுனையை சேர்ந்த குடும்பஸ்தரான பாலசிங்கம் ஜெகநாதன் என்பவரே உயிரிழந்ததாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் குறித்த வாகனத்தை செலுத்திவந்த விமானப் படையை சேர்ந்த கோப்ரல் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் வாகனமும் காத்தான்குடி பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் உயிரிழந்தவரின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பிலான விசாரணையை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பாதசாரிகள் சட்டத்தை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை

பாதசாரிகள் சட்டத்தை கடுமையாக அமுல்படுத்தப்போவதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

முதல் கட்டமாக இந்த நடவடிக்கை கொழும்பில் அமுல்படுத்தப்படவுள்ளதாகவும், இச் சட்டத்தை மீறுவோர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் வீதியைக் கடப்பதற்கு பாதசாரிகள் கடவைகள், சுரங்கப்பாதைகள் மேம்பாலங்கள் ஆகியவற்றை பயன்படுத்தாத பொதுமக்கள் இன்றிலிருந்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார்களெனவும் பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

## இன்றைய இராசி பலன் (25.07.2012)

**நந்தன வருடம் ஆடித் திங்கள் 10ஆம் நாள் புதன்கிழமை**

**நட்சத்திரம்:** அத்தம் முற்பகல் 10.21 வரை அதன்பின் சித்திரை

**திதி:** ஸப்தமி பின்னிரவு 2.36 வரை அதன்பின் அட்டமி

**சுபநேரம்:** 4.32 - 6.02 இராகுகாலம்: 12.02 - 1.32

**மேடம்:** பணப் பிரச்சனை, வீண் யோசனை, சிரமத்தின் மேற். பலன்

**இடபம்:** எதிர்பாராத வரவு, புதியன பெறுதல், புத்திரசுகம்

**மிதுனம்:** தேகசுகம் பாதிப்பு, குடும்ப மனஸ்தாபம், வாகன சுகக் குறைவு

**கடகம்:** தொழில் முன்னேற்றம், குடும்பசுகம், வாக்குச் சித்தி

**சிங்கம்:** பணவரவு, நற்சிந்தனை, சுபகாரியச் செலவு

**கன்னி:** வீண் பயம், உடல் நலக்குறைவு, துயரச் செய்தி

**துலாம்:** பொருள் இழப்பு, மன விரத்தி, வாகன நஷ்டம்

**விருச்சிகம்:** மனமகிழ்ச்சி, பெரியோர் மதிப்பு, நற்சேர்க்கை

**தனுசு:** உயர்வு, அதிகாரம், வேலையாட்களால் நன்மை

**மகரம்:** காரிய சித்தி, வியாபார விருத்தி, தெய்வ சிந்தனை

**கும்பம்:** வயிற்று ரோகம், வீண் முயற்சி, முன்கோபம்

**மீனம்:** புதியன கிடைத்தல், கல்வி முன்னேற்றம், நண்பர்களால் தொல்லை.

- ஜோதிடர் பால. இரத்தினசேகர்

# 159 புகலிடக் கோரிக்கையாளர்களுடன் மேலும் இரு படகுகள் அவுஸ்திரேலியாவில்

இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் உள்ளிட்ட பலரை ஏற்றிய இரு படகுகள் நேற்று முன்தினம் (23) அவுஸ்திரேலியாவைச் சென்றடைந்துள்ளன.

அவுஸ்திரேலிய கிறிஸ்மஸ் தீவுக்குச் சென்ற படகில் 123 பேரும் கோகோஸ் தீவுக்குச் சென்ற படகில் 36 இலங்கையர்களும் இருந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜுலை மாதத்தின் முதல் மூன்று வாரங்களில் மாத்திரம் சட்டவிரோத படகுகளில் சென்று புகலிடம் கோரி அவுஸ்திரேலியாவுக்குள் 1273 பேர் நுழைந்துள்ளனர் என அவுஸ்ரேலியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, அகதிகளை நாட்டின் அகதி முகாம்களுக்கு அனுமதிக்க செல்ல 10 நாட்களில் மாத்திரம் அவுஸ்திரேலிய அரசாங்கம் டொலர் 500,000 பணத்தை செலவிட்டுள்ளது.

மேலும் இவ்வருடத்தில் இது வரையான காலப்பகுதியில் 5100 அகதிகள் கிறிஸ்மஸ் தீவைச் சென்றடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை உட்பட பல்வேறு நாடுகளில் இருந்தும் புகலிடக் கோரிக்கையாளர்கள் அவுஸ்திரேலியாவை நோக்கி படையெடுத்த வண்ணம் உள்ளனர்.

முக்கியமாக கடல்மார்க்கமாக நாட்டுக்குள் நுழைவோரைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் அவுஸ்திரேலிய அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ள போதும் அதனை முற்றும் முழுதாகக் கட்டுப்படுத்துவதில் அது தோல்வி கண்டுள்ளது.

குறிப்பாக இந்தோனேஷியா, சிங்கப்பூர், தாய்லாந்து, இலங்கை உள்ளிட்ட நாடுகள் ஊடாக புகலிடக் கோரிக்கையாளர்கள் மீன்பிடிப் படகுகளிலும், ரோலர்களிலும் அவுஸ்ரேலியாவை நோக்கிப் படையெடுப்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கைப் பொலிஸ் திணைக்களம்

## பொலிஸ் கொஸ்தாபல் சாரதிப் பதவி - விசேட அதிரடிப்படை

## இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி விசேட அதிரடிப்படை பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் பொருட்டு இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் **"பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுனர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06"** என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2012.08.30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். தாமதித்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

**3. சம்பள அளவுத்திட்டம்.-**

ரூபா 1,71,360 - 7 x 1,740 - 27 x 2,160 - ரூபா 2,41,860.

மேலும் அரச உத்தியோகத்தர்களுக்கான வாழ்க்கைச் செலவு கொடுப்பனவுக்கும் அத்துடன் 2011.12.12 ஆந் திகதிய 31ஃ 11 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றுநிருபத்துக்கு அமைவான கொடுப்பனவுகளுக்கும் உரித்துடையவராவர். மேற்கூறப்பட்ட சம்பள அளவுத் திட்டத்திற்கு மேலதிகமாக கீழ்க்காணும் கொடுப்பனவுகள் மாதம் தோறும் வழங்கப்படும் :-

**(அ) விசேட கடினக் கொடுப்பனவுகள் :**

(1) வடக்கு/ கிழக்கு பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா1,200.

(2) ஏனைய பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 600.

**(ஆ)** இணைந்த கொடுப்பனவுகள் :

(1) வடக்கு/ கிழக்கு பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 10,500.

(2) ஏனைய பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா5,600.

**(அ)** இலவச போக்குவரத்து வசதிகள் .

**(ஆ)** உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளிநாடுகளிலும் வைத்திய வசதிகள் பொருட்டும் நிதி உதவிகள் வழங்கப்படும்).

**(இ)** சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ஞ

**(ஈ)** விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்ள உதவிகள் வழங்கப்படும.

**(உ)**கடமைகளுக்கான பிரயாணச் செலவுகள் கஷ்டப் பிரதேசங்களில்சேவையாற்றுவதற்காகவும் அத்துடன் திறமையான-கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும்.

**(ஊ)** விசேட அதிரடிப்படையின் ஆரம்ப பயிற்சியின்பின் விசேட அதிரடிப்படையில் சேவை செய்யும் காலத்தில் மட்டும் விசேட அதிரடிப்படைக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**4. தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

**(அ)** வயதெல்லை.- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 19-26 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். எனினும் பொலிஸ் திணைக்களத்தில் சேவை செய்யும் பாதுகாப்புஉதவி உத்தியோகத்தர்கள் (SA) விண்ணப்பங்களினை ஒப்படைக்கும்.

கடைசித் திகதி அன்று 30 வயதிற்கு உட்பட்டவராக இருந்தால்அவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

**(ஆ) கல்வித் தகைமைகள்.**- க.பொ. த. (சா.தர) பரீட்சையில் கணிதம் மற்றும் ஊடக மொழி உட்பட இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு தடவைகள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகள் முதலாவது தடவையிலே 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1.**- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும் போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42 மற்றும் 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும்.

**குறிப்பு 2.**- க.பொ. த. (சா.தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்பப் பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராகக் கருதப்படும்.

**குறிப்பு 3.**- விருப்பத்திற்குரிய தமிழ்/ ஆங்கிலம்/ சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ.த.(சா.தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாகக் கருதப்படமாட்டாது.

பின்வரும் தகைமைகளை உடைய பொலிஸ் சாரதி விண்ணப்பதாரி சம்பந்தமாக அதிகபட்ச கவனத்திற் கொள்ளப்படும்.- அரச அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தாபனத்தின் முழுமையான 3 வருட பூரணமான தொழில்நுட்ப பாடநெறி கற்கையை முடித்ததுடன் இத்துறையில் 3 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

**(இ) உடல் தகுதி தேவைப்பாடுகள் :**

உயரம் : 5 அடி 3 அங்குலம் (ஆகக் குறைந்தது)

மார்பு : 30 அங்குலம் ஆகக் குறைந்தது

(வெளிச் சுவாசத்தின் பொழுது)

**குறிப்பு.**- சிறந்த விளையாட்டுத் திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் உடல் தகுதித் தேவைப்பாடுகள் குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் ஆலோசனையின்படி தகைமைபெறுவர்.

**(ஈ) தொழில் தகைமைகள் :**

(i) இலகுரக வாகனங்களை அல்லது கனரக வாகனங்களை ஓட்டும் திறமை இருப்பதற்கான சான்றிதழ் இருத்தல்.

**(ii)** மேற்குறிப்பிட்ட சான்றிதழைப் பெற்றபின் ஆகக் குறைந்தது ஒரு வருடத்திற்கு மோட்டார் வாகனம் செலுத்திய அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**- வாகனம் சம்பந்தமாக தொழில்நுட்ப அறிவு (பொறிமுறை) வாகனம் திருத்திய அனுபவம் அத்துடன் நீண்டகாலமாக வாகனம் செலுத்திய அனுபவம் இருந்தால் அவ்விண்ணப்பதாரருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

* வாகனத்தை திறமையுடன் செலுத்துவதற்கு தேவைப்படும் உடல் அவயவங்களில் இயக்கத்திற்கு தடையாக இருக்கும் ஏதாவது அங்கவீன அல்லது பிற உடல் குறைபாடுகளை உடைய விண்ணப்பதாரர் சேவைக்கு பொருத்தமானவர் எனும் வைத்தியசாலை சான்றிதழ் பெற்றிருப்பினும் தகைமை நீக்கப்படுவர்.

*அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட விண் ணப்பதாரர் வாகனம் செலுத்துவது, பராமரிப்பு தொடர்பில் பரீட்சிக்கப்படுவர். அதுபோலவே வீதிகள், போக்குவரத்து சைகைகள் தொடர்பாக விண்ணப்பதாரர் பெற்றுள்ள' அறிவு ஒவ்வொரு வேட்பாளரும் வாகனம் செலுத்துவதற்கு திறமை பெற்றுள்ள வாகனங்களும் இயந்திர தொழில் நுட்பம் தொடர்பான அடிப்படை அறிவு ஆகியனவும் பரீட்சிக்கப்படும்.

**(உ) பார்வை தொடர்பான தேவைப்பாடு :**

ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12க்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்றைய கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக் கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவார்.

**(ஊ) பிற தகைமைகள்.**- விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள், விவா-கமானவர்களாகக் கருதப்படுவர்.) மற்றைய தகைமைகளை உடைய ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் பணிபுரியும் பொலிஸ் பாதுகாப்பு உதவியாளர் களுக்கு இது ஏற்புடையதாகாது.

**5. ஆட்சேர்ப்பு முறை.**- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் ஆரம்ப தகைமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்தகுதிகாண் பரீட்சையில் பங்குபற்றலாம் அதாவது மனோவலிமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும் :-

மீற்றர் 1000 - 03 நிமிடங்கள் 44 விநாடிகள்.

இப்பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40.அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் தொழில்சார் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**6. தொழில்சார் தகைமைகள் :**

**6.1** தொழில்சார் பரீட்சை இலங்கை பொலிஸ் கல்லூரியின் மேற்பார் வையின்கீழ் பொலிஸ் சாரதி பாடசாலையில் நடாத்தப்படும்.

**6.2** தொழில்சார் பரீட்சைக்கு 100 புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளது.

**தொழில்சார் பரீட்சை பின்வருமாறு நடாத்தப்படும் :**

**(அ)** வாகனம் செலுத்தும் தகுதி - 50 புள்ளிகள்

**(ஆ)** வீதிச்சட்ட விதிகள் - 25 புள்ளிகள்

**(இ)** வாகனப் பராமரிப்பு சிறிய திருத்த வேலைகள்தொடர்பான அறிவு - 25 புள்ளிகள்.

**6.3 தொழில்சார் பரீட்சை.**- வாகனம் செலுத்தும் தகுதிப் பரீட்சைக்கு ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 50 புள்ளிகளில் ஆகக் குறைந்தது 25 புள்ளிகளும் வீதிச்சட்ட விதி கள் புத்தகம் தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 25 புள்ளிக-ளில் ஆகக் குறைந்தது 12.5 புள்ளிகளும், வாகனப் பராமரிப்பும் சிறிய திருத்த வேலைகள் தொடர்பான அறிவுக் கென்று ஒதுக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய 25 புள்ளிகளில் ஆகக்குறைந்தது 12.5 புள்ளிகளாவது பெற்று முழுப்புள்ளிகள் 100 இல் ஆகக் குறைந்தது 50 புள்ளிகளாவது பெறும் விண்ணப்பதாரிகள் தொழில்சார் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாக கருதப்படுவர். தொழில்சார் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

**குறிப்பு.**- ஆட்சேர்க்கப்பட்ட பொலிஸ் கொஸ்தாபல் சாரதி தகுதிகாண் காலப்பகுதிக்குள் கனரக வாகனங்களை ஓட்டுவதற்கான தகைமையைப் பெற பொலிஸ் கல்லூரியில் நடைபெறும் கனரக வாகன ஓட்டும் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

**7. வைத்திய பரிசோதனை.**- முன்னுரிமைப் பட்டியல் மற்றும் திறமை ஒழுங்கிற்கு அமைவாக தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தமது நியமனத்திற்கு முன்னர் வைத்தியப் பரிசோதனைக்கு தோற்ற வேண்டும்.

பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

**8. பின்னணி விசாரணைகள்.-**

**(அ)** விண்ணப்பதாரரின் நன்னடத்தையை உறுதிப்படுத்த அவரின், அவரின் நெருங்கிய உறவினர்கள், மற்றும் நண்பர்களின் நன்னடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். துர்நடத்தையுள்ள விண்ணப்ப தாரர்கள் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள்.

**(ஆ)** விண்ணப்பதாரி பொய்யான தகவல்கள் வழங்குவது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின்னர் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவர்.

**9.** அரசகரும மொழி தேர்ச்சிக் கொள்கையை அமுல்படுத்தல். பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 07/2007 என்ற இலக்கமும் 2007.04.28 ஆம் திகதியசுற்று நிருபத்தின் பிரகாரம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்து அரச சேவைக்கு/ மாகாண அரச சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களுக்கு தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழியிலும் சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சி பெறல் வேண்டும்.

2007.07.01 ஆம் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்பட்ட அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தில் மேற்கொள்ளப்படும் இரண்டாம் மட்ட பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

ளநியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கருமமொழியில் சித்தியடையாதவர்களின் சம்பள ஏற்றம் குறித்த மொழியில் தேர்ச்சியடையும் வரை நிறுத்திவைக்கப்படும்.

**10. பதவியிலமர்த்தும் நியதிகள்.**- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். நீங்கள் விதவைகள்/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு அங்கத்துவப்பணம் செலுத்துதல் வேண்டும்.

**11. சேவை நிபந்தனைகள்.- (அ)** நியமனம் 3 ஆண்டு கால தகுதிகாண் அடிப்படையில் இருக்கும்.

**(ஆ)** தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரச கரும மொழிக் கொள்கைக்கு இணங்க ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக் கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

**(இ)** அவர்கள் தாபனக் கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள், நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவராவார்.

**(ஈ)** பதவி நிரந்தரமாவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தர்களும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்.

**(உ)** பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் நிரந்தரமாக்கும்வரை திருமணம் செய்ய முடியாது. எனினும் 1973.02.28 ஆம் திகதிய 41 ஆம் இலக்கம் கொண்ட பொலிஸ் வர்த்தமானியின் பகுதி II இன் பிரகாரமும் மற்றும் 1952/ 2006 என்ற இலக்கமும் 2006.10.19 ஆம் திகதிய 2007.08.09 (திருத்தப்பட்டது) ஆம் திகதியுடைய பொலிஸ்மா அதிபரின் சுற்று நிருபத்தின் பிரகாரம் திருமணம் செய்வதற்கான விசேட காரணங்களை தெரிவித்து பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரத்துடன் திருமணம் செய்ய முடியும்.

**(ஊ)** தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட தகுதிகாண் கால நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் தகுதிகாண் சேவைக் காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் காலம் வரை அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகள் தொடர்பில் ஏற்பட்ட செலவினங்களைச் செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்ப மிடல் வேண்டும். அப்பெறுமதி இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகலை ஏற்றுக்கொள்வதானது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியின் ஏ ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

**(எ)** ஆட்சேர்க்கப்படும் பயிலுனர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதிகள் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியினை ஆரம்பித்தவுடன் உடனடியாக 1693/ 2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்திற்கு இணங்க பொலிஸ் ஒழுக்காற்றுக் கோவையினை பின்பற்றுவதாக பிரமாணம் செய்தல் வேண்டும்.

**(ஏ)** ஆட்சேர்க்கப்படும் பயிலுனர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதிகள் பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் உடனடியாக பொலிஸ்

மா அதிபரின் 1804/ 2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/ சத்தியம் செய்தல் வேண்டும்.

**(ஒ)** ஆட்சேர்க்கப்படும் பயிலுனர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதிகள் பதவி நிரந்தரமான பின்னர் பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப் பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடைய வராவார்.

**12. (அ)** இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (m) வில் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

**ஆ)** 1990.03.10 ஆம் திகதிய 15/ 90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

**13.** விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். (மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

**(அ)** பிறப்புச் சான்றிதழ்.

**(ஆ)** அண்மையில் பெறப்பட்ட குணநலச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது) .

**(இ)** கல்வித் தகைமைச் சான்றிதழ்கள்.

**(ஈ)** விசேட சாதனையுடன் விளையாட்டுத்துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்துக்கு புறம்பாக பெற்ற சான்றிதழ்கள்.

**(உ)** சேவையில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின்).

**(ஊ)** தேசிய அடையாள அட்டையின் நிழற்பிரதி.

(எ) சாரதி அனுமதிப்பத்திரத்தின் நிழற்பிரதி.

**14. (அ)** தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

**(ஆ)** விண்ணப்பதாரர் 11" x 8" அளவில் தயாரிக்கப்பட்ட விண்ணப் பப்படிவத்தை தமது சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தி சான்றிதழ்களின் பிரதிகளுடன் இரண்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். எக்[illegible]ரணம் கொண்டும் இத்திணைக்களத்தின் எந்த உத்தியோகத்[illegible]களிடமும் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்தலாகாது.

**15.**இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணபபங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படமாட்டாது.

குறிப்பு.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

பொலிஸ் மா அதிபர். பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01.

### மாதிரி விண்ணப்பப்படிவம்

இலங்கை பொலிஸ் திணைக்களம்

பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவி - விசேட அதிரடிப்படை

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :......................................

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :......................................

(இ) விண்ணப்பிக்கும் பதவி :......................................

2. தேசிய அடையாள அட்டை இல. :......................................

(தேசிய அடையாள அட்டையின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

3. தந்தையின் முழுப் பெயர் :......................................

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :......................................

பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் -

மாகாணம் :......................................

5. (அ) தற்போதைய முகவரி :......................................

(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----

(இ) நிரந்தர முகவரி :-----.

(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(உ) நிரந்தர முகவரிக்குரிய தேர்தல் மாவட்டம் :-----.

(ஊ) நிரந்தர முகவரிக்குரிய பிரதேச செயலாளர் பிரிவு :-----.

கிராமசேவையாளர் பிரிவு :-----.

(எ) தொலைபேசி இலக்கம் வதிவிடம் :......................................

கையடக்க தொலைபேசி

இல. :......................................

6. (அ) தேசிய இனம் :......................................

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரஜையா ? அல்லது பதிவு மூலம்

இலங்கைப் பிரஜையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழ்

பிரதியை இணைக்கவும்) :......................................

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரஜையானால் பின்வருபவர்களின்

பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :......................................

(2) விண்ணப்பதாரரின் தந்தை :......................................

(3) விண்ணப்பதாரின்தந்தை வழி பாட்டன் :......................................

(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் :......................................

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :......................................

(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :..............., மாதங்கள் :..............., நாட்கள் :...........

8. உயரம் : அடி :......................, அங்குலம் :......................

மார்பு : அங்குலம் :............................

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :..........................

10. (அ) சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் :..........................

(ஆ) சாரதி அனுமதிப்பத்திரம் பெற்ற திகதி :..........................

(இ) திறமைபெற்ற வாகனங்களின் வகுப்புகள் :..........................

(சாரதி அனுமதிப்பத்திரத்தின் நிழற்பிரதியை இணைக்கவும்.)

11. மேலதிகத் தகைமைகள் உண்டா ? (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

12. திருமணம் ஆனவரா/ திருமணம் ஆகாதவரா ? :...............

13. (அ) தற்போது செய்யும் தொழில் :..........................

(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? :..........

14. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/ தகைமைகள் உண்டா ? :......................................

15. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர் முகவரிகளைக் குறிப்பிடுக :-

(அ) ......................................

(ஆ) ......................................

(7 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா சிங்களக் கிராமத்தில் 3 துஷ்பிரயோக சம்பவங்கள்: இராணுவத்திலிருந்து விலகியோரே இதில் சம்பந்தம்

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் படையினரால் பெண்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக சில ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன என்று வெளிநாட்டு தூதுவர் ஒருவர் என்னிடம் கேட்டார். அந்தத் தகவல்களின் அடிப்படையில் தகவல்களைத் திரட்டினேன். பொலிஸாரின் தகவல்களின் அடிப்படையில் அல்ல, நலன்புரி நிலையங்களிலிருந்து கிடைத்த தகவல்களின் அடிப்படையில் அது உண்மைக்கு புறம்பானது என்பது தெரியவந்துள்ளது. வவுனியாவில் மூன்று துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அதுவும் சிங்களக் கிராமத்தில்.

இராணுவத்திலிருந்து விலகிச் சென்றவர்களே இந்தத் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டவர்களாவர் என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபயா ராஜபக்ச தெரிவித்தார்.

கொழும்பு, நாரஹென்பிட்டியவிலுள்ள தேசிய அபிவிருத்திக்கான ஊடக நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கோதபயா ராஜபக்ஷ தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகயில்:

ஆய்வுகளின்படி நான்கு விடயங்களின் அடிப்படையில் வடக்கு, கிழக்கில் துஷ்பிரயோகச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

உறவினர்கள், அண்டை வீட்டார்கள், தெரிந்தவர்கள் இவற்றில் அடங்குவர். தந்தை, மாமா, சகோதரர், மைத்துனர், நண்பர்கள், வளர்ப்புத்தந்தை ஆகியோரினாலேயே இந்தத் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளன. இந்தக் கணிப்பீட்டின் இறுதியான தகவல்களின் அடிப்படையில் பாதுகாவலர்கள் என்று பொறுப்பு சாட்டப்பட்டவர்களினாலேயே இந்தத் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றை அடிப்படையற்ற நிலையில் ஊடகங்கள் பாதுகாப்பு படையினர் மீது சுமத்துகின்றன என்றார்.

குற்றச் செயல்கள் தொடர்பிலும், அதனை கட்டுப் படுத்தும் விடயத்திலும் அரசாங்கமும், பொலிஸாரும் பொறுப்பு கூற வேண்டும். ஆனால் அது எல்லா விடயத்திலும் முடியாத ஒரு விடயமாகும்.

கொலை, கொள்ளை, பாதாள உலகம், போதைப் பொருள் பாவனை போன்ற விடயங்களில் பொலிஸார் செயற்பட முடியும். துஷ்பிரயோக விடயத்தில் நூறு சத வீதம் பொலிஸாரினாலோ, பாதுகாப்புப் படையினராலோ தடுக்க முடியாது. பெற்றோர்கள், சமயத் தலைவர்கள், கிராமியத் தலைவர்களும் ஒத்துழைக்க வேண்டியதுடன், பொறுப்பும் கூற வேண்டும்.

எந்த ஒரு குற்றவாளிக்கும் அரசாங்கம் பாதுகாப்பு வழங்காது. குற்றம் இழைப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும். பயங்கரவாதம் ஒழிக்கப்பட்ட பின்னர் வடக்கு, கிழக்கிலிருந்து ஆயுதக் குழுக்கள் நிராயுதபாணிகளாக்கப்பட்டுள்ளன. பலவந்த குடியேற்றம் தொடர்பில் ஏராளமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.

அவைகளில் பெரும்பாலானவற்றுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. அதேபோன்று பாதாள உலக கோஷ்டிகளின் செயற்பாடுகளை முறியடிக்க அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

சட்டத்திலுள்ள சில குறைப்பாடுகளினால் குற் றம் செய்யக்கூடியவர்கள் மீண் டும் மீண்டும் தவறுகளை, குற்றச் செயல்களை செய்ய முற்படுகின றனர் என்றனர் என்றும் கூறினர்.



5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் சாதனை நிகழ்த்தி யப்பானில் நடைபெறும் 24ஆவது தெற்காசிய பசுபிக் சிறுவர்கள் மாகாநாட்டில் கலந்து கொள்ளச் செல்லும் சிறுவர்களுக்கு ஆசி வழங்கிய கல்வியமைச்சர் பந்துல குணவர்தன, மாணவர்களுடனும் கல்வி உயரதிகாரிகளுடனும் காணப்படுகிறார். (பருத்தித்துறை நிருபர்)

## சுதேச மருத்துவ கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ்கள்

கிளிநொச்சி, தீவகம்

பஞ்சகர்மா எனப்படும் சுதேச மருத்துவம் சார்ந்த கற்கை நெறியை பூர்த்தி செய்தோருக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் மிகவும் சிறப்புற இடம்பெற்றது. யாழ்.மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையில் நேற்று முன்தினம் 23 ஆம் திகதி மாலை இடம்பெற்ற இந்நிகவுக்கு வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தை சேர்ந்த டாக்டர் காண்டீபன் தலைமை தாங்கினார். பிரதம விருந்தினராக வட மாகாண சுதேச மருத்துவ திணைக் கள பணிப்பாளர் டாக்டர் திருமதி சியாம கலந்துகொண்டு பயிற்சி நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றுப் பத்திரங்களை வழங்கிச் சிறப்பித்தார்.

கிளிநொச்சி மாவட்ட ஆயுர்வேத பாதுகாப்புச் சபை தலைலர் டாக்டர் கே.வி.கே.திருலோகமூர்த்தி, மன்னார் மாவட்ட ஆயுள்வேத பாதுகாப்புச்சபை தலைவர் டாக்டர் எஸ்.செல்வ மகேந்திரன், வட இலங்கை சுதேச வைத்திய சாலை தலைவர் பேராசிரியர் ஜெ. ஜெயலன், டாக்டர்கள் கணேஸ் சிறீதரன், ராகவன், ரமணன், சபேசன் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

## பருத்துறைமுகப் பகுதி மக்கள் மீள்குடியேற்றம் இராணுவத்திடம் அறிக்கை

### - கோருகிறது பாதுகாப்பமைச்சு

பருத்தித்துறை

பருத்தித்துறை துறைமுகப் பிரதேசத்தில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக உடன் விரிவான அறிக்கை சமர்ப்பிக்குமாறு பாதுகாப்பு அமைச்சு இராணுவத் தலைமையகத்தைக் கேட்டுள்ளது. பருத்தித்துறை துறைமுகப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் இது சம்பந்தமாக விடுத்த வேண்டுகோளையடுத்தே பாதுகாப்பு அமைச்சு இராணுவ உயர் பீடத்திடம் இவ்வறிக் கையைச் சமர்ப்பிக்குமாறு கேட்டிருக்கின்றது.

யுத்த அனர்த்தங்களினால் 1996ஆம் ஆண்டு தொடக்கம் இத்துறைமுகப் பிரதேச மக்கள் உயர் பாதுகாப்பு வலயம் பிரகடனப் படுத்தினால் தங்கள் சொந்த வீடு களை விட்டு வெளியேற வேண்டி ய நிர்ப்பந்தத்தினால் அவ்வீடுகளை விட்டு வெளியேறி உறவினர்கள் வீடுகளிலும் நண்பர்கள் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

தற்போது அமைதியும், சமாதானமும் நிலவுவதனாலும் ஏனைய இடங்களில் யுத்த அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்த மக்கள் அரசாங்கத்தினால் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு, அவர்களுக்கு அரச உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றது. அதுபோல தம்மையும் தமது சொந்த வீடுகளிலும் மீள் குடியேற்ற நடவடிக்கை எடுத்து தமக்கு விமோசனம் வழங்க வேண்டுமென இப் பிரதேச மக்கள் ஜனாதிபதியும், பாதுகாப்பு அமைச்சருமான மகிந்த ராஜபக்ஷவிடம் கோரியிருந்தனர்.

இப்பிரதேசத்தைச் சேர்ந்த முப்பது குடும்பத்தினர் கையெழுத்திட்டு மகஜர் மூலம் இந்தக் கோரிக்கையை விடுத்திருந்தனர்.

## உயர்நீதிமன்ற அவமதிப்பு வழக்கு

காரணம் காட்டப் பேராசிரியருக்கு செப். 12 வரை கால அவகாசம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்கா மீது உயர்நீதிமன்றத்தை அவமதித்தமைக்காக ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாதென்பதற்கு காரணம் காட்டுமாறு எதிர்வரும் செப்டம்பர் 9ஆம் திகதி வரை நீதிமன்றத்தினால் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

ஜூன் மாதம் 25ஆம் திகதி உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அனுசரித்து நடக்காமல் தாமதம் காட்டியமைக்காகவே பேராசிரியர் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாதென்று உயர்நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை பழைய பாடத்திட்டம், புதிய பாடத் திட்டம் என்று வெவ்வேறாகக் கணித்து மீள் மதிப்பீடு செய்து, இசற் புள்ளிகளை வெவ்வேறாகத் தாமதமின்றி வழங்குமாறு ஜூன் மாதம் 25ஆம் திகதி நீதிமன்றம் அறிவுறுத்தியிருந்தது.

நீதிமன்ற உத்தரவை அமுல்படுத்தாமல் அதனை அதிகாரிகள் தாமதப்படுத்துகின்றனரெனக் குற்றம் சாட்டி மாணவர் குழுவொன்று ஜூலை 13ஆம் திகதி உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றினைத் தாக்கல் செய்தது.

அழைப்பாணைக்கு இணங்க பேராசிரியர் காமினி சமரநாயக்கா கடந்த திங்களன்று நீதிமன்றில் ஆஜராகியிருந்தார். பழைய பாடத்திட்டம் மற்றும் புதிய பாடத்திட்டம் என்று புறிம்பு புறம்பாக இசற் புள்ளி மதிப்பீடு செய்யப்பட்டதென்பதைக் காட்டுவதற்குத், தனது கட்சிக்காரருக்குப் போதிய காரணங்கள் உண்டெனப் பேராசிரியர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா நீதிமன்றில் தெரிவித்தார்.

அதன் பின்னர் விளக்கமளிப்பதற்குப் பேராசிரியர் சமரநாயக்காவுக்கு செப்டம்பர் 12ஆம் திகதி வரை காலஅவகாசம் வழங்கப்பட்டது.

## வெள்ள அணைக்கட்டு அவசியம்

உடுவில்

அரியாலை சிந்து பார்த்தி இந்து மயான வெள்ள அணைக்கட் டினை புனரமைத்துத் தருமாறு இந்து மயான அபிவிருத்திச் சபையினால் நல்லூர் பிரதேச சபையிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

மழை வெள்ளத்தினால் இந்த மயானத்திற்கு ஏற்படும் பாதிப்புக்களைத் தடுக்கும் முகமாகவே இவ் வெள்ள அணைக்கட்டினை அமைக்குமாறு கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றது.

## சுற்கரை கற்பக விநாயகர் மஹோற்சவம்

உடுவில்

குப்பிளான் சுற்கறை கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

மஹோற்சவத்தில் தொடர்ந்து 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குத் தேர்த்திரு விழாவும் மறுநாள் முதலாம் திகதி புதன் கிழமை நண்பகல் 11 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.



புலோலி ப.நோ.கூ.சங்க சாதனை மாணவர் கௌரவிப்பு விழாவில் சங்க நிர்வாகசபைத் தலைவர் இரா. பூரணசந்திரன் சாதனை மாணவரொருவருக்குப் பரிசில் வழங்குகிறார். (பருத்தித்துறை நிருபர்)

## பெற்றோரைக் கொன்ற மகன் பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரியில்!

தனது தந்தையையும், தாயையும் கொலை செய்த மகன் நேற்று முன்தினம் பலத்த காயங்களுடன் எம்பிலிப்பிட்டிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளாரென்று கட்டுவான பொலிசார் தெரிவித்தனர்.

அம்பலாங்கொடை மாவட்டத்திலுள்ள கட்டுவான பகுதியைச் சேர்ந்த உடகோமடியா என்ற கிராமத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இந்த இரட்டைக் கொலைகளும் இடம்பெற்றன. இந்திக என்ற மூத்த மகனே படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கே.கே.ஜினதாச என்ற அறுபது வயதுத் தந்தையும், ஏ.சோமவதி என்ற 52 வயதுத் தாயுமே கொல்லப்பட்டவர்களாவர். இவர்களின் ஏனைய இரண்டு புதல்வர்களும் வரக்காபொலையில் வாழ்பவர்களாவர். இருவரும் கடந்த ஞாயிற்றுக்கிழமை பெற்றோரைப் பார்ப்பதற்குக் கட்டுவான வீட்டுக்கு வந்திருந்தனராம்.

காணித் தகராறே படுகொலைக்குக் காரணமென்று சந்தேகிக்கப்படுகிறது.

## காவத்தைப் படுகொலை

# தாய்க்கு 7, மகளுக்கு 13 கத்திக்குத்துக் காயங்கள்

காவத்தை, கொட்டகேதன என்ற இடத்தில் கடந்த 19ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட தாயினதும், மகளினதும் முகங்களில் பலத்த வெட்டுக் காயங்கள் காணப்பட்டன என்று பொலிசார் தெரிவித்தனர். 63 வயதான பிரேமாவதி என்ற தாயும், 32 வயதான புஷ்பகுமாரி என்ற மகளுமே படுகொலை செய்யப்பட்டவர்களாவர்.

தாயின் முகத்தில் ஏழு கத்திக் குத்துக் காயங்களும், மகளின் முகத்தில் 13 கத்திக்குத்துக் காயங்களும் காணப்பட்டனவாம். கொலை நடந்த தினத்தன்று இரவு நெருங்கிய உறவினரொருவர் குறித்த வீட்டுக்கு விஜயம் செய்திருந்தாராம்.

வேறொரு அறையில் வைத்து இவர்களைக் கொலை செய்த பின்னர், படுக்கை விரிப்புகளால் சடலங்களைப் போர்த்தி, இன்னொரு அறைக்குள் இழுத்து வந்து வீட்டோடு சேர்த்து எரியூட்டப்பட்டதாகப் பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

கொலையுண்டவர்களின் சடலங்கள் கடந்த சனிக்கிழமை நல்லடக்கம் செய்யப்பட்டன.

விசேட அதிரடிப் படையினரின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இறுதிக் கிரியைகள் இடம்பெற்றன.

தமிழ்நாதம்
Thamil Naatham
ஜுலை மாதம் 25ஆம் திகதி புதன்கிழமை

## 1983 ஜுலை 25 - வெலிக்கடைச் சிறைப் படுகொலையின் முதல் அரங்கேற்றம்

1983 ஆம் ஆண்டு ஜுலை இனசங்காரத்தின் கொடுமுடியாக ஒரு கொடூரம் வெலிக்கடைச் சிறைச்சாலையில் அங்கேறியது. இந்த இனசங்காரத்துக்குப் பிள்ளையார் சுழி போட்ட தாக்குதல், ஜுலை 23ஆம் திகதி திருநெல்வேலி, தபால்கட்டையடிச் சந்தியில் நிகழ்ந்தது. பிரபாகரன், செல்லக்கிளி உட்படப் பதுங்கியிருந்த ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் பதின்மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்கள் அனைவருமே இராணுவத்தினர் மட்டுமல்ல, சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்களுமாவர். தாக்குதல் நடத்தியவர்கள் தமிழர்கள்.

நாடு பிரிவினைக்கான அல்லது தமிழீழத்துக்கான போராட்டம் ஆயுத வடிவமெடுத்த ஆரம்ப காலங்கள் அவை. அஹிம்சை வழியில் தமிழீழம் அமைப்போம் என்று அரசியல் தேவைகளுக்காக சூளுரைத்தவர்களில் பலர், நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு ஒதுங்கத் தொடங்கிய காலமும் அது. ஒதுங்காமலே சிலர் அரசியல் மேடைகளில் வீர முழக்கமும் செய்த காலமும் அதுதான். தனி நாடு சாத்தியப்படாது என்று நன்கு தெரிந்திருந்தாலும் கூடத் தமது அரசியல் இருப்புகளுக்காக அஹிம்சை பற்றியும் பேசினார்கள். ஆயுதம் தாங்கிய இளைஞர்களையும் தட்டிக் கொடுத்தார்கள். அஹிம்சையும், ஆயுதமும் ஒரே நேர்கோட்டில் சந்திக்கவில்லை. சந்திக்கவும் மாட்டாது. விளைவு அமிர் போன்ற தலைவர்கள் பின்னாட்களில் கொல்லப்பட்டார்கள்.

வெலிக்கடைச் சிறைச்சாலைப் படுகொலைகள் இலங்கை வரலாற்றையே கறைப்படுத்திய ஒரு சம்பவம். ஜுலை 25 ஆம் திகதியும், 27ஆம் திகதியும் இரண்டு தடவைகள் சிறைச்சாலைத் தமிழ்க் கைதிகள் தாக்கப்பட்டார்கள். ஜுலை மாதம் 25 ஆம் திகதி 35 தமிழ்க் கைதிகளும், 27ஆம் திகதி 18 தமிழ்க் கைதிகளும் கொலை செய்யப்பட்டார்கள். வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 72 தமிழ்க் கைதிகளில் 53 பேர் கொல்லப்பட்டனர். கொட்டன் பொல்லுகள், தடிகள், வாள்கள் ஆகியன சகிதம் சிங்கள சிறைக் கைதிகளே தாக்கினார்கள். தமிழ்க் கைதிகளே தாக்கப்பட்டார்கள்.

83 ஜுலை இனசங்காரத்துக்கு அன்றைய ஜே.ஆரின் அரசு ஆதரவும், அனுசரணையும் வழங்கியது போல, வெலிக்கடைச் சிறைச்சங்காரத்துக்கு சிறைக்காவலர் சிலர் ஒப்புதலும், உசுப்புதலும் வழங்கினர். கொல்லப்பட்டவர்களில் 23 பேர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள். பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களும் இருந்தார்கள். நீர்வேலி வங்கிக் கொள்ளைக்காக தண்டனை விதிக்கப்பட்ட குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் போன்றோரும் இறுதி மூச்சை சிறைக்குள்ளேயே விட்டார்கள். செத்துப்போன குட்டிமணியின் கண்களைத் தோண்டியெடுக்கும் அளவுக்கு அங்கு அக்கிரமம் நடந்தேறியது.

கொல்லப்பட்டவர்களை அரசியல் கைதிகள் என்றார்கள் தமிழர் தரப்பைச் சேர்ந்த பலர். இல்லை, பயங்கரவாதிகள் என்றார்கள் சிங்களத் தரப்பைச் சேர்ந்த பலர். ஆனால் அவர்கள் கைதிகள். தமிழ்க் கைதிகள் என்பது மட்டுமே உண்மை. அவர்கள் பயங்கரவாதிகளாகவும் இருக்கலாம் அல்லது அரசியல் கைதிகளாகவும் இருக்கலாம். ஆனால் அவர்களை அடித்தும், வெட்டியும், குத்தியும் மரண தண்டனை விதிப்பதற்கு எவருக்குமே உரிமையில்லை. அதிலும் குற்றவாளிகளாகக் கூண்டுக்குள் போடப்பட்ட கைதிகளுக்கு உரிமையில்லை. சிங்கள - தமிழ் இன முரண்பாட்டின், இன மோதலின் கோர முகமே இது.

அன்று சட்டமும் சாத்தான்களுக்குச் சாதகமாகவே இருந்தது. கொல்லப்பட்டவர்களின் சடலங்களை எவ்வித நீதி விசாரணையுமின்றி அடக்கம் செய்யவோ, தகனம் செய்யவோ பொலிஸாருக்கு அதிகாரமிருந்தது. உதவிப் பொலிஸ் சுப்பிறின்டன் தரத்துக்கு மேலான அதிகாரிகளுக்கு இந்த அதிகாரத்தை ஜே.ஆர்.அரசு வழங்கியிருந்தது.

முதல் படுகொலை 25 ஆம் திகதி நடைபெற்றது. கைதிகள் கைதிகளாலேயே அடித்துக் கொல்லப்பட்ட பின்னர், ஒருநாள் கழித்து 27ஆம் திகதி அடுத்த தாக்குதல் நிகழ்ந்திருக்கிறது. முதல் படுகொலையுடனேயே ஏனைய தமிழ்க் கைதிகளைப் பாதுகாப்பதற்கு சிறைச்சாலை நிர்வாகமும், அன்றைய அரசும் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். தவறுதல்கள் மேலும் தவறுகளுக்கு வழிவிட்டன.

53 பேர் அடித்துக் கொல்லப்பட்டபோதும் கூட கொலையாளிகளை அடையாளம் காட்டுவதற்கு பதினேழு சிறைக் காவலர்களில் ஒரு சிறைக்காவலர் கூட முன்வரவில்லை. ஏன் பயமா? இனத்துவப் பாசமா? இரண்டாவது சிறைப் படுகொலை நடைபெற்ற பின்னர் எஞ்சியிருக்கும் பத்தொன்பது தமிழ்க் கைதிகளையும் யாழ்ப்பாண சிறைச்சாலைக்கு அனுப்புவது பற்றி உயர் மட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாம். அந்த யோசனைக்குக் காலஞ்சென்ற அமைச்சர் அத்துலத் முதலியும், இன்றைய ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்காவும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனராம். ஏன் தெரியுமா? தலை தப்பிய தமிழ்க் கைதிகளை யாழ்ப்பாணச் சிறைக்கு அனுப்பி வைத்தால் சிங்கள மக்கள் கொதித்துப் போய் விடுவார்களாம். இப்படிச் சொல்லியிருக்கிறார் 'சண்டே டைம்ஸ்' பத்திரிகையின் ஆசிரியர் சிங்க ரணதுங்க. சிங்கள-தமிழ் முரண்பாடுகள் இருக்கும் வரை இந்த நாடு உருப்படவே மாட்டாது.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2219506, பக்ஸ்: 021-2219505
e-mail: tnaatham@yahoo.com

# சிறார் மீதான துஷ்பிரயோகமும் ஆபத்தான சமூக உருவாக்கமும்

பருவ வயதை எட்டாத சிறார்களை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்படுவது இன்று சாதாரணமாக நடைபெறும் சம்பவங்களாகிவிட்டன.

இதில் குறிப்பாக, முன்பின் அறியாதவர்களால் மட்டுமன்றி தந்தை, மாமன், சகோதரர், போன்ற நெருங்கிய உறவுக்காரர்களாலும் சிறுமியர் வல்லுறவுக்குட்படுத்தப்படும் சம்பவங்கள் பற்றிய செய்திகள் தற்போது அனைத்து ஊடகங்கள் மூலமாகவும் எமக்கு அறியக் கிடைத்த வண்ணமுள்ளன.

ஆறு வயதுச் சிறுமியை துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கிய குற்றச்சாட்டில் இராணுவ வீரரொருவர் பொலிசாரால் கைது. 14 வயது மாணவியை வல்லுறவுக்குட்படுத்திய பொலிஸ் உத்தியோகத்தர் நாவலப்பிட்டியில் கைது. காரைநகரில் மனநலம் குன்றிய யுவதியை பாலியல் வல்லுறவுச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் விளக்க மறியலில்., யாழ். ரயில் நிலைய பாலியல் வல்லுறவு சம்பவத்தில் முதலாவது சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டார் என பல சம்பவங்கள் நாடு முழுவதும் நடைபெறும் நிகழ்வுகளாகிவிட்டன.

மறுபுறத்தே சிறார்கள் துஷ்பிரயோக நடவடிக்கைகளுக்கு எதிராக அதிகாரத்திலிருப்போர் நடவடிக்கை மேற்கொள்ளாமைக்கு பெண்கள் அமைப்புக்கள் கண்டனம், அதிகரித்த பாலியல் வல்லுறவுச் சம்பவங்களை கட்டுப்படுத்த கடுமையான தண்டனைக்கு அரசு நடவடிக்கை என பதிலடியான ஏற்பாடுகளும் சிறார்கள் துஷ்பிரயோகத்தை தொடர்புபடுத்தி அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

சிறுவர் துஷ்பிரயோகம் என்பது எமது சமூகத்தை சீரழிக்கும் விடயத்தை இரண்டு கட்டங்களாக நாம் நோக்க வேண்டியவர்களாகவுள்ளோம். இதுவிடயத்தில் போருக்குப் முந்தைய சூழல், போருக்குப் பிந்திய சூழல் என இரண்டு விடயங்கள் உண்டு.

பருவமடையாத சிறார்கள் மீது மேற்கொள்ளப்படும் இந்த பாலியல் வல்லுறவு செயற்பாடுகள் உண்மையில், ஐந்தறிவு விலங்குகள் மட்டத்தில் நடைபெறாத ஒன்று என்பதை இங்கே குறித்துக் கொள்ள வேண்டும்.


துரதிஷ்டவசமாக இச்சையின் நிமித்தம் மனிதகுலம், தனது பாலுறவுச் செயற்பாடுகளை இயற்கைக்கு மாறாக கையாளும் இந்த நடைமுறை இப்போது பருவமடையாத எதிர்ப்பாலாருடன் வலிந்து பாலுறவு கொள்ளும் அளவுக்கு எமது மனித நடத்தைகள் தரம் தாழ்ந்திருக்கின்றன.

.இதன் விளைவு, புதிதாக பல சமூக நோய்களை செயற்கையாக ஏற்படுத்திக் கொண்டு துன்பமுறும் சீரழிவான வாழ்க்கை முறையொன்றுக்குள், மனிதகுலம் தன்னை உட்படுத்திக் கொண்டிருப்பதாகும்.

இப்போது, நாட்டில் நடைபெறும் பல்வேறு குற்றச் செயல்களையும் தடுப்பதற்கென பல பாதுகாப்பு பிரிவுகளையும் ஆயிரக்கணக்கான பாதுகாப்பு அதிகாரிகளும், அதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் நிலையில், குறிப்பாக பாலியல் குற்றச் செயல்களை தடுக்கவென விசேட தடுப்புப் பிரிவுகள் உருவாக்கப்பட்டிருக்கும் நிலையில், பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களும் இக் குற்றச் செயல்களுக்குள் சிக்கிக் கொண்டிருப்பது, மனித குலம் அனுபவித்து தீர்க்க வேண்டிய தவிர்க்க முடியாத ஆபத்தான தீமை குறித்த ஒரு முன்னறிவிப்பாகும்.

மறுபுறத்தே இந்த தவறான பாலியல் நடத்தைகளை, வெறும் இன்ப நுகர்ச்சிக்கான நடவடிக்கைகளுடன் மட்டும் பொருத்திப் பார்க்க முடியாத அளவுக்கு வேறு பல குற்றச் செயல்களுடன் இப்பாலியல் நடத்தைகள் தொடர்புபட்டிருக்கின்றன.

இப்போது போதைப் பொருள் வியாபாரம், அனைத்து மட்டங்களிலும் சட்டவிரோதமாக ஒரு மிகை வருமானம் தரும் தொழிலாக மறைமுகமாக அங்கீகரிக்கப்பட்டுவிட்டது. அதுமட்டுமன்றி இப்போதைப் பொருளை பாவனைக்கு உட்படுத்துபவர்கள் அதீதமான பாலின்பத்துக்காக அதனை பயன்படுத்தும் கலாசாரமொன்றும் இப்போது அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.



இப்போது பெரும் எண்ணிக்கையான இணையத்தளங்கள் பாலுறவுக் காட்சிகளை பிரதான பேசுபொருளாகக் கொண்டிருக்கின்றன. கைத்தொலைபேசி கலாசாரம் வளர்ந்து விட்டதன் பின்னர் ஆபாசப் படங்களை இளம் வயதினரும் தமது தொலைபேசிகளில் கையகப்படுத்திக் கொள்வது மட்டுமன்றி அவற்றைத் தமது நண்பர்களுக்கும் பரிமாறி மகிழ்ந்து தம்மை கிளர்ச்சியூட்டிக் கொள்ளும்

**சாலையூரான்**

புதிய சமூக சூழலுக்குள் இப்போது நமது இளைஞர்களும் இழுத்து விடப்பட்டிருக்கிறார்கள்.

பாவிப்பதற்கு போதைப் பொருளையும் பார்த்து மகிழ ஆபாசப் படங்களையும் கைவசம் கொண்டிருக்கும் ஒரு இளைஞனின் அடுத்தகட்ட நகர்வு எதை நோக்கி இருக்குமென்பதை எம்மால் மிகச் சரியாக ஊகித்துக் கொள்ள முடியும்.

இதைவிட, வெளிநாட்டு உழைப்புக்களை கையகப்படுத்தும் வாய்ப்பைக் கொண்டுள்ள குடும்பங்களும், வாழ்க்கையை அனுபவித்தல் என்ற போர்வையில் வழமைக்கு மாறான இன்ப நுகர்ச்சி நாட்டங்களுக்குள் தம்மை உட்படுத்திக் கொண்டு துன்பமான குடும்ப சூழலை வாழ்க்கையாக அனுபவித்துக் கொண்டிருப்பதும் நாம் கண்கூடாகக் காண்பவையாகும்.

இப்போது பிந்தியதாக ஏற்பட்டிருக்கும் நிலமை என்பது, வேலியே பயிரை மேயும் நிலைக்குச் சென்றிருப்பதாகும். இன்று அரசு அறிவித்த சட்டங்களையும் மீறி சட்டத்தை கையில் எடுத்திருப்பவர்களே இந்தவகை ஒழுக்க மீறல்களில் ஈடுபடுவது பற்றிய செய்திகளும் எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கிக் கொண்டிருக்கின்றன. இதுபற்றி தீவிரமாக சிந்தித்து முடிவெடுக்க வேண்டிய நிர்ப்பந்தமான நிலை அரசுத் தலைவர்களுக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது.

சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய அவதானிப்பில் 90 வீதமான சம்பவங்கள் முறைப்பாடு செய்யப்படுவதில்லை அல்லது பதிவு செய்யப்படுவதில்லை. இத்தகைய விழிப்பூட்டல்களையும் சிறுவர் பாதுகாப்பு சபை செய்து வருகின்றது. இதைவிட கடந்த 6 மாதத்தில் 700 துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகியிருப்பதாக மற்றொரு தகவல் கூறுகிறது.

பிந்தியதாக சிசுக் கொலை, பெற்ற குழந்தையை கைவிட்டுச் செல்லுதல், மலக்குழியிலிருந்து சிசு கண்டெடுப்பு என தான் பெற்ற குழந்தையை கைவிட்டுச் செல்லல் அல்லது கொலை செய்தல் அல்லது வேறொருவருக்கு விற்றுவிட்டு தப்பிச் செல்லும் இவ்வாறான செயற்பாடுகள் பாலியல் துஷ்பிரயோகங்கள் மற்றும் மீறல் சம்பவங்களின் எதிரொலிப்பாகப் பார்க்கலாம்.

நாளாந்தம் பத்திரிகைகளை படிக்கும் ஒருவர் குறைந்த பட்சம் இவ்வாறான இரண்டு மூன்று சம்பவங்களையாவது தினமும் அறிந்து கொள்ள முடியும். அந்த அளவுக்கு இவ்வாறான துஷ்பிரயோகங்கள் எமது வீட்டு கதவை தட்டிய வண்ணம் நம் முன்னே வந்து நிற்கின்றன.

இவ்வாறான குற்றச் செயல்களை தடுப்பதற்கு தனியான பொறிமுறையொன்றை இனங்காண வேண்டியதன் அவசியத்துக்கு எமது தேசம் இப்போது தள்ளப்பட்டிருக்கிறது.

குறுகிய அல்லது சுயநலன் நோக்கில் மனிதனால் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத குற்றச் செயல்களுக்குப் புறம்பாக, தம்மை வேண்டிநிற்கும், தம்மால் வளர்த்துப் போஷிக்கப்படவேண்டிய இளம் சிறார்களை நெருங்கிய உறவினர்களே இச்சையின் நிமித்தம் சிதைத்து சீரழிக்கின்ற இந்த துஷ்பிரயோக சம்பவங்கள் இன்று பன்மடங்காக அதிகரித்திருப்பது மனித குலம் வெட்கித் தலைகுனிய வேண்டிய ஒரு துன்பம் தரும் நிலமையாகும்.

இவற்றைத் தடுக்கவென கடுமையான சட்ட நடைமுறைகள் அமுல்படுத்தப்படுவது அவசியம் என்பதற்கப்பால், கிராம மட்டத்தில் சமூகக் குழுக்களுக்கிடையே, இவ்வாறான துஷ்பிரயோக சம்பவங்களை தடுப்பதற்கான போதிய அறிவூட்டல் மற்றும், முற்பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகள் அங்கு செயற்படும் உள்ளூரமைப்புக்களால் சீராக இனங்காணப்படாதவரை நம் எதிர்கால சந்ததியினரான சிறார்களை சிறப்பாக வளர்த்து ஆளாக்குவதென்பது பாரிய சவாலாகவே இருந்து வரும் என்பதை நாம் நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

# இன்றைய சிந்தனை

**"ஒருவன் கூறும் வார்த்தைகளைக் கேட்டு அவனை மதிப்பிடக் கூடாது. பண்பட்ட உலகில் பண்பட்ட மனித நெறியைக் காண்கிறோம். பண்படாத உலகில் பகட்டான பேச்சுக்களை மட்டும்தான் காணமுடியும்"**

*- கன்ஃபூசியஸ்*

இந்த உலகில் புரிந்துகொள்ள முடியாத ஒரே உயிரினம் மனிதன். சொல் கேட்டு, முகம் பார்த்து, நாம் யாரையும் நூறு சதம் எடைபோட முடியாது. சொல் வேறு, செயல் வேறு என வாழ்வது மனிதன். எந்த புலியும் நடிப்பதில்லை. எந்த சிங்கமும் ஏமாற்றுவதில்லை. அதன் இயல்பு நமக்குத் தெரியும். மனிதன் மட்டுமே வித்தியாசமானவன். கும்பிடும் கைக்குள் துப்பாக்கி இருக்கும். அணைக்கும் கையில் கத்தியிருக்கும். பேசும் பேச்சில் விஷம் இருக்கும். பார்க்கும் பார்வையில் பகை இருக்கும். "எனவேதான் கொம்புள்ள மிருகத்திற்கு சில அடி விலகலாம்" கெட்டவர்கள் கண்ணில் படாத தூரத்தே விலகு" என்று முன்னோர் சொல்லியிருக்கிறார்கள்.

மனிதன் தன் எண்ணத்தை வெளியிடவே முதலில் ஒரு மொழியைக் கண்டான். ஆனால்., தன் எண்ணத்தை மறைக்கவே, தன் செயலை மறைக்கவே அதனைப் பயன்படுத்துகிறான். எனவே நாம் வாழ்வில் அறிய வேண்டிய மிக மிக முக்கியமான ஓர் எச்சரிக்கை எது தெரியுமா?

ஒருவர் கூறும் வார்த்தைகளைக் கேட்டு அவனை மதிப்பிடக் கூடாது. என்பதுதான். அப்படிச் செய்தால் நாம் ஏமாறுவோம். ஏமாற்றப்படுவோம்.

பகட்டான பேச்சுக்கள் உலகில் மலிவு. அந்த போலிப் பேச்சை அப்படியே மெய் என நம்பி விடாதீர்கள் என்பது கன்பூசியஸ் தரும் நடைமுறை எச்சரிக்கை மணி ஒலி.

பண்பட்ட ஒரு சிலரே பேச்சும் செயலும் ஒன்றாய் இருக்கக் காணலாம்.

அதற்காக பிறரை நம்பாதே 'என்று போதிக்க முடியாது. நம்பாமல் வாழ முடியாது. ஆனால் எப்போதும் ஓர் அறிவுபூர்வ எச்சரிக்கை உங்களிடம் இருக்க வேண்டும். மனிதர்களை எடைபோடும் ஆற்றல் வேண்டும். நல்லோர் - கெட்டவர் இனம் கண்டு நல்லோருடன் ஒட்டி வாழும் கலை உங்களுக்கு வர வேண்டும்.

பேச்சு ஒரு கலை. ஆயினும் பேச்சிலும் அறம் கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.

# கொரியாவில் 3 ஆயிரத்து 934 பேருக்கு வேலைவாய்ப்பு

## - வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

கடந்த ஆறு மாதங்களில் ஆறு மாதங்களில் மூவாயிரத்து 934 பேர் தென்கொரியாவில் தொழில் வாய்ப்புக்களை பெற்றுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. இதே நேரம், கொரிய மொழிப் பரீட்சையில் 2011ஆம் ஆண்டு 2460 பேர் சித்தி பெற்றனர். இவர்களில் 460 பேரும், 2010ஆம் ஆண்டு சித்தி பெற்ற 471 பேரும் கொரிய நாட்டில் வேலை வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

கடந்த முறை நடைபெற்ற கொரிய மொழிப் பரீட்சையில் ஒன்பதாயிரத்து 998 பேர் சித்தியடைந்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவிக்கின்றது. அவர்கள் தொடர்பான அனைத்து விபரங்களும் கொரிய வேலைவாய்ப்பிற்காக தெரிவுசெய்யப்படும் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இதே வேளை கடந்த வருடம் ஏழாயிரத்து 411 பேர் தென்கொரியாவில் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டப்பட்ட மின்கம்பங்கள் எங்கே? கிளிநொச்சியில் மின்சார சபை தூக்கமா

## மக்கள் கேள்வி

கிளிநொச்சி

கிளிநொச்சி நகரில் கண்ணன் ஆலய வீதியில் மின்சாரம் வழங்கவென நாட்டப்பட்ட மின்கம்பங்களை பட்டப்பகலில் வைக்கோ இயந்திரம் மூலம் அகற்றி கொண்டு செல்லப்பட்டுள்ளதாக கிளிநொச்சி நகர் சனசமூக நிலையத்தினர் தெரிவிக்கின்றனர். மின்சார சபையால் நாட்டப்பட்ட இம் மின்கம்பங்களுக்கு வயர் பொருத்தும் வேலைகள் பல மாதங்களாக இடம் பெறவில்லை. நாட்டப்பட்ட மின்கம்பங்கள் கழற்றி எடுத்து செல்லப்பட்டுள்ளன.

இவ்வாறு கழற்றப்பட்ட மின்கம்பங்கள் தனியாருக்கு 6000 ரூபா வீதம் விற்பனை செய்யப்படுகிறதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மண்டைதீவுக்கு சூரிய மின்கலங்கள்

தீவகம்

மண்டைதீவுக்கு பத்து சூரியக் கதிரில் இயங்கும் மின்விளக்குகளை கொடுத்துதவுவதற்கு வேலணை பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அடுத்தவாரம் முற்பகுதியில் இந்த சூரிய மின்கலங்கள் மண்டைதீவில் உள்ள முக்கியமான இடங்களில் பொருத்தப்படும். தற்போது பொருத்தமான இடங்கள் தெரிவு செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# யாழ். வீதிகள் பற்றி இன்று கலந்துரையாடல்

தீவகம்

யாழ். மாவட்டத்திலுள்ள வீதிகளினது வலையமைப்பு வேலைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்றைய தினம் காலை 10.00 மணியளவில் யாழ். மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவிருக்கின்றது.



எலெற் கம்பியூட்டர் சிஸ்டம் நிறுவனத்தின் வளர்ச்சிக்காக, நிர்வாகி ஜோன்சன் மற்றும் மென்பொருள் அபிவிருத்தியாளர் ஐங்கரன் ஆகியோரிடம் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் ஒரு இலட்சம் ரூபா நிதியினை வழங்கினார்.

# கழுகுக் கண்கள்

இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்திருக்கும் காவத்தை என்ற பகுதிக்கு நான் பறந்து சென்றேன். காவத்தை ஒரு அழகான பிரதேசம். தேயிலைத் தோட்டங்கள், இறப்பர் தோட்டங்கள் மற்றும் கிராமத்துப் பண்பாடு தழைத்தோங்கிய ஒரு ரம்மியமான பிரதேசமாக அது இருந்தது.

2008ம் ஆண்டு ஜூலை மாதம் 21ம் திகதி முதல் 2012 ஜூலை 18ம் திகதி வரை இந்த அமைதியான கிராமம், கொலைகாரர்கள் அப்பாவி உயிர்களை வேட்டையாடும் பிரதேசமாக மாறியிருக்கிறது என்பதை தெரிந்து கொண்டு நான் வேதனையுடன் அங்கு சென்றேன். இதுவரையில் அங்கு எல்லாமாக 12 அப்பாவிப் பெண்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களில் இளவயதைச் சேர்ந்தவர்களும், விடலைப் பருவத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணும், வயோதிபத்தை நெருங்கிக் கொண்டிருந்த பல பெண்களும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

மெல்லப் பறந்து சென்று காவத்தை பொலிஸ் நிலையத்தை அடைந்து அங்கு என்ன நடக்கிறது என்பதை மோப்பமிட்டேன். பெரும்பாலான படுகொலைகள் இரவில் அல்லது அதிகாலையில் நடந்திருப்பதாக பொலிஸ் விசாரணைகளில் நான் தெரிந்து கொண்டேன்.

இந்தப் பெண்கள் படுகொலை செய்யப்படுவதற்கு முன்னர் அல்லது படுகொலை செய்யப்பட்ட பின்னர் பாலியல் ரீதியில் துன்புறுத்தல்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்று பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரி யவந்துள்ளது. இதில் கொல்லப்பட்டவர்களில் இரண்டு பெண்கள் தீயில் எரிந்து மரணித்திருக்கிறார்கள். இந்தப் பெண்களில் அநேகமாக எல்லோருமே ஆண் துணையின்றி தனியாக அல்லது இன்னொரு பெண்ணுடன் தங்கள் வீடுகளில் வாழ்ந்து வந்தவர்களாவர்.

இந்தக் கொலைகள் அனைத்துமே இருபது சதுர கிலோமீற்றர் பரப்பளவிலான பிரதேசத்திலேயே நடந்திருக்கிறது. இந்தக் கொலைகள் குடும்பத்தகராறு, அல்லது காணித்தகராறு அல்லது தனிப்பட்ட வஞ்சம் தீர்க்கும் செயற்பாடுகளாக அமைந்திருக்குமென்று பொலிஸார் சந்தேகிக்கிறார்கள் இந்தக் கொலைகளில் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ள போதிலும் நீதிமன்றத்தில் நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் குறைவாக இருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

நான் அன்று மாலை ஆறரை அல்லது ஏழு மணிக்கு காவத்தையிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது அங்குள்ள வீடுகளின் கதவுகள் அனைத்தும் பூட்டப்பட்டிருந்ததை அவதானித்தேன். இதிலிருந்து அப்பிரதேச மக்கள் மரண பீதியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து கொண்டேன்.

பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளபோதிலும் இந்தக் கொலைஞர்கள் எவ்வித அச்சமும் இன்றித் தொடர்ந்தும் தங்கள் மனித வேட்டையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கொலைகள் நடைபெறுவதற்கு பிரதான காரணம் அங்கு வீடுகள், ஒரு வீட்டில் இருந்து தொலைவிலேயே அமைந்திருப்பதுடன் தனியான பகுதியில் அந்த வீடுகள் இருக்கின்றன. இதனால் இரவில் கொலைஞர்கள் இலகுவில் சம்பந்தப்பட்ட வீட்டுக்கு சென்று கச்சிதமாக கொலையை முடித்துவிட்டு வெளியேறக்கூடிய சந்தர்ப்பங்களும் அதிகமாக இருக்கின்றன. இந்தக் கொலைஞர்களின் அக்கிரமத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமானால் கிராமங்களின் பாதுகாப்பிற்காக தாங்களே இரவில் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுவது அவசியமாகும்.

அந்தளவிற்கு இந்தக் கிராமத்து மக்களிடையே பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு கண்விழிக்கக்கூடிய தைரியமோ, வலுவோ இல்லை என்பதை நான் அவர்களின் நெருக்கமாக பழகிப் பேசியபோது புரிந்துக் கொண்டேன்.

இந்த கழுகுக் கண்கள் இனிமேல் இரவு நேரத்திலும் இந்தக் காவத்தை பிரதேசத்தை கண்விழித்து கண்காணித்து அந்த கொலைஞர்களை கைது செய்வதற்கு பொலிஸாருக்கு உதவி புரிய வேண்டுமென்று தீர்மானித்து செயற்படுத்தவும் போகின்றேன்.

# இலங்கைப் பொலிஸ் திணைக்களம்...

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

16. (அ) நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் உப சேவையில் அல்லது நிரந்தர பொலிஸ் சேவையில் ஏதாவது பதவி ஒன்றுக்கு விண்ணப்பித்ததுண்டா? (ஆம் எனின் அது தொடர்பான விபரங்களைத் தருக) : ....................

(ஆ) நீங்கள் இதற்கு முன்னர் இலங்கை நிரந்தர பொலிஸ் அல்லது பொலிஸ் உப சேவையில் கடமையாற்றியுள்ளீரா ? (ஆம் எனின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக?) : ....................

17. நீங்கள் தற்போது பொலிஸ் உப சேவையில் சேவையாற்றுகிறீரா ? அவ்வாறாயின் நியமனத் திகதி, பதவிநிலை மற்றும் இலக்கம் போன்ற விபரங்களினைக் குறிப்பிடுக. நியமனக் கடிதத்தின் பிரதியை இணைக்குக : ....................

18. (அ) நீங்கள் படைதாங்கு சேவையில் சேவையாற்றுகிறீரா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும்.

(ஆ) நீங்கள் படைதாங்கு சேவையில் சேவையாற்றியுள்ளீரா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

19. (அ) நீங்கள் படைதாங்கு தொண்டர் படையினராக சேவையாற்றுகிறீரா? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படை தாங்கு தொண்டர் சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும்.

(ஆ) நீங்கள் படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் சேவையாற்றியுள்ளீரா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும்.

20. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? (அவ்வாறாயின் விபரம் தருக.) : ....................

21. உங்கள் உறவினர்கள் எவரேனும் தவறு சம்பந்தமான சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டுள்ளனரா அல்லது குற்றம் சுமத்தப்பட்டுள்ளனரா அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? (அவ்வாறாயின் விபரங்களைத் தருக) : ....................

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவை யென்றும் இத்தால் நான் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத்திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

....................

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ....................

இலங்கைப் புகையிரத சேவை நாட்டின் அபிவிருத்தியுடன் இணைந்த ஒரு சாதனமாக 1850 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் தோற்றம் பெற்றது. இலங்கையில் புகையிரதப் பாதைக் கட்டமைப்புக்களை உருவாக்கிய பெருமை பிரிட்டி அரசாங்கத்தையே சாரும். இரும்புத் தண்டவாளங்கள், சிலிப்பர் கட்டைகள் மற்றும் சரளைக் கற்களைக் கொண்டு உறுதியான புகையிரதப் பாதைகளை அவர்கள் அமைத்தார்கள்.

ஆளுநர் சேர் ஹென்ரி வோர்ட் அவர்களால் 1858 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இலங்கைப் புகையிரத சேவைக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. முதலாவது பிரதான புகையிரதப் பாதை கொழும்பிலிருந்து அம்பேபுஸ்ஸ வரையில் கிழக்கிற்கு 54 கிலோ மீற்றர் தூரம் நிர்மாணிக்கப்பட்டது. அதன் பின்னர் முதலாவது புகையிரதம் 1864 டிசம்பர் மாதம் 27 ஆம் திகதி பயணத்தை ஆரம்பித்தது. மேலும் இப்பாதை புகையிரத போக்குவரத்துக்காக 1865 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

பின்னர் 1927 ஆம் ஆண்டு 1530 கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்ட முழு பயண வழியொன்று செயற்படுத்தப்பட்டு, புகையிரத வலையமைப்பு முறைமை விஸ்தரிக்கப்பட்டது. பிரதான புகையிரத வீதி 1867 ஆம் ஆண்டு கண்டி வரையும் 1874 இல் நாவலப்பிட்டி வரையும் 1885 ஆம் ஆண்டு நானு ஓயா வரையும1894 ஆம் ஆண்டு பண்டாரவளை வரையும் 1924 ஆம் ஆண்டு பதுளை வரையும் கட்டம் கட்டமாக விஸ்தரிக்கப்பட்டது.

ஏனைய புகையிரத பாதைகள் நாட்டின் எஞ்சிய பிரதேசங்களை இணைத்துப் பூரணப்படுத்தப்பட்டது. இதன்படி மாத்தளைப் பாதை 1880 ஆம் ஆண்டும் கரையோரப் பாதை 1895 ஆம் ஆண்டும் வடக்குப் பாதை 1905 ஆம் ஆண்டும் மன்னார் பாதை 1914 ஆம் ஆண்டும் களணி பாதை 1919 ஆம் ஆண்டும்புத்தளம் பாதை 1926 ஆம் ஆண்டும்பீ- மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை பாதை 1928 ஆம் ஆண்டும் பூர்த்தி செய்யப்பட்டன. மேலும் 1956 ஆம் ஆண்டு காங்கேசன்துறை பாதை பூரணப்படுத்தப்பட்டது.



இலங்கையில் பல வழித் தடங்கள் கொண்ட புகையிரத சேவைகள் காணப்பட்டாலும், கொழும்புக்கும் பதுளைக்கும் இடையிலான புகையிரதப் பாதை (பிரதான பாதை), கொழும்புக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான புகையிரதப் பாதை (வட பாதை), கொழும்புக்கும் மாத்தறைக்கும் இடையிலான புகையிரதப் பாதை (கடலோரப் பாதை), கொழும்புக்கும் தலைமன்னாருக்கும் இடையிலான புகையிரதப் பாதை (இறங்குதுறைப் பாதை), கொழும்புக்கும் புத்தளம், மட்டக்களப்பு, திரிகோணமலை ஆகியவற்றுக்கு இடையிலான புகையிரதப் பாதைகள் முதலிய பாதைகள் முக்கியத்துவம் பெற்றவை. குறிப்பிடப்பட்ட அனைத்துப் பாதைகளும் அகலப் பாதைகள் என அழைக்கப்படுகின்றன. கொழும்புக்கும் இரத்தினபுரிக்கும் இடையிலான புகையிரதப் பாதை (களனிப் பள்ளத்தாக்குப் பாதை) ஒடுங்கு பாதை என அழைக்கப்படுகிறது.

ராகமை, பொல்கஹவெல, மாகோ, அனுராதபுரம், மதவாச்சி, பேராதனை போன்றவை புகையிரத பாதைகளில் அமைந்துள்ள பிரதான புகையிரத சந்திகள் ஆகும்.நாட்டில் ஏற்பட்ட சனத்தொகைப் பெருக்கம் காரணமாகவும், பயணிகள் போக்குவரத்து அதிகரித்த காரணத்தாலும், 19 ஆம் ஆண்டுகளில் நமது பிரதான தொழில் முயற்சியின் அடிப்படைப் பொருட்களைப் புகையிரதம் ஊடாகக் கொண்டு செல்லும் நடவடிக்கை தோற்றம் பெற்றது.

யாழ் தேவி (யாழ்

# வடக்கின் நீர்ப்பாசன அபிவிருத்தி திட்டம் எப்போது நிறைவபெறும்?

கிளிநொச்சி மாவட்டத்தின் ஏழை விவசாயிகளின் எதிர்கால வாழ்வைக் கேள்விக் குறியாக்கும் வகையில் இவ்வாண்டு சிறுபோக நெற்செய்கை அமைந்துள்ளது. அதாவது போதிய நீர்ப்பாசன வசதியின்றி ஒரு பகுதி அழிவடைந்துள்ளதுடன் எஞ்சியவையும் அழிவடையும் ஒரு அபாயநிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.


கிளிநொச்சி மாவட்டத்தின் மிகப்பெரிய நீர்ப்பாசனக்குளமான இரணைமடு உட்பட கல்மடுக்குளம், அக்கராயன்குளம், வன்னேரிக் குளம், புதுமுறிப்புக்குளம், கனகாம்பிகைக்குளம், கரியாலைநாகபடுவான்குளம் உள்ளிட்ட குளங்களின் கீழ் இவ்வாண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் 12 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற் செய்கை மேற்கொள்வதற்கான தீர்மானங்கள் கடந்த பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி எடுக்கப்பட்டு அதன்படி செய்கை மேற்கொள்ளப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தின் சுமார் 21ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பினைக்கொண்ட இரணைமடுக்குளத்தின் கீழ் மேற்படி 12 ஆயிரம் ஏக்கரில் 7 ஆயிரத்து 964 ஏக்கர் முதல் 8 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக செய்கை செய்ய தீர்மானிக்கப்பட்டது.

அதாவது கடந்த பெப்ரவரி மாதம் தீர்மானம் எடுக்கும்போது குளங்களில் 59 ஆயிரம் கனஅடி நீர் மட்டுமே இருந்தது. இதில் 9 ஆயிரம் கனஅடி நீர் குளத்தின் தேவைகளுக்கு அதாவது உயிரினங்கள் வாழ்வதற்கும், குளத்தினைப் பாதுகாப்பதற்கும் குளத்தில் பேணப்படும் என்றும் ஏனைய ஐம்பதாயிரம் கனஅடி நீரை வைத்தே மேற்படி எண்ணாயிரம் ஏக்கர் சிறுபோகத்திற்கு தீர்மானிக்கப்பட்டது.

இந்தவகையில் இரணைமடுக் குளத்தின் கீழ் உள்ள இருபத்திமூன்று கமக்கார அமைப்புகளுக்கும் அவற்றின் செய்கையாளர்களுக்கு ஏற்ப காணிகள் பங்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டிருந்தன. இந்த அளவீடுகளின் அடிப்படையில் 8 ஆயிரம் ஏக்கர் மொத்தமாக இருந்தது.

ஆனால் இன்று மொத்தமாக விதைக்கப்பட்ட காணிகளின் தொகை 10 ஆயிரம் ஏக்கரைத் தாண்டிவிட்டது. இதற்கு சில அரச அதிகாரிகளும் உபதிட்டக் குழுக்களுமே காரணம் என தெட்டத்தெளிவாகத் தெரியவந்துள்ளது.



கூட்டத் தீர்மானத்தின் படி மேலதிகமாக மேற்கொள்ளப்படும் விதைப்புகள் சட்டவிரோத விதைப்புகள் எனவும் அவை தொடர்பாக உடனடியாக தண்டப்பணம் ஏக்கருக்கு பத்தாயிரம் அறவிடுவதுடன் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படும் என்றும் கடுமையாகத் தீர்மானங்கள் மாவட்டமட்ட உயரதிகாரிகளின் முன்னிலையில் நிறைவேற்றப்பட்டிருந்தன. இந்த திட்டத்திற்கு கட்டுப்பட்டவர்கள் கிளிநொச்சி ஏழைவிவசாயிகளே.

மேலதிக செய்கைகளை மேற்கொண்டு

இவ்வாறு ஐம்பதாயிரம் கன அடி நீ
ஏக்கர் நிலப்பரப்பில் மாத்திரமே சிறுபோ
மேற்கொள்ளமுடியும் என்று தீர்மானித்து

# புனரமைக்கப்படும் வட பகுதி புகையிரத சேவை

தேவி எஸ்பிரஸ்) என்பது கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் ஊடாக காங்கேசன்துறை வரை இயங்கிய பயணிகள் புகையிரத சேவையாகும். இச்சேவை 1956 ஆம் ஆண்டு ஏப்ரல் 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இச்சேவை இராகமை, பொல்கஹவெல, மாகோ, அனுராதபுரம், வவுனியா, கிளி-நொச்சி போன்ற இடங்களை தனது பயணப்பாதையில் கடந்து சென்றது.

காலை 5.45 இற்கு காங்கேசன்துறையில் இருந்து புறப்படும் யாழ் தேவி மதியம் 1.15 இற்கு கொழும்பை வந்தடையும். இதேபோல காலை 5.45 இற்கு கொழும்பில் இருந்து புறப்படும் யாழ் தேவி மதியம் 1.15 இற்கு காங்கேசன்துறையை சென்றடையும். யாழ் தேவி புகையிரதத்துக்கு வட பகுதியில் கிடைத்த வரவேற்புக் காரணமாக இலங்கை புகையிரத திணைக்களத்தால் வட பகுதி போக்குவரத்து சேவைக்காக உத்தர தேவி என்னும் புகையிரதம் மேலதிகமாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டது. மதியம் 1.15 இற்கு கொழும்பில் இருந்து புறப்படும் உத்தர தேவி இரவு 8.30 இற்கு காங்கேசன்துறையை சென்றடையும். அதுபோல காங்கேசன்துறையில் இருந்து மதியம் 1.15 இற்கு புறப்படும் உத்தர தேவி இரவு 8.30 இற்கு கொழும்பை வந்தடையும்.


> **வளமாக செயற்பட்ட இலங்கைப் புகையிரத திணைக்களத்தின் செயற்பாடுகளில் யுத்தம் பாரிய தாக்கத்தை செலுத்தியுள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது. தற்போது இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் புனரமைக்கப்படும் வட பகுதி புகையிரத சேவை மூலம் அனைவரும் பலன் பெறவேண்டும் என்பதே எமது ஆவலாகும்.**

இலங்கை புகையிரத திணைக்களத்துக்கு கிடைத்த ஆண்டு வருமானத்தில் கிட்டத்தட்ட 40 மூ வருமானம் யாழ் தேவி மற்றும் உத்தர தேவி ஆகியவற்றின் இணைந்த சேவை மூலம் கிடைத்தது. இக்கூட்டணியின் வெற்றியின் காரணமாக பதுளை உடரட்ட மெனிக்கேயின் இணைந்த சேவையாக பொடி மெனிக்கேயும், காலி சமுத்திர கனியின் இணைந்த சேவையாக காலு குமாரியும் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. யாழ்தேவி 1990 ஆம் ஆண்டு ஜூன் 13 ஆம் திகதி கடைசியாக காங்கேசன்துறை வரை சென்றது.

வட பகுதிக்கான யாழ் தேவி மற்றும் உத்தர தேவி சேவைகளுக்குப் புறம்பாக விடுமுறையில் யாழ்ப்பாணம் சென்றவர்களின் வசதி கருதி கடுகதி சேவை (எக்ஸ்பிரஸ்) ஒன்று ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமை இரவும் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மேலும் ஒவ்வொரு நாளும் தபால் சேவை (மெயில்), பொருட்கள் சேவை(குட்ஸ்), எண்ணெய் சேவை (ஒயில்) ஆகிய புகையிரத சேவைகளும் இடம்பெற்றன.

இலங்கை புகையிரதத் திணைக்கள வலையமைப்பானது நிர்வாகம், பொறியியல் (இயந்திரம், கட்டடம்), போக்குவரத்து, வர்த்தகம், நிதி, களஞ்சியம் போன்ற முக்கிய பகுதிகளைக் கொண்டு இயங்குகிறது. மேலும் அதன் செயற்பாடுகளில் பொதுமுகாமையாளர், பிரதான பொறியியலாளர்கள், பொறியியலாளர்கள், மேற்பார்வையாளர்கள், பிரதான கணக்காளர்கள், கணக்காளர்கள், எழுதுவினையர்கள், போக்குவரத்து அத்தியட்சர்கள், வர்த்தக அத்தியட்சர்கள், களஞ்சிய அத்தியட்சர்கள், நிலைய அதிபர்கள் போன்றவர்கள் முக்கிய பங்காற்றுகிறார்கள். வளமாக செயற்பட்ட இலங்கைப் புகையிரத திணைக்களத்தின் செயற்பாடுகளில் யுத்தம் பாரிய தாக்கத்தை செலுத்தியுள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது. தற்போது இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் புனரமைக்கப்படும் வட பகுதி புகையிரத சேவை மூலம் அனைவரும் பலன் பெறவேண்டும் என்பதே எமது ஆவலாகும் ●

- அம்மு



பெருநிலப்பரப்புகளை கொண்ட முதலாளி வர்க்க விவசாயிகளோ, அரசஅதிகாரிகளோ இதற்கு கட்டுப்படவில்லை.

இரணைமடுக் குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள மேலதிக செய்கைகள் தற்போது அளவீடு செய்யப்பட்டு வரும் நிலையில் சில கமக்கார அமைப்புகளின் கீழ் அவர்களின் துணையுடன் மேலதிக விதைப்புக்கள் இடம்பெற்றுள்ளமை தெரியவந்துள்ளன. இதைவிட நீர்ப்பாசனத் திணைக்கள மற்றும் விவசாயத் திணைக்கள அதிகாரிகள் கூட ...ாண்டுள்ளமை தெரியவந்துள்ளது. ...அடி நீரைக்கொண்டு 8 ஆயிரம் சிறுபோகச் செய்கை ...ானித்துவிட்டு மேலதிகமாக 2 ஆயிரம் ஏக்கரில் சிறுபோக செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் இதற்காக மேலதிகமாக பயன்படுத்தும் நீர் மேலதிகமாக 50 ஆயிரம் கனஅடியில் இருந்தே பெறப்படுகின்றது.



இதனால் நீர் பற்றாக்குறை மிக அதிகமாக நிலவிவருகின்றது. ஏழை விவசாயிகள் அதிகவிலை-



களைக்கொடுத்து ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என குத்தகைகளுக்கு காணிகளைப் பெற்று தமது செய்கைகளை மேற்கொண்டுள்ளபோதும் போதிய நீர்ப்பாசன வசதியின்றி இன்று பல விவசாயிகள் தமது செய்கைகளை கைவிட வேண்டியநிலை காணப்படுகின்றது.

உதாரணமாக மூன்று ஏக்கர் சிறுபோகச் செய்கைக்கு தெரிவுசெய்த ஊரியான் கமக்கார அமைப்பின் கீழ் உள்ள விவசாயி ஒருவர் சுமார் ஐம்பதாயிரம் 'ரூபா குத்தகைக்குக் காணியைப்பெற்று அதன் பண்படுத்தலுக்காக 'ரூபா முப்பதாயிரத்தைச் செலவளித்து விதை நெல்லுக்காக பத்தாயிரம் 'ரூபாவையும் ஏனைய கிருமிநாசினி, களைநாசினி, உபகரணங்கள், ஏனைய செலவுகளுக்கு இருபதாயிரத்தையும் என ஒருலட்சத்து பத்தாயிரம் 'ரூபா வரையில் செலவிட்டு தற்போது போதிய நீர்ப்பாசனமின்றி அச்செய்கையைக் கைவிட்டுள்ளனர்.

இதற்கான முதலீட்டை அந்த விவசாயி தனது இருப்பில் இருந்து எடுப்பதற்கு அவரிடம் மேலதிகமாக எதுவும் இல்லாத ஏழை விவசாயி வங்கியில் கடனாகப் பெற்றுக்கொண்ட நிதியை இவ்வாறு பயன்படுத்திக்கொண்டார். இன்னும் இரண்டு மாதங்களில் அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டிய நிலையில் அவர் உள்ளார்.

இந்த நிலையில் போதிய நீரின்றி அவர் நம்பி முதலீடு செய்த நெற்செய்கையும் பாதிக்கப்படும் நிலைக்கு வந்துள்ளது.

விவசாயம் கைவிடப்பட்டதால் அந்த விவசாயிஎந்த விதத்திலும் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாது. இவ்வாறு இந்த விவசாயி பாதிக்கப்பட்டதற்கு ஊரியான் கமக்கார அமைப்பும் நீர்பாசனத்திணைக்கள அதிகாரிகளுமே காரணமென விவசாயிகள் குற்றம் சாட்டுகிறார்கள்.

கடந்த ஆண்டு குளத்தின் நீர்மட்டத்தை வைத்துக்கொண்டு 10 ஆயிரம் ஏக்கர் சிறுபோகச் செய்கைகளுக்குத் தீர்மானிக்கப்பட்டாலும் மேலதிகமாக 6 ஆயிரம் ஏக்கர் செய்கை மேற்கொள்ளப்பட்டபோதும் உரியகாலத்தில் "திடீர் மழை" ஒன்று பெய்தமையால் ஓரளவு பாதிப்புகள் தவிர்க்கப்பட்டன. ஆனால், இம்முறை அதுவும் இல்லை.

கடந்த வாரம் மழை வேண்டி இரணைமடு கனகாம்பிகை அம்பாள் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளையும் விவசாயிகள் செய்திருந்தனர்.

இன்று ஏழை விவசாயிகள் வானத்தையும் வாய்க்காலையும் பார்த்த வண்ணம் தமது நெற்செய்கை பாதுகாக்கப்படுமா என்ற ஏக்கப் பார்வையுடன் காத்திருக்கிறார்கள்.

இம்முறை மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற் செய்கையில் தற்போது முப்பது வீதமான பயிர்ச்செய்கை அழிவடைந்துள்ளது. இதுவே விவசாயிகளுக்கு பெரும் பாதிப்பாக அமைந்துள்ளது.

எஞ்சியதும் அழிவடையும் பட்சத்தில் கிளிநொச்சி மாவட்ட வங்கிகளில் கடனாளிகளாக இருக்கின்ற ஒவ்வொரு விவசாயிகளும் வங்கிகள் மேற்கொள்ளும் சட்ட நடவடிக்கைகளுக்கு கட்டுப்பட வேண்டியவர்களாகவும் கடன்களை மீளச் செலுத்த முடியாமலும் கடன் தொல்லைகளிலிருந்து மீளமுடியாமலும் தற்கொலை செய்து கொள்ளும் அபாய நிலைக்கு தள்ளப்பட வேண்டியவர்களாகவுள்ளனர் ●

சு.ராகினி





தகவல் திணைக்களத்தில் மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் 23ஆம் திகதி தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தகவல் ஊடகத் திணைக்களத்துடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த குற்றச் செயல்கள், மோசடி மற்றும் தேசிய பாதுகாப்புத் தொடர்பில் ஏற்பாடு செய்திருந்த பத்திரிகையாளர்களுக்கான மாநாட்டில் பாதுகாப்புச் செயலாளர் உள்ளிட்ட முக்கிய அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவம் நேற்று ஆரம்பம்

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த மகோற்சவம் நேற்று (24) செவ்வாய்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

25 நாள்களுக்கு நடைபெறவுள்ள இப்பெருந்திருவிழா மிகவும் சிறப்புடன்இடம்பெறவுள்ளது.

நேற்றுக் காலை விசேட பூசை அபிசேகங்கள் இடம்பெற்று முற்பகல் 10 மணிக்கு கந்தனுக்கு அரோஹரா, முருகனுக்கு அரோஹரா கோஷங்கள் ஆலயமெங்கும் பரவ, ஆலய மணிகள் அனைத்தும் ஓங்கி ஒலிக்க, அந்தணர்களின் மந்திர உச்சாடனம் மத்தியில் மங்கள வாக்கியங்கள் முழங்க கொடியேற்றம் நடைபெற்றது.

நல்லூர்க் கந்தன் ஆலய உற்சவத்தின் வரிசையில் எதிர்வரும் 2 ஆம் திகதி வியாழக்கிழமை மஞ்சத் திருவிழாவும், 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கார்த்திகை உற்சவமும், 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சந்தானகோபாலர் உற்சவமும், அதேநாள மாலை கைலாசவாகனமும், 13ஆம் திகதி திங்கள்கிழமை கஜவல்லிமஹாவல்லி உற்சவமும் அதேநாள் மாலை வேல்விமானம் உற்சவமும், 14 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை தண்டாயுதபாணி உற்சவமும், 15ஆம் திகதி செவ்வாய்க் கிழமை சப்பறத் திருவிழாவும், 16 ஆம் திகதி புதன்கிழமை தேர்த் திருவிழாவும், 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

பக்தர்களின் நலன் கருதி குடிதண்ணீர், சுகாதார, பாதுகாப்பு வசதிகள் ஆலயச் சூழலில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஆலய வீதியில் முதலுதவிச் சிகிச்சைப் பிரிவு, பொலிஸார் பிரிவு, சாரணர் பிரிவு, பத்தர்கள் தொண்டு அமைப்புக்கள் என பல தரப்பட்ட அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

# சட்டவிரோத தேர்தல் சுவரொட்டிகளை அகற்ற ரூ.5 மில்லியன் நிதி ஒதுக்கீடு

வடமத்திய, கிழக்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் ஒட்டப்படும் சட்டவிரோத சுவரொட்டிகளை அகற்றவென பொலிஸாருக்கு 5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் நடைபெறவுள்ள மூன்று மாகாணங்களில் சட்டவிரோத சுவரொட்டிகளை அகற்ற தேர்தல்கள் செயலகத்தால் இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்ன தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமாக ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளை அகற்ற தொழிலாளர்களை பயன்படுத்த வேண்டியுள்ளதால் அவர்களுக்கு இந்நிதியூடாக சம்பளம் வழங்கப்படும் என அவர் கூறினார்.

இதேவேளை, சட்டவிரோத தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டும் நபர்கள் குறித்து தகவல் தருமாறு பொலிஸார் பொது மக்களை கேட்டுக் கொண்டுள்ளனர்.

முறையிடப்பட்டால் உரிய நபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# இலங்கைக்கு ஹெரோயின் கடத்த முயன்ற இருவர் சென்னையில் கைது

சென்னை விமான நிலையத்தில் இருந்து இலங்கைக்கு கடத்தப்படவிருந்த ஒரு தொகை ஹெரோயின் போதைப் பொருளினை சுங்கத்துறை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இலங்கை பயணிக்க இருந்த தன்வர், நிசார் ஆகிய இருவரை சென்னை விமான நிலைய சுங்கத் துறை அதிகாரிகள் சந்தேகத்தின் பேரில் சோதனை செய்துள்ளனர். இதன்போது இலங்கைக்கு கடத்த முயன்ற இந்திய ரூ.50 இலட்சம் மதிப்புள்ள ஹெராயின் போதை இவர்களிடம் இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது. இதுகுறித்து இருவரிடமும் சுங்கத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இந்திய தூதுவருடன் சந்திப்பு

(வலிகாமம்)

வலி.வடக்கு பிரதேசத்திற்கு வருகைதந்த இந்தியத்தூதுவர் வலி.வடக்குப் பிரதேச சபைத் தலைவர் சோ.சுகித்தனுடன் உயர் பாதுகாப்பு வலயம் மற்றும் மக்களுடைய மீள்குடியேறற்ம் சம்பந்தமாகவும் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் சம்பந்தமாகக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான அமைப்பின் செயலாளர் சு.பரமநாதன் மற்றும் வடமாகாண ஆளுனரின் செயலாளர் எல்.இளங்கோவன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

# நாடு பூராகவும் மின்வெட்டு மூன்று தினங்களுக்குள் நீங்கும்

புத்தளம் அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட கோளாறைத் திருத்தும் வேலைகள் இன்று நிறைவுபெறுமென எதிர்பார்க்கப் படுகிறது. இதனால் நாடு பூராகவும் அமுல்படுத்தப்பட்டு வந்த தற்காலிக மின்வெட்டு மூன்று தினங்களுக்குள் நீக்கப்படும். இவ்வாறு மின்சக்தி, எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

புத்தளம் அனல் மின்நிலையம் மற்றும் கொரவப்பிட்டிய மின் உற்பத்தி நிலையம் என்பவற்றில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறினால் 400 மெகாவாற் உற்பத்தி தடைப்பட்டது. இதனால் நாட்டின் அனைத்துப் பிரதேசங்களில் மூன்று மணி நேர மின்வெட்டு அமுல்படுத்தப்படுகிறது.

கொரவப்பிட்டிய அனல் மின்நிலைய திருத்தப்பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இங்கிருந்து 270 மெகாவாற் மின் உற்பத்தி செய்யப்படுகிறது. இயந்திரக் கோளாறினால் 10 மெகாவாற் உற்பத்தி தடைப்பட்டுள்ளது.

இதேவேளை நுரைச்சோலை அனல் மின் நிலைய கோளாறை கண்டுபிடிக்க முடியாததால் திருத்தப்பணிகள் தடைப்பட்டிருந்தன.

# முதிரை மரம் வெட்டிய குற்றச்சாட்டு: 7 பேர் கைது

(வலிகாமம்)

வவனியா பொலிஸ் பகுதயில் உள்ள காட்டில் முதிரை மரம் வெட்டிய 7 சந்தேக நபர்கள் வவனியா பொலிசாரினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

கடந்த 17ஆம் திகதி வவுனியா பொலிஸாருக்கு கிடைத்தகவலின் அடிப்படையில் பொலிசார் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று சுற்றி வளைத்துள்ளார்கள். இந்த நிலையில் முதரை மரங்களை தறித்து அரிந்து கொண்டு இரந்த சந்தேக நபர்கள் 7 பேர் கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடம் இருந்து இயந்திவாள் மற்றும் முதிரை மரங்களும் கைப்பற்றப் பட்டன.





மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அண்மையில் முத்தமிழ்விழா இடம்பெற்றது. முதலாது படத்தில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதினையும் இரண்டாவது படத்தில் மாணவன் ஒருவர் கௌரவிக்கப்படுவதையும் மூன்றாவது படத்தில் அங்கு இடம்பெற்ற கலை நிகழ்வுக் காட்சி ஒன்றினையும் காணலாம். (அளவெட்டி நிருபர்)

v.B.புரியும் ஒருசீர்திடநிலையுடன் தொடர்பான மூன்று முக்கிய தொழில்களைக் குறிப்பிடுக.

vi.படத்தில் உள்ள அகஞ்சுரக்கும் அங்கங்களாக செயற்படும் கட்டமைப்புகள் யாவை? அவற்றில் சுரக்கப்படும் ஓமோன் ஒன்றைப் பெயரிடுக.

| கட்டமைப்பு | ஓமோன் |
|---|---|
| 1. ........................................ | ............................ |
| 2. ........................................ | ............................ |
| 3. ........................................ | ............................ |

C.i.நைதரசன் கழித்தல் என்றால் என்ன?

ii.ஒரு விலங்கு கழிக்கும் நைதரசன் கழிவு எதில் முக்கியமாகத் தங்கியுள்ளது?

iii.விலங்குகள் கழிக்கும் பிரதான நைதரசன் கழிவுப்பொருட்கள் 3 குறிப்பிடுக.

iv. நீங்கள் (iii) இல் குறிப்பிட்ட கழிவுப் பொருட்களை அவற்றின் நச்சுத்தன்மையின் ஏறுவரிசைக்கேற்ப குறிப்பிடுக.

v.இவற்றுள் அதிக எண்ணிக்கை காபன் விரையமாவது எதை கழிக்கும் போது ஆகும்?

vi.இவற்றுள் குறைந்த சக்தி செலவிடப்பட்டுவது எதை கழிக்கும் போது ஆகும்?

vii.பின்வரும் விலங்குகளின் பிரதான கழிவங்கத்தைப் பெயரிடுக.

1. Neries - ..........................................................................................

2. Bipalium - ..........................................................................................

3. நண்டு - ..........................................................................................

4. வெட்டுக்கிளி - ..........................................................................................

5. திருக்கை - ..........................................................................................

viii.மனிதனின் சிறுநீரகத்தி ஒன்றின் போமனின் உறையும், கலன் கோளமும் ஒன்றாக எவ்வாறு அழைக்கப்படும்?

ix.நீங்கள் (viii) இல் குறிப்பிட்ட கட்டமைப்பின் தொழில் யாது?

x.சிறுநீரகத்தியின் போமனுறை தவிர்ந்த எந்தக் கட்டமைப்பில் ஒரு போதும் நீர் மீளவகத்துறிஞ்சப்படுவதில்லை?

xi.புரத உணவு அதிகம் உட்கொள்வதனால் சிறுநீரகத்தில் ஏற்படக்கூடிய பாதிப்பொன்றைக் குறிப்பிடுக.

(மிகுதி அடுத்த வாரம் தொடரும்)

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 25.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

25-07-2012

# கல்வி ஒளி

தமிழ்நாதம்



மாணவர் உலகின் கலங்கரைவிளக்கம் கல்வி - 01 ஒளி - 06




ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்கொள்ளவிருக்கும் மாணவர்களுக்காக...

நேரம்: 45 நிமிடம் பகுதி I ஆசிரியர்: திரு.U. வதன் (B.A. Hons)

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்**

01ஆம், 02ஆம் வினாக்களில் முதலாவது படத்துடன் தொடர்பற்ற படத்தை தெரிவு செய்க.

01.  (i)  (ii)  (iii)  (iv) 

02.  (i)  (ii)  (iii)  (iv) 

03ஆம், 04ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள வாக்கியங்களை வாசிக்கும்போது கருத்துள்ள வாக்கியம் உருவாகும். அதனை ஒழுங்குபடுத்தினால் அமையும் சரியான முறை

03. A - பட்டத்தின் நூல் அறுந்தது
B - இருவரும் சேர்ந்து பட்டம் கட்டி ஏற்றினார்கள்
C - காற்று வேகமாக வீசியது
D - இருவருக்கும் மிகவும் துக்கமாயிருந்தது
E - நிமல் தனது நண்பனை அழைத்தான்

1. CADBE 2. EBCDA 3. EBCAD

04. A - ஒருவர் மரத்தில் ஏறினான்
B - கரடி ஒன்று ஓடி வந்தது
C - நண்பர்கள் இருவர் காட்டுக்குச் சென்றனர்
D - மற்றவன் பிணம் போல கிடந்தான்
E - கரடி அவ்விடத்தை விட்டு சென்றது

1. CBDAE 2. CBADE 3. CBAED

05. 243, 281, 261, 252 இவ்வெண்களை இறங்கு வரிசையில் எழுதினால்
1. 281, 252, 261, 243 2. 281, 261, 252, 243 3. 281, 261, 243, 252

06. "தலை மறைதல்" என்பது
1.தெரிதல் 2.தோன்றுதல் 3.ஒளிந்திருத்தல்

07. "பூசி மெழுகுதல்" என்பது
1.கற்பனை செய்தல் 2.குற்றத்தை மறைத்தல் 3.சிறந்த வழி

08ஆம், 09ஆம், 10ஆம் வினாக்களுக்கு கீழுள்ள தரவை அவதானித்து விடை தருக.






08.பந்து ஒன்றின் விலை என்ன?
1.ரூ.50.00 2.ரூ.48.00 3.ரூ.45.00

09.துடுப்பு மட்டை ஒன்றின் விலை என்ன?
1.ரூ.255.00 2.ரூ.265.00 3.ரூ.245.00

10.மூன்று பந்துகளும் இரண்டு தொப்பிகளும் வாங்கும் ஒருவர் வியாபாரிக்கு 500 ரூபா கொடுத்தால் அவருக்கு கிடைக்கும் மிகுதிப்பணம் யாது?
1.ரூ.248.00 2.ரூ.243.00 3.ரூ.266.00

11.வடக்கு நோக்கி 100m சென்று ஒருவர் இடதுபக்கம் திரும்பி 75m சென்று மீண்டும் வலது பக்கம் திரும்பி 100M சென்று இடப்பக்கம் திரும்பி நிற்கின்றார் எனின் அவர் நிற்கும் திசை யாது?
1.தெற்கு 2.கிழக்கு 3.வடக்கு


12.

அருகில் உள்ள கடிகாரம் காட்டும் நேரத்தை டிஜிற்றல் நேரத்தில் எழுதினால்
1.13.15 மணித்தியாலம் 2.01:15 மணித்தியாலம்
3.13:15 மணித்தியாலம்

13.

இவ்வுருவில் காணக்கூடிய சதுரங்கள் எத்தனை ?
1.9 2.14 3.13

14ஆம், 15ஆம் வினாக்களில் அகர வரிசைப்படி, அமைந்துள்ள விடையின்கீழ் கீறிடுக.
1.அமல், இனியன், உதயன், எழில்
2.இந்து, பாலன், யமுனா, அன்பு
3.ஏழில், தயா, விமல், ஐயர்

15. 1.நாய், யானை, நரி, ஒட்டகம்
2.அங்கே, சுட்டி, உரல், ஔடதம்
3.ரகசியம், பாடம், மாலை, காரியம்


கீழே தரப்பட்ட விளக்கத்திற்கு ஏற்ப கட்டங்களை நிரப்புக.




**இடமிருந்து வலம்:**
16.பறவைகள் வாழுமிடம்
17.நகர்ந்து செல்லும்
**மேலிருந்து கீழ்:**
18.தும்புத்தடி செய்ய பயன்படும்



2.C.iii.தாவர கட்டமைப்பு ஒன்றின் நுணுக்குக்காட்டிப் படம் கீழே தரப்பட்டுள்ளது





1.படத்தில் காட்டப்பட்டுள்ள கட்டமைப்பை இனங்காண்க.

2.A - E வரையிலான பகுதிகளைப் பெயரிடுக.

3.B எனும் கட்டமைப்பு அதன் தொழிலை வினைத்திறனாக நிகழ்த்துவதற்காக காட்டும் இசைவாக்கங்கள் மூன்று குறிப்பிடுக.

3.A.i. நரம்புத்தொகுதியின் ஒட்டுமொத்தமான தொழில் யாது?
ii. தெறிப்பு வில் என்றால் என்ன?
iii.தெறிப்பு வில் ஒன்றின் முக்கிய கூறுகள் ஐந்தினையும் பெயரிடுக
iv.தாக்கவமுத்தம் என்றால் என்ன?
v.இடம்பெயரும் தாக்க வமுத்தம் எவ்வாறு அழைக்கப்படும்?
vi.தாக்கவமுத்தம் ஒன்று தூண்டப்பட்டதும் ஒரு நரம்பு மென்சவ்வில் ஏற்படும் தொடர் நிகழ்ச்சிகள் மூன்றும் யாவை?
vii.ஓய்வமுத்தத்திற்கு பொறுப்பான அயன்கள் மூன்று குறிப்பிடுக.
viii.தாக்கவமுத்தத்துக்குப் பொறுப்பான முக்கிய அயன் எது?
ix.அதிமுனைவாக்கலுக்குப் பொறுப்பாக உள்ள முக்கிய அயன் யாது?
x.மயலீன் ஏற்றப்பட்ட நரம்பு நார் ஒன்றின் வழியே செல்லும் கணத்தாக்கத்தின் வேகம் யாது?

B.மனிதனின் சமிபாட்டுத் தொகுதியின் படம் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது




i.A - E வரையிலான பகுதிகளைப் பெயரிடுக.
ii.A யின் சுவரை ஆக்கும் நான்கு படைகளையும் பெயரிடுக.
iii.C ஐ தாக்கும் ஓமோன் ஒன்றைப் பெயரிடுக.
iv.B இன் அமைவிடத்தைக் குறிப்பிடுக

41.பஞ்சாங்கத்தில் அடங்காதது
1.வாரம் 2.திதி 3.நட்சத்திரம் 4.யோகம் 5.கிரணம்

42.முதல் பஞ்சாங்கம் எழுதியவரும் காலமும்
1.ஆரியப் பட்டர் - குப்தப் பேரரசு
2.ஆரியப் பட்டர் - மகதப் பேரரசு
3.வராகி மிகிரர் - குப்தபேரரசு
4.கௌசிகர் - மகதப்பேரசு
5.வசிட்டர் - வேதகாலம்

43.யசுர்வேத உபநிடதங்களின் எண்ணிக்கை
1.10 2.19 3.27 4.16 5.31

44.யாகங்களுள் முக்கியமானது
1.வாஜமேயம் 2.இராஜசூயம் 3.சௌத்திராமணி 4.சோமயாகம் 5.புத்திரகாமேஷ்டி

45.இந்து சமூக நன்மைக்காக பிரயோகிக்கப்படும் பௌஷ்டி காணி என்னும் மந்திரங்களைக் கொண்ட வேதம்
1.இருக்கு 2.யசுர் 3.சாமம் 4.அதர்வம் 5.உபநிடதம்

46.இந்து சமூகத்தில் பெண்களுக்காக பிரயோகிக்கப்படும் மந்திரம் கூறும் பகுதி
1.இராஜகர்மாணி 2.ஆயுஷ்யானி 3.பௌஷ்டிகாணி 4.ஸ்திரீகர்மாணி 5.பேசஜானி

47.வேதாங்கங்களில் அடங்காதது
1.பிராமணங்கள் 2.நிருத்தம் 3.சந்தஸ் 4.சோதிடம் 5.கற்பம்

48.வேதாந்த சாஸ்திரம் எனப்படுவது
1.வேதத்தின் விளக்கம் 2.உபநிடதங்களின் விளக்கம் 3.பிராமணங்களின் விளக்கம்
4.உபநிடதத்தின் விரிவு 5.மந்திரத்தின் விரிவு

49.இருக்கு வேதம் பிராமணங்கள் அடங்கும் தொகுதி
1.கோபதம் வம்சம் 2.ஆர்சேயம் தைவதம் 3.ஐதரேயம், கௌசிக்கியம்
4.தைத்திரியம், காணவசாகியம் 5.சௌநகம், பிப்பலாதம்

50.அரசின் முழுமையான தன்மையைக் குறிப்பது
1.ஜனங்கள் 2.மண்டலம் 3.சப்தாங்கம் 4.தண்டம் 5.மத்ஸ்யநிபாயம்

கடந்த வாரம் வெளியாகிய க.பொ.த உ/த இந்து நாகரீகம் பகுதி-1 முப்பது வினாக்களுக்குரிய விடைகள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 1. 1 | 7. 2 | 13. 3 | 19. 1 | 25. 1 |
| 2. 5 | 8. 3 | 14. 4 | 20. 4 | 26. 1 |
| 3. 3 | 9. 1 | 15. A | 21. 3 | 27. 4 |
| 4. 3 | 10. 2 | 16. B | 22. 4 | 28. 3 |
| 5. 1 | 11. 1 | 17. 2 | 23. 1 | 29. 4 |
| 6. 2 | 12. 2 | 18. 2 | 24. 3 | 30. 4 |

A.தஞ்சை பெரிய கோயில்
B.இராஜசிம்மன்




19ஆம், 20ஆம் வினாக்களில் சரியான விடையை தெரிவு செய்க.

19.முயல் சாதுவானது எனின் சிங்கம்
1.தந்திரமானது 2.பயங்கரமானது 3.மிருகம்

20.இலங்கை தீவு எனின் ஆபிரிக்கா
1.நாடு 2.கண்டம் 3.சமுத்திரம்

21.உருவின் சுற்றளவு யாது?




1.14cm 2.20cm
3.28cm

22.வெற்றுக் கூட்டுக்கு பொருத்தமான எண்ணை தெரிந்து அதன்கீழ் கீறிடுக.

6999 → 9996 → 6699 → [ ]

1.6669 2.9966 3.9996


23. 360 → 603 → 306 → 063 → 725 → [ ]

1.752 2.257 3.527

24.சரியான ஒழுங்கில் அமைந்த சொற்கூட்டம்
1.மாகாண சபை → பிரதேச சபை → நகர சபை → பாராளுமன்றம்
2.நகர சபை → மாகாண சபை → பிரதேச சபை → பாராளுமன்றம்
3.பிரதேச சபை → நகர சபை → மாகாண சபை → பாராளுமன்றம்

25.1.அப்பா, அம்மா, மகன், தாத்தா
2.தாத்தா, அப்பா, அம்மா, மகன்
3.தாத்தா, அப்பா, மகன், அம்மா

26ஆம், 27ஆம், 28ஆம் வினாக்களுக்கு வரைபை அடிப்படையாக கொண்டு விடையை தெரிவு செய்க.







26.நாற்று மேடையில் இருந்த மாங்கன்றுகள் 60 எனின் தோடைக்கன்றுகள் எத்தனை?
1.240 2.100 3.120




27.மாங்கன்றை விட ரம்புட்டான் கன்றுகள் எத்தனை மடங்கு அதிகமாக உள்ளன.
1.இரு மடங்கு 2.மும்மடங்கு 3.நான்கு மடங்கு

28.மாங்கன்று ஒன்றின் விலை ரூ.40 எனின் நாற்று மேடையில் காணப்பட்ட மாங்கன்றின் பெறுமதி யாது?
1.ரூ.2400 2.ரூ.3000 3.ரூ.6000

29.பழம் - தோடை - பலகாரம்

1. 
2. 
3. 

30.திட்டமிடல் - அமைத்தல் - வீடு

1. 
2. 
3. 

31.சமநிறையுடைய இரு கோழியின் நிறை 5Kg 300g எனின் அதே நிறையுடைய 3 கோழிகளின் நிறை யாது?
1.7Kg 950g    2.7Kg 750g    3.7Kg 850g

32..3 நாட்களுக்கு முன்னர் செவ்வாய்க் கிழமை எனின் நாளை மறுதினம் என்ன கிழமை
1.ஞாயிறு    2.திங்கள்    3.புதன்

33.மாணவன் ஒருவன் புத்தகம் ஒன்றின் 35ஆம் பக்கம் முதல் 52ஆம் பக்கம் வரையும் 70ஆம் பக்க முதல் 86ஆம் பக்கம் வரையும் வாசித்தான் அவன் வாசித்த மொத்த பக்கங்கள் எத்தனை?
1.243 பக்கங்கள்    2.35 பக்கங்கள்    3.37 பக்கங்கள்

34ஆம், 35ஆம் வினாக்களில் கீழே உள்ள தரவை வாசித்து விடையை தெரிக.

**நானும் அம்மாவும் கடைக்கு சென்றபோது எனது மாமாவையும் மாமியையும் சந்தித்தோம் அவர்கள் தனது மகள் பிரியாவை வைத்தியசாலைக்கு கூட்டிச் செல்வதாக மாமா கூறினார்.**

34.மேலே உள்ள பந்தியில் எத்தனை நபர்கள் சம்பந்தப்படுகின்றனர்
1.4 பேர்    2.5பேர்    3.6பேர்

35.நான் பிரியாவை எவ்வாறு அழைக்க வேண்டும்
1.சகோதரி    2.மருமகள்    3.மச்சாள்

36.நிமாலின் அம்மா வார்த்தை மீறமாட்டாள் அதன்படி அவன் ஒரு
1.சோம்பேறி    2.அவள் சுயநலவாதி    3.அவள் கீழ்படிவுள்ளவள்

37.கமலுக்கு அதிர்ஸ்டலாபச் சீட்டில் பெருந்தொகையான பணம் கிடைத்தது அதன்படி
1.அவன் தந்திரமானவன்    2.அவன் அதிர்ஸ்டக்காரன்    3.அவன் பணக்காரன்

38.எனது வயது 9ஆகும். எனது தம்பியின் வயது 6 ஆகும். தம்பியின் வயதின் இருமடங்கிற்கு சமனாக நான் அடைய எத்தனை வருடங்கள் ஆகும்?
1.மூன்று வருடங்கள்    2.நான்கு வருடங்கள்    3.ஆறு வருடங்கள்

39ஆம்,40ஆம் வினாக்களுக்கு பின்வரும் கூற்றை வாசித்து சரியான விடையை எழுதுக

39.முதலாவது எழுத்து கொடியில் உண்டு செடியில் இல்லை
இரண்டாவது எழுத்து குழுவில் உண்டு குடியில் இல்லை
மூன்றாவது எழுத்து பாம்பில் உண்டு பாட்டில் இல்லை
நான்காவது எழுத்து புலியில் உண்டு கிலியில் இல்லை
அச்சொல் யாது? (..........................................)

40.முதலாவது எழுத்து வெறுப்பில் இல்லை பொறுப்பில் உண்டு
இரண்டாவது எழுத்து அம்மாவில் உண்டு அப்பாவில் இல்லை
மூன்றாவது எழுத்து தொப்பையில் இல்லை வறுமையில் உண்டு
அச்சொல் யாது? (..........................................)





(கடந்த வாரத் தொடர்ச்சி)

ஆசிரியர்: செ.கந்த சத்தியதாசன்

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக**
**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

31.தென்கிழக்காசிய நாடுகள் அடங்கும் தொகுதி
1.மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து    2.சம்பா, சம்பூர், நியூலாந்து    3.வியட்னாம், பர்மா, அவுஸ்ரேலியா
4.யப்பான், பாலித்தீவு, நயினாதீவு    5.பர்மா, தாய்லாந்து சீனா

32.தமிழ்ப் புராணங்கள் அடங்கும் தொகுதி
1.கந்த புராணம், பிரம புராணம், விஷ்ணு புராணம்
2.பாகவத புராணம், கருட புராணம், பெரிய புராணம்
3.வராக புராணம், வாமன புராணம், திருத்தொண்டர் புராணம்
4.கந்த புராணம், பெரிய புராணம், திருவாதவூரடிகள் புராணம்
5.பவிஷ்ய புராணம் மார்க்கண்டேய புராணம், நகுலகிரிப் புராணம்

33.நாவுக்கரசரின் அற்புதங்கள் அடங்கும் தொகுதி
1.தாளம், படிக்காசு பெறல், எலும்பைப் பெண்ணாக்கல்
2.முத்துச் சின்னம், குடை, சிவிகை பெற்றமை
3.முதலைவாய்ப்பிள்ளை மீட்டமை, பொன், கண்பெற்றமை
4.பரி நரியாக்கியமை, மண் சுமந்தமை, வைகை பெருக்கெடுத்தமை
5.சூலைநோய் நீங்கியமை, கல்மிதந்தமை, கதவு திறந்தமை

34.அஷ்டப்பிரகரணங்கள் அடங்கும் தொகுதி
1.தத்துவப் பிரகாசிகை, தத்துவ சங்கிரகம், கொடிக்கவி
2.போக காரியை, நாதகாரியை நெஞ்சுவிடுதூது
3.சிவப்பிரகாசம், திருவருட்பயன், சிவஞானபோதம்
4.நாத காரியை போக காரியை, இரத்தினத் திரயம்
5.யோககாரியை, மோட்ச காரியை, பரமோட்சநிராக காரியை

35.அர்த்த நாரீஸ்வரர் வடிவத்துடனும் லிங்கோற்பவ வடிவத்துடனும் தொடர்புடையவர்கள்
1.திருமால் பிரமன் இந்திரன்    2.பிருகு பிரமன் இந்திரன்    3.பிருகு திருமால் பிரமன்
4.வசிட்டர் பிரமன் பிருகு    5.அகத்தியர் நந்தி கண்ணப்பர்

36.தாருகாவனத்து ரிஷிகளின் கர்வம் அடக்கியமையில் இந்தரிசிகள் எத் தத்துவப்பிரிவைச் சேர்ந்தவர்கள்?
1.சாங்கியம்    2.நியாயம்    3.மீமாம்சகர்
4.அத்வைதம்    5.சைவசித்தாந்தம்

37.எத்துணைதூரம் திருப்பித்திருப்பிப் படிக்கினும் கேட்பினும் தெவிட்டாத தெள்ளமுது என நாவலர் போற்றிய நூல்
1.பெரியபுராணம்    2.சிவஞானபோதம்    3.திருவிளையாடற் புராணம்
4.பெரிய புராண ஆசனம்    5.கந்தபுராணம்

38.திருமுறைகண்ட புராணத்தைப் பாடியவர்
1.நக்கீரர்    2.பராசரர்    3.நம்பியாண்டர் நம்பி    4.உமாபதி    5.சேக்கிழார்

39.திருவதிகையில் நடைபெற்ற அட்டவீரட்டச்செயல்
1.முப்புரம் எரித்தது    2.பிரமன் சிரம்கொய்தது    3.இயமனை காலால் உதைத்தது
4.அந்தகாசுரனைச் சங்கரித்தது    5.காமனைக் காய்ந்தது

40.மத்தம் மதயானை உரிபோர்த்த செயல் நடைபெற்ற சட்டவீரட்டானம்
1.திருக்கோவில்    2.திருக்குறுக்கை    3.திருப்பறியலூர்    4.திருவழுவூர்    5.திருவிற்குடி



# பெண் ஏன் ஒடுக்கப்பட்டாள்..?

எழுச்சிகளும் புரட்சிகளும் காலங்காலமாய் இருந்து வந்தாலும் இன்னும் பெண்ணை இரண்டாந்தரப் பிரஜையாக எண்ணும் மனப்பாங்கு சமூகத்தில் இருந்து விலகவில்லை. பெண்ணின் தனிப்பட்ட சுதந்திரத்தில் தலைப்போடும் நிலையும் மாறவில்லை. அவளின் அசைவுகள் கூட அலசப் படுகின்றன. உடைகள் பற்றிப் பேசப் படுகின்றன. அணிகலன்கள் பற்றி ஆராயப் படுகின்றன.

பெண்களை நாங்கள் வெளியில் போக விடுகிறோம். விரும்பிய உடைகளை அணிய விடுகிறோம். பல்கலைக்கழகம் வரை படிக்க விடுகிறோம். வேலை செய்ய விடுகிறோம். ஏன்.. கணினியில் கூட எழுத அனுமதிக்கிறோம். இன்னும் என்ன வேண்டுமென்று இவர்கள் ஆர்ப்பாட்டக் கொடி பிடிக்கிறார்கள்.. என்ற ஆணாதிக்கம் தொனிக்கும் கேள்விகள் கூட சில ஆண்களிடம் இருந்து சினத்தோடு எழுகின்றன.


பெண்விடுதலை என்றால் என்ன? அதன் தார்ப்பரியம் என்ன? என்பவை பற்றி சில ஆண்களுக்கு மட்டுமல்ல, பல பெண்களுக்குமே புரியவில்லை.

இன்றைய காலகட்டத்தில் பெண்கள் வெகுவாக முன்னேறி விட்டார்கள்தான். அதை யாரும் இல்லையென்று சொல்ல முடியாது. தனது பதினோராவது வயதிலேயே பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு தாய்மை என்னும் புனிதத்தையோ அன்றிப் புளகாங்கிதத்தையோ உணர முடியாத குழந்தைப் பருவத்தில் ஒரு குழந்தையைத் தான் சுமந்து தாயான லிபேரியக் கறுப்புஇன இளம் பெண்போராளி ஒருத்தி சொல்கிறாள் ஒரு ஆணை விட ஒரு பெண்ணினால்தான் முழுமன ஈடுபாட்டுடனும் வீரியத்துடனும் புத்தி சாதுரியத்துடனும் போராட முடியுமென்றும் ஒரு ஆணை விடப் பெண்ணிடம்தான் வலிமை அதிகம் என்றும்.

அது உண்மைதான். பெண்களின் பங்கு என்பது உலகில் மிக முக்கியமானது.அவர்கள் இல்லாமல் ஆண்களால் பெரிதாக எதையும் சாதித்து விட முடியாது.

இருந்தும் பெண் ஏன் அடக்கப் பட்டாள்..? ஏன் ஒடுக்கப் பட்டாள்..?

ஆதிகாலத்தில் வேட்டையாடு




வதற்காகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ மனிதர்கள் காடு மேடு கடந்து பல தூரங்களுக்குப் போக வேண்டிய நிலையும், போனவர்கள் அன்றே திரும்ப முடியாமல் போன இடத்திலேயே தங்க வேண்டிய நிலையும் இருந்தன. இந்த சந்தர்ப்பங்களில் அவர்கள் தம்மை விடப் பலமான விலங்குகளிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ள வேண்டிய கட்டாயமும் இருந்தது. இங்குதான் பெண்கள் மெதுமெதுவாக வீட்டுக்குள் ஒடுங்க வேண்டிய காரணி உருவாகத் தொடங்கியது.

குழந்தை பிறந்திருக்கும் சமயங்களில் பெண்களில் குருதி வாடையும், பால் வாடையும் இருக்கும். அதே போல மாதா மாதம் வெளியேறும் சூல்முட்டைகளின் காரணமாகவும் பெண்களில் அந்த நாட்களில் குருதி வாடை இருக்கும். இந்த வாடையை முகர்ந்தறிந்து மனிதர்களின் இருப்பிடத்தையோ அல்லது வரவையோ அறிந்து கொள்ளும் திறன் விலங்குகளுக்கு உண்டு.

ஆரம்பத்தில் பெண்கள் ஆண்கள் என்று எல்லோரும் ஒன்றாகச் சென்று வேட்டையாடி, ஒன்றாக உண்டு, போற போற இடங்களிலேயே குழந்தைகளைப் பெற்றெடுத்துத்தான் வாழ்ந்தார்கள். ஆனால் எவ்வளவு பாதுகாப்பாக ஒழிந்திருந்தும் எப்படி விலங்குகள் தம்மைக் கண்டு பிடித்து அழிக்கின்றன என்ற ஆராய்ச்சியை அவர்கள் மேற்கொண்ட போதுதான் இந்தக் குருதி வாடையை வைத்து விலங்குகள் தம்மை மோப்பம் பிடிப்பதை அறிந்து கொண்டார்கள்.

அதன் பிறகுதான் அந்தக் குறிப்பிட்ட நாட்களில் பருவமெய்திய பெண்களையும், குழந்தை பெற்ற பெண்களையும் வீட்டிலே விட்டு மோப்பம் பிடித்து வரக் கூடிய விலங்குகளால் அவர்களுக்கு எந்த வித ஆபத்துக்களும் ஏற்படாவண்ணம் காவலும் வைத்து விட்டு மற்றவர்கள் வேட்டைக்குச் சென்றார்கள்.

இது மனிதர்கள் மத்தியில் மட்டுமல்ல. விலங்குகளிடமும் இருந்தது. மிக மிக ஆதிகாலத்திலிருந்தே தம்மை விடப் பலமான விலங்குகளிடமிருந்து தம்மைக் காத்துக் கொள்ள குட்டி போட்ட பெண் விலங்குகளை தமது இருப்பிடங்களில் விட்டுப் போக வேண்டிய கட்டாயம் விலங்குகளுக்கும் இருந்தது.

இந்த விலங்குகளிடமிருந்தான பாதுகாப்புத் தேடல்தான் மெது மெதுவாக பெண்கள் வீட்டுக்குள் முடங்க வேண்டியதொரு நிலைப்பாட்டை ஏற்படுத்தத் தொடங்கியது.

சந்திரவதனா

# பெண்ணே பெண்ணே பொறாமை வேண்டாம்!

பொறாமை பெண்களின் கூடப் பிறந்த குணங்களில் ஒன்று. பொறாமை என்பது ஒருவித மனநோய் என்றுதான் கூற வேண்டும். தான் பெறாத ஒன்றை பிறர் பெறும் போது ஏற்படும் ஒருவகை உணர்வே பொறாமை உணர்வாகும். சிலர் தாம் பெற்றிருப்பதைத் தனக்குக் கீழே உள்ளவர்கள் பெறும் போதும் பொறாமை கொள்வர்.

பெண்களின் பொறாமைக் குணம் ஆச்சர்யமானது. பொறாமை நெருக்கமானவர்களுக்கு மத்தியில் தான் ஏற்படும். அமெரிக்காவில் இருக்கும் ஒருவன் மீது இலங்கையில் இருப்பவன் பொறாமை கொள்ள மாட்டான். அடுத்து ஒரே துறையில் இருக்கும் இருவருக்கிடையே தான் பொறாமை ஏற்படும். ஆனால் பெண்களின் பொறாமை ஆச்சர்யமானது.

தனது சகோதரிக்கு அழகிய கணவன் கிடைத்திருக்கிறான் என்று பொறாமை கொள்ளும் பெண்கள் இருக்கின்றனர். சில பெண்கள் தமது குடும்ப வாழ்வில் பல சிரமங்களை சந்தித்திருப்பர். கணவனால் காட்டுமிராண்டித் தனமாகத் தாக்கப்பட்டிருப்பர். இவர்கள் தங்களது மருமகள்களைப் பார்க்கின்றனர். தமது மகன்கள் அவர்களை அடிப்பதில்லை,



தமது மருமகள் தாம் அனுபவித்த கட்டங்களை அனுபவிக்காமல் மகிழ்வாக வாழ்வதைப் பார்க்கும் போது சில மாமிகளுக்குப் பொறாமை ஏற்படுகின்றது.

இந்த சந்தர்ப்பத்தில் அந்தப் பெண் பெரும் இன்பத்தை நிறுத்த ஏதேனும் செய்ய முடிந்தால் செய்வார்கள். அப்படி இல்லையென்றால் புறம் பேசி, கோள் சொல்லி அல்லது அவதூறு கூறி அவளது கௌரவத்தைக் குறைக்க முயல்வார்கள். இந்தப் பொறாமைக் குணத்தால் மன அமைதி கெடுகின்றது.

நீங்கள் பொறாமைக்காரியாக இருந்தால் உங்கள் நிம்மதியையும் மன அமைதியையும் நீங்களே கெடுத்துக் கொள்வீர்கள். நீங்கள் யார் மீது பொறாமை கொள்கிறீர்களோ அவர்கள் சந்தோசப்படும் போதெல்லாம் உங்களுக்குக் கவலையை ஏற்படும். இது தேவை தானா?

உங்களோடு கூட இருப்பவர்கள் வாழ்வில் சந்தோசங்களை அனுபவிக்கும் போது அவர்கள் மீது பொறாமை கொள்வதை விட்டு விட்டு அவர்களை வாழ்த்தக் கற்றுக் கொள்ளுங்கள். உங்களுக்குக் கிடைக்காதது உங்கள் தோழிக்கோ உறவுக்காரப் பெண்ணுக்கோ கிடைத்திருக்கிறதே என்று மகிழ்ச்சி கொள்ளுங்கள்.

## பெண்

இந்த தாய்மையின்
பள்ளயான கசிவுகளில்
ஊற்றாய் சுரக்கிறது
வாழ்க்கை...
தொப்புள் கொடியின் சுருளில்
வெட்டி விலக்கிய நுனியில்
வலித்தது இதயம் , பீச்சிப்புது
குருதி
புலம்பிய மனதின் ஓலத்தின்
நிழலாக
தொடரும் சுகம்............
"நாளை பேசும்"

என்ற எதிர்பார்ப்பு நம்பிக்கை
நகரும் பயணத்தில்
நடை போடுகிறது வாழ்க்கை..
வீதியில் அகதி முகாம்களில்
வாழும் பெண்களின் பேச்சு
அனுதாபங்களாய் மாறுகிறது....

'பெண்கள் நாட்டின்
கண்களென்று'
வார்த்தைகள்.. .....
புகழ்ச்சிகள்...... ..
பாராட்டுக்கள்... ......
பேசப்படுகிறது........

பெண்ணுக்கு
பாதுகாப்பு

எப்போது வரும்!
பெண்களை
பாதுகாப்பது யார்.......?
பெண்மை வாழ்கவென்று
கூத்திடுவோமடா!

பெண்மை, வெல்கென்று
கூத்திடுவோமடா"

ஏட்டையும் பெண்கள் தொடுவது
தீமை என்று

எண்ணி இருந்தவர் மாய்ந்து
விட்டார்

(பாரதியார்)



**புல்** வெளியிலே சிறிது தூரத்தில் ஒரு பெரிய மேடு இருந்தது. அங்கிருந்து பார்த்தால் பண்ணை பூராவும் தெரியும். மிருகங்கள் எல்லாம் ஓடிப்போய் அந்த மேட்டின் மேலே நின்று பளிச்சென்று அடித்த காலை வெய்யில் ஒளியிலே சுற்று முற்றும் பார்த்தன. ஆம். அந்தப் பண்ணை பூராவும் மிருகங்களுடையதாகி விட்டது. எல்லாம் மிருகங்களுடையதுதானது, கண்ணுக்கெட்டிய வரையில் எல்லாமே அவற்றின் சொத்துத்தான்.

இப்போது, அந்தச் சிந்தனை தந்த ஆனந்தத்திலே, குதூகலத்திலே அவை ஆனந்த நடனமாடின. குதித்தக் குதித்துக் கும்மாளம் போட்டன. தரையை விட்டு எம்பி எம்பிக் குதித்தன. எகிறிக் குதித்து விளையாடின.

பனியும், புல்லும் நிறைந்த தரையிலே விழுந்து புரண்டன. கோடை காலத்துப் புல்லைக் கடித்து மென்று அசை போட்டன. பூமியின் மணத்தை முகர்ந்து பார்த்தன. கருத்த மண்




ணைத் தங்கள் கால்களால் உதைத்துக் கிளப்பின.

மீண்டும் ஒரு தரம் பண்ணை பூராவையும் சுற்றிப் பார்த்து வந்தன. எல்லாம் எபப்டியிருக்கின்றன என்று பார்வையிட்டன. பேச்சுக் கூட இல்லாமல், அவை வயல் வெளி புல்தரை, பழத்தோட்டம் குளம்-குட்டை எல்லாவற்றையும் பார்வையிட்டு இன்பமுற்றன.

இவற்றையெல்லாம் அவை அதற்கு முன் பார்த்ததே இல்லையோ என்று சொல்லும்படியாகப் புதுக் கண் கொண்டு பார்த்தன. இவையெல்லாம் தங்களுடையதாகிவிட்டன என்பதை அவற்றால் இன்னமும் கூட நம்பமுடியாமல்தான் இருந்தது.

பிறகு அவை வரிசையாகப் பண்ணைக் கட்டிடங்களை நோக்கி நடந்தன. மௌனமாகக் கதவுக்கு வெளியே நின்றன. அந்த வீடும் மிருகங்களுக்குத்தான் சொந்தம். இப்போது, ஆனால் அவை வீட்டிற்கு உள்ளே போகப் பயப்பட்டன.

ஒரு விநாடி தயங்கிய பிறகு ஸ்நோபாலும் நெப்போலியனும் கதவை முட்டித் திறந்து கொண்டு உள்ளே போயின. அவற்றைத் தொடர்ந்து மற்ற மிருகங்களும் ஒன்றன்பின் ஒன்றாக உள்ளே போய்ப் பார்த்தன.

மிகவும் ஜாக்கிரதையாக எதையும் மிதித்து உடைத்துவிடாமல் அவை அடிமேல் அடிவைத்து நடந்தன. இரைந்து கூடப் பேச அவற்றிற்கு மனம் வரவில்லை. அவ்வளவு பயமாக இருந்தது. பயத்துடனும் ஆச்சரியத்துடனும் மனிதனின் படாடோபமான வாழ்வின் சின்னங்களை ஆடம்பரமான பொருள்களை அவை பார்வையிட்டன.

மிருதுவான மெத்தைகளையும், முகம் பார்க்கும் பெரிய கண்ணாடிகளையும், குதிரை மயிர் நிரப்பிய ஸோபாவையும் பார்த்த பிறகும் கூட இத்தனை ஆடம்பரமான பொருள்கள் இருக்கமுடியும் என்று நம்பிக்கை வரவில்லை.

**(நாளை....)**

## விடுகதைகள்




1.அடி மலர்ந்து நுனி மலராத பூ எது?


2.காகிதத்தைக் கண்டால் கண்ணீர் விடும் அது என்ன?

3.காக்கைப் போலக் கருப்பானது, கையால் தொட்டால் ஊதா நிறம், வாயால் மென்றால் நீல நிறம் அது என்ன?

4.தாடிக்காரன், மீசைக்காரன், கோயிலுக்குப் போனால் வெள்ளைக்காரன் அது என்ன?

**விடுகதைக்கு விடை தெரியுமா குழந்தைகளே?**

விடைகள்:
1. வாழைப்பூ 2. பேனா
3. நாவல் பழம் 4. தேங்காய்
5. காய்ந்த மிளகாய்



மனிதனால் எப்படி மூச்சு விடாமல் இருக்க முடியாதோ அது போலவே கண் இமைக்காமலும் இருக்க முடியாது. 6 விநாடிக்கு 7 முறை என்ற விகிதத்தில் கண் இமைத்தல் நிகழ்கிறது.

## புதிர்



**அருண் சொன்னான்:**
"குதிரையின் நிறம் வெள்ளை அல்லது சிவப்பாக இருக்கும்"


ரமேஷ் சொன்னான்:
"குதிரையின் நிறம் வெள்ளை"

**செல்வா சொன்னான்:**
"குதிரையின் நிறம் கறுப்பாக இருக்காது"

அப்போது நாதன் சொன்னான் "நீங்கள் மூவர் சொன்னதில் ஒருவர் சொன்னது தப்பு ஒருவர் சொன்னது சரியானது."

**பதில் :**
குதிரையின் நிறம் கறுப்பு என்றால் மூவர் சொன்னது தவறாகிவிடும். குதிரையின் நிறம் வெள்ளை என்றால் மூவர் சொன்னதும் சரியாகி விடும். 'எனவே குதிரையின் நிறம் சிவப்பு.

# சிறுவர் அமுதம்



**பெயர் : லியானார்டோ டாவின்சி**
**பிறந்த தேதி : ஏப்ரல் 15, 1452**

ஒரு புகழ் பெற்ற இத்தாலிய மறுமலர்ச்சிக் கட்டிடக் கலைஞரும், கண்டுபிடிப்பாளரும், பொறியியலாளரும், சிற்பியும், ஓவியரும் ஆவார். ஒரு பல்துறை மேதையாகக் கருதப்பட்டவர். குறிப்பாக இவரது, சிறப்பான ஓவியங்களுக்காகப் பரவலாக அறியப்பட்டவர். "கடைசி விருந்து", "மோனா லிசா" போன்ற ஓவியங்கள் உலகப் புகழ் பெற்றவை.

## ஒரு தாய் மக்கள்



சின்னப் பிள்ளை நாமெல்லாம்
சிரித்துப் பாடி ஆடலாம்
வண்ணப் பூக்கள் கொய்துவந்து
வாரில் கோத்துச் சூடலாம்!

உண்மை நாளும் பேசுவோம்
உயிரையெல்லாம் நேசிப்போம்
அன்பும் பணிவும் கொண்டவராய்
அவனி மீது வாழுவோம்!

நன்மைகளைப் பேணி நாம்
நாட்டுக்குழைத்தல் கடமையாம்
வன்முறைகள் தேவையில்லை
வாரும் இனிய தோழரே!

இந்து முஸ்லிம் கிறிஸ்தவர்
இவர்களுடன் பௌத்தரும்
வந்து ஒரே அணியில் நின்று
வையம் சிறக்க வாழ்த்துவோம்!

## உங்களுக்கு தெரியுமா?

1.ஒரு ஆண்டில் எத்தனை முறை இரத்தத்தானம் செய்யலாம்?

2.ஜலதோஷத்தின் மருத்துவ பெயர் என்ன?



3.டயாபடீஸ் என்பது எந்த மொழி சொல்லாகும்?

4.காலரா நோயை உண்டு பண்ணும் பாக்டீரியா எது?

5.உலக சுகாதார மையம் எங்கு அமைந்துள்ளது?

பதில்கள்:
1.நான்கு முறை. 2.கொரைஸா.
3.கிரேக்க மொழி,
4.விப்ரியோ காலரே,
5.ஜெனீவா.

## குழந்தைகளே!



3 முதல் 12 வயது ,வரையான பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து தமிழ்நாதத்தில் பிரசுரமாகும். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

ஏதாவதொரு விடயத்தைப் பூர்த்தி செய்தல். அத்துடன் பெயர், ஊர் பிறந்ததினம் என்பவற்றை மாத்திரம் எழுதி உங்கள் புகைப்படத்தையும் இணைத்து எமக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

**சிறுவர் அமுதம், தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

### சுடோக்கு எண் 14 விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | | 9 | 7 | | 8 | |
| | | 7 | | | 5 | | | 9 |
| | 1 | | | | | | | |
| | | 2 | | | 6 | | | 4 |
| 1 | | 3 | | 5 | | 7 | | 2 |
| 4 | | | 7 | | | 6 | | |
| | | | | | | | 3 | |
| 7 | | | 3 | | | 9 | | |
| | 5 | | 4 | 7 | | | | 1 |

### சுடோக்கு எண் 15

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 9 | 8 | 4 | 1 | 2 | 6 | 3 | 5 |
| 1 | 5 | 2 | 3 | 9 | 6 | 8 | 4 | 7 |
| 6 | 4 | 3 | 7 | 5 | 8 | 2 | 1 | 9 |
| 3 | 6 | 9 | 8 | 4 | 7 | 1 | 5 | 2 |
| 4 | 8 | 5 | 9 | 2 | 1 | 7 | 6 | 3 |
| 2 | 1 | 7 | 5 | 6 | 3 | 4 | 9 | 8 |
| 8 | 2 | 6 | 1 | 3 | 5 | 9 | 7 | 4 |
| 5 | 7 | 4 | 6 | 8 | 9 | 3 | 2 | 1 |
| 9 | 3 | 1 | 2 | 7 | 4 | 5 | 8 | 6 |

# இன்று 14ஆவது அகவையில் சூரியன் எப்.எம். வானொலி

இலங்கையின் தனியார் வானொலிகளுள் ஒன்றான சூரியன் எப்.எம் இன்று (25.07.2012) 14ஆவது ஆண்டை நிறைவுசெய்து கொள்கிறது.

சூரியன் எப்.எம். வானொலிச் சேவையின் தலைமைப் பொறுப்பதிகாரி எஸ். நவநீதன், இது தொடர்பான தகவல் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் ஒலிபரப்புத்துறை வரலாற்றில் இரண்டாவது தனியார் தமிழ் வானொலியாக 1998 ஜூலை 25ஆம் திகதியன்று தோற்றம் பெற்ற சூரியன் எப்.எம் - அதே வேளையில் 24 மணிநேர ஒலிபரப்புச் சேவையாகவும் ஆரம்பமானது என்ற பெருமையையும் பெறுகிறது.

இலங்கையின் சகல பகுதிகளிலுமுள்ள நேயர்களும் தெளிவான ஒலி நயத்துடன் நிகழ்ச்சிகளைக் கேட்க வேண்டும் என்ற நோக்கத்தில் சூரியன் எப்.எம். சக்திவாய்ந்த அலைவரிசைகளின் (பண்பலை) ஊடாக தனது சேவையைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. கொழும்பு மற்றும் தெற்குப் பகுதி நேயர்களுக்காக 103.2, மலையகப் பகுதியைச் சார்ந்த நேயர்களுக்காக 97.3, ஊவா மாகாணம் மற்றும் கிழக்குப் பகுதி நேயர்களுக்காக 103.4 வடபகுதி நேயர்களுக்காக (யாழ்ப்பாணம்) 93 மற்றும் நாடு முழுவதற்குமாக 97.9 ஆகிய பண்பலை வரிசைகளில் சூரியன் எப்.எம். ஒலிபரப்பை மேற்கொண்டு வருகிறது.

பதினான்கு ஆண்டுகளை நிறைவு செய்து கொண்டு பதினைந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் சூரியன் எப்.எம். வானொலி இன்றைய தினம் பல சிறப்பு நிகழ்ச்சியை ஒலிபரப்பவிருப்பதாக எஸ். நவநீதன் தெரிவித்துள்ளார்.

# நல்லூர் கந்தன் மகோற்சவம் ஆரம்பமானது

குடாநாட்டின் சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்தப் பெருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது.

அதிகாலை முதலே விசேட பூசைகள் இடம்பெற்று வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து முருகப் பெருமான் கொடித்தம்பத்துக்கு எழுந்தருள பகல் 10 மணிக்கு கொடியேற்றம் மக்களின் பலத்த அரோகரா கோஷத்தின் மத்தியில் நடைபெற்றது.

பிரதம சிவாச்சாரியர் சிவஸ்ரீ வைகுந்தவாசக் குருக்கள் கொடியேற்றி வைத்தார்.

உற்சவத்தை முன்னிட்டு நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து பெருமளவு மக்கள் உற்சவத்தில் கலந்து கொண்டனர்.

சுமார் ஐயாயிரத்துக்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உற்சவத்தை முன்னிட்டு சுகாதாரம் குடிதண்ணீர் சேவைகளை யாழ்.மாநகர சபை உரிய முறையில் செய்திருந்தது. தொண்டர் சேவைகளும் வழமை போன்று இடம்பெற்றது. (ப)

# இந்துக்கள் மதம் மாறுவதற்கு அவர்களின் அறியாமையும் ஒரு காரணம்

## கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர்

(கிளிநொச்சி)

இந்துக்களை மதம் மாற்ற எடுக்கும் நிலை இன்று காணப்படுகின்றது. இது வருந்தத்தக்க செயலாகும். அத்துடன் மக்களின் அறியாமையும் இதற்கு ஒரு காரணமாகும். இது தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

இவ்வாறு கிளிநொச்சி நகர் அருள்மிகு கிருஸ்ணர் ஆலய மகாகும்பாபிஷேக பெருவிழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சிறீனிவாசன் குறிப்பிட்டார்.

ஆலய பரிபாலன சபையின் தலைவர் சுபசுபதிப்பிள்ளை இந்நிகழ்விற்குத் தலைமை தாங்கினார். ஆசியுரைகளை ஜெயந்தி நகர் மகாதேவா ஆச்சிரம குரு முதல்வர் தவத்திரு கணேசானந்த மகாதேவா சுவாமிகள் மற்றும் கும்பாபிஷேக நிகழ்வின் பிரதிஸ்டா பிரதமகுரு சிவஸ்ரீ.ஜெகதீஸ்வரக் குருக்கள் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.


மேலதிக அரச அதிபர் சிறீனிவாசன் மேலும் பேசுகையில், மதம் மாறுவது பாவப்பட்ட செயலாகும். ஒவ்வொரு மதமும் பக்தி மார்க்கத்தையே வலியுறுத்துகின்றன.

இந்து மதத்தில் உள்ள தத்துவங்கள் உன்னதமானவை. உயர்வானவை. உலகிலே மூத்த மதம் இந்து மதம். சகல மதத்தவர்களுக்கும் அன்பு, கருணை, ஒருவரை ஒருவர் மதித்தல் போன்றவற்றை பின்பற்றினால் மதங்களிடையே புரிந்துணர்வு உருவாகும் என்றார்.

# வருடாந்த மகோற்சவம்


(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஆலடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த திங்கட்கிழமை (23ஆம் திகதி) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் 31ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.



திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ நீலாயதாட்ஷி அம்பாள் ஆலய தேர் திருவிழாவின் போது அம்பாள் தேரில் வீதி உலா வருவதைக் காணலாம்.

# இன்று நல்லைக் கந்தன் இரண்டாம் நாள் மகோற்சவம்




*நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய்*
*நல்ல மனத்தோடு நாம் பணிந்தால் - நல்ல மயில்*
*ஏறிவந்து காட்சி கொடுப்பான் எழில் முருகன்*
*தேறிவிடும் சிந்தை தெளி*

- யோகர் சுவாமிகள்

## வெற்றியை தந்திடும் வேலவன்

*நெற்றிக் கண்ணில் அவதரித்தவனே*
*நெடிய வேலாய் மிளிர்பவனே*
*கற்றோர் விரும்பும் கந்தப்பனே*
*கடம்ப மாலை அணிபவனே*
*வெற்றியைத் தந்திடும் வேலவனே*
*நல்லை நகர்ப்பதி நாயகனே*
*பற்று மடியார் மனங்குளிர*
*நல்லருள் என்றும் தந்திடுவாய்!*

– சைவப்புலவர் செ.மந்திர சத்தியதாசன்.



## நல்லூரிற் கந்தா அருள்வாய்

*முன்னவனே, யாழ்ப்பாண நகர் நல்லூரில்*
*முதியதமிழ் வேலேந்தி வீற்றிருக்கும்*
*முன்னவனே கந்தப்பா மயிலில் ஏறி*
*வலமும் வள்ளி இடம்தெய்வ யானையோடு,*
*பின்னமிலா அடியாரின் குறைகள் தீர்க்கப்*
*பிரகாச தினகரனாய்க் காட்சி நல்கும்*
*அன்னபூரி பூரணியின் மதனே எங்கள்*
*அல்லலெலாம் தீர்க்குமன பிராங்குவாயே!*

- அருட்கவி சீ. விநாசித்தம்பி.



# இன்றைய சிறப்பு நிகழ்ச்சிகள்

## நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்றுவரும் சிறப்பு நிகழ்ச்சித் தொடரில் இன்று சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் "முருகன் பெருமை" என்ற பொருளில் சொற்பொழிவாற்றுகிறார்.

மாலை 3 மணிக்கு ஆரம்பமாகும் இன்றைய நிகழ்வின்போது தொல்புரம் ஆதிமுத்துமாரி அம்மன் அறநெறிப்பாடசாலை, கோண்டாவில் வேதபாராயண அறநெறிப் பாடசாலை மற்றும் ஊர்காவற்றுறை தம்பாட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வுகளும் சிறப்புகளாக இடம்பெறவிருக்கின்றன. (க)

* * * * * * * *

## நல்லூர் நடராஜர் பரமேஸ்வரி மணிமண்டபத்தில்

நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் இடம்பெற்றுவரும் 'தெய்வீகப் பேருரை' நிகழ்ச்சித் தொடரில் இன்று அராலியூர் கே.மங்களமூர்த்தி "வள்ளி திருமணம்" என்ற பொருளில் சொற்பொழிவாற்றுவார்.

மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்வு சைவத் தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் அமைப்பாளர் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் தலைமையில் நடைபெறும். (க)

* * * * * * * *


## நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில்

நல்லூர் இளங்கலைஞர் மன்றம், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்து நடத்தும் தெய்வீக இசையரங்கு நிகழ்ச்சித் தொடரில் இன்று திருமுறைக் கச்சேரி இடம்பெறுகிறது.

மாலை 7 மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்ச்சியில் எஸ்.நித்தியானந்தன் திருமுறைப் பாடல்களைப் பாடுவார் திருமதி வனஜா ஈஸ்வரசர்மா வழங்கும் வயலின், பிரம்மஸ்ரீ என்.சிவசுந்தரசர்மா வழங்கும் மிருதங்கம் ரி.சண்முகசுந்தரம் வழங்கும் கெஞ்சிரா என்பன இடம்பெறும். (க)

# உலக பார்வை

## அறுபது ஆண்டுக்குபின் சீனாவில் மழை வெள்ளம்: 100 பேர் பலி



சீனாவில் இது வரை சந்திக்காக பெரும் மழை வெள்ளத்தினால் 100 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். பலர் தங்களின் வீடுகளை இழந்து வீதிகளில் தவிக்கின்றனர். இயற்கை அழிவில் சிக்கி பாதிக்கப்பட்டோருக்கு மீட்க சீன அரசு சீரமைப்பு பணிகளை முடுக்கி விட்டுள்ளது.

இது போன்ற மழை சீனாவில் பெய்தது இல்லை என்றும் 60 ஆண்டு கால வரலாற்றில் இது போன்ற மழை வெள்ளத்தை பார்த்ததில்லை என்றும் சீனாவின் மூத்த அதிகாரி ஒருவர் கூறினார்.

பெய்ஜீங் அருகே பாங்'ான் பகுதி பெரும் அளவில் பாதிப்புள்ளாகியிருக்கிது. இந்த பகுதியை சேர்ந்த லீ வெண்டே கூறுகையில்: இந்த மழையினால் நான் அனைத்தையும் இழந்து நிற்கிறேன். எனக்கு சாப்பிட வழி இல்லை. தங்க வீடு இல்லை. ஏன் குடிக்க சுத்தமான தண்ணீர் கூட கிடைக்கவில்லை என்றார்.

**60 லட்சம் பேர் பாதிப்பு :** மழையையொட்டி அடித்த கடும் காற்றில் மரங்கள் சாய்ந்து கிடக்கின்றன. 60 லட்சத்திற்கும் மேல் பாதிக்கப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. 500 க்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து செய்யபபட்டுள்ளன. சுமார் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயணிகள் விமான நிலையத்தில் தவித்து வருகினறனர். சீன பொருளாதாரத்தை இந்த மழை சற்று அசைத்து பார்த்திருக்கிறது.

## ஈராக்கில்–107 பேர் பலி

ஈராக்கில் நேற்றுமுன் . 18 இடங்களில் நடந்த வெடிகுண்டு தாக்குதல்களில், 107 பேர் பலியாகினர். ஈராக்கின் வடகிழக்கில் உள்ள உதய்ம் என்ற இடத்தில், மூன்று வாகனங்களில் வந்த பயங்கரவாதிகள், அங்கிருந்த ராணுவ முகாம் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில், கிர்குக் நகரில் ஏழு கார் குண்டுகள் வெடித்துள்ளன. மேற்கண்ட சம்பவங்களில், மொத்தம், 107 பேர் பலியாகியுள்ளனர். 214 பேர் படுகாயமடைந்து உள்ளனர்.



கலிபோர்னியாவில் உள்ள ஒக்லாண்ட் சர்வதேச விமான நிலையத்திற்கு வந்த அமெரிக்க அதிபர் ஒபாமா ஒக்லாண்ட் மேயர் ஜீன் க்வான மற்றும்பிரதிநிதிபார்பராடி.கலிபோர்னியா.ஆகியோருடன் கலந்துரையாடினார்

## திரையரங்கில் துப்பாக்கி சூடு நடத்திய கொலையாளி நீதிமன்றத்தில் ஆஜர்



அமெரிக்க திரையரங்கில் சினிமா பார்த்துக் கொண்டிருந்தவர்கள் 12 பேரை சுட்டுக் கொன்ற கொலையாளி, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

அமெரிக்காவின் கொலராடோ மாகாணத்தின் டென்வர் நகரில், அரோரா என்ற இடத்தில் உள்ள திரையரங்கில், வவ்வால் மனிதனின் கதையை அடிப்படையாகக் கொண்ட "தி டார்க் நைட் ரைசஸ்" என்ற படத்தின் முன்னோட்டக் காட்சி கடந்த 20 ஆம் திகதி திரையிடப்பட்டது.

திடீரென திரையரங்கத்தில் நுழைந்த ஜேம்ஸ் ஹோம்ஸ் (வயது 24) என்ற நபர் புகையிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் முகக் கவசத்தை அணிந்தபடி, பார்வையாளர்களை நோக்கி இயந்திரத் துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டார். இதில் 12 பேர் பலியாயினர். 58 பேர் காயமடைந்தனர்.

இதனையடுத்து கொலையாளி ஜேம்ஸ் ஹோம்ஸ் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். கொலராடோ பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவரான ஜேம்ஸ், நன்றாக படிக்கக் கூடியவர்.

ஆனால் திடீரென கடந்தாண்டு அவர் முனைவர் பட்டப் படிப்பை பாதியில் கைவிட்டதாகவும், தங்களுடன் பழகியவரை நல்லவராகத் தான் இருந்தார் எனவும் அவருடன் படித்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

## சவுதியில் அல்கொய்தா அமைப்புடன் தொடர்புடைய 5 பெண்கள் விடுதலை



அல் கொய் தா அமைப் புடன் தொடர்புடையதாக எழுந்த சந்தேகத் தின் பேரில், கைது செய்த ஐந்து பெண் களை சவுதி நீதி மன்றம் விடுதலை செய்ய உத்தர விட்டது.

கடந்த மார்ச் மாதம் 28ஆம் திகதி ஏமன் நாட்டில் பணியாற்றி வந்த சவுதி துணை தூதரக அதிகாரி அப்துல்லா அல்க ஹாலிதி கடத்தப்பட்டார்.

இவர் கடத்தலில் அல்கொய்தா அமைப்புடன் தொடர்புடையதாக எழுந்த சந்தேகத்தின் பேரில் 5 பெண்களை சவுதி பாதுகாப்புப் படையினர் கைது செய்து, இவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

இந்நிலையில் கடத்தலில் இவர் களுக்கு தொடர்பில்லை என்பதால், விடுதலை செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக உள்துறை அமைச்சக செய்தி தொடர்பாளர் மன்சூர் அல்டர்கி தெரிவித்தார்.

## உலகின் மிக உயரமான பகுதிக்கு சீனாவிலிருந்து பேருந்து சேவை



பூமியின் கூரை என அழைக்கப்படும் திபெத் சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ளது. இங்குள்ள மிக உயரமான பகுதி என்காரி.

கடல் மட்டத்திலிருந்து சுமார் 4,500 மீற்றர் உயரத்தில் உள்ள என்காரி பகுதியில் குக்கிராமங்கள் அதிகம் காணப்படுகின்றன. இந்த பகுதிகளுக்கு தினமும் ஆறு பேருந்துகளை இயக்க சீன அரசு முடிவு செய்துள்ளது.

இதனையடுத்து சென்கி சாங்போ என்ற நகரிலிருந்து, மூன்று தடங்களில் என்காரிக்கு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

ஏற்கனவே திபெத் தலைநகர் லாசாவுக்கும், சென்கி சாங்போ நகருக்கும் நெடுஞ்சாலை அமைக்கப்பட்டுள்ளது.தற்போதைய பேருந்து போக்கு வரத்துக்கு, உள்ளூர் வர்த்தகர் கள் மூலம் 2 கோடி ரூபாய் திரட்டப் பட்டு சாலை வசதி செய்யப்பட் டுள்ளது. இதன் மூலம் இப்பகுதியில் வர்த்தகம் மேம்பாடு அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இரசாயன ஆயுதங்களை வைத்துள்ளோம்: சிரியா அரசு ஒப்புக் கொண்டது



தங்களிடம் இரசாயன மற்றும் உயிரி ஆயுதங்கள் இருப்பதாக சிரியா அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

சிரியாவில் உள்நாட்டு போர் தீவிரமடைந்து வரும் நிலையில், எல்லைப் பகுதிகளை போராட்டக்காரர்கள் கைப்பற்ற முயற்சித்து வருகின் றனர்.

இவர்கள் இராணுவத்திற்கு எதிராக எரிமலை என்ற பெயரில் போராட்டத்தை நடத்தி வருவதாகவும், தங்கள் மீது இரசாயன ஆயுதங்களை உபயோகிக்க அரசு படைகள் முயற்சிப்பதாகவும் குற்றம் சுமத்தினர்.

இது குறித்து சிரியா நாட்டின் வெளியுறவு அதிகாரி ஜிகாத் மக்டிசி குறிப்பிடுகையில், மற்ற நாடுகளின் தாக்குதலை முறியடிக்கவே இரசாயன மற்றும் உயிரி ஆயுதங்களை வைத்திருக்கிறோம். இவற்றை போராட்டக்காரர்கள் மீது பயன்படுத்தும் எண்ணம் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

போராட்டக்காரர்களின் ஆதிக்கம் உள்ள பகுதிகளை நோக்கி இரசாயன ஆயுதங்கள் எடுத்துச் செல்லப்படுவதாக சந்தேகித்த அமெரிக்கா, போராட்டக்காரர்கள் மீது இரசாயன ஆயுதங்களை பயன் , படுத்தக்கூடாது என எச்சரித்தது குறிப்பிடத்தக்கது.

## அட்லாண்டிக் பெருங்கடலை தனியாக கடந்த பெண் விமானிக்கு 115ஆவது பிறந்தநாள்



உலகப் புகழ் பெற்ற அமெரிக்க பெண் விமானியான அமேலியா மேரி ஏர்ஃகாட்டி யின் 115வ்து பிறந்த தின-மான நேற்று கூகுள் இவருக்கு பிரத் யேக பக்கத்தை உருவாக க சிறப்பித்துள்ளது.

ஏர்ஃகாட் அமெரிக்காவின் சிறப்புமிக்க பறக்கும் சிலுவை (Distinguished Flying Cross) வழங்கப்பட்ட முதல் பெண்மணி ஆவார்.

தனி விமானத்தில் அட்லாண்டிக் பெருங்கடலை கடந்தமைக்காக இவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது.

இவர் வான்பயணத்தில் மேலும் பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளார். பறக்கும் அனுபவங்களை குறித்து கூடுதலாக விற்கப்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.

பெண் விமானிகளுக்கான தொண்ணூற்று ஒன்பது என்ற அமைப்பை நிறுவுவதில் தூண்டுகோலாக இருந்தார்.

கடந்த 1935 ஆம் ஆண்டில் பர்டியூ பல்கலைக்கழகத் தில் வான்வழிப் பயணத் துறையில் வருகை விரி வுரையாளராக இருந்து பெண்கள் இத்துறையை தெரிவு செய்ய உந்துத லாக இருந்தார். மேலும் தேசிய பெண்கள் கட்சி உறுப்பினராகவும் சம உரிமை திருத்த மசோ தாவிற்கு ஆதரவாளரா கவும் இருந்தார்.

கடந்த 1937ஆம் ஆண்டு உலகைச் சுற்றி வரும் முயற்சியில், பர்டியூ நிதிய ளித்த லாக்யீட் மாடல் 10 எலெக்ட்ரா விமானத் தில் பறக்கையில், ஏர்ஃகாட் மத்திய பசிபிக் பெருங்கடலில் உள்ள ஹவுலாந்து தீவு அருகே மாயமானார்.






முல்லை பெரியாறு அணை விவகாரத்தில், தமிழக அரசுக்கு முதல் கட்ட வெற்றி கிடைத்துள்ளது.

அணையில் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு பணிகளை மேற்கொள்வதற்கு, தமிழக அரசுக்கு, உச்ச நீதிமன்றம் நேற்று அனுமதி அளித்து உத்தரவிட்டது.

தமிழகத்தில் உள்ள தென் மாவட்டங்களின் ஜீவாதாரமாக விளங்கி வரும் முல்லை பெரியாற்றிலுள்ள பழைய அணையை இடித்து விட்டு, புதிய அணையை கட்டுவதற்கு கேரள அரசு முயற்சித்து வருகிறது.

பழைய அணையில் விரிசல் ஏற்பட்டுள்ளதால், இந்தப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு ஆபத்து ஏற்படும் என்பதால், அதை இடிக்கப் போவதாக கேரள அரசு கூறி வருகிறது. அணையின் நீர்மட்டத்தை உயர்த்தவும் கேரளா மறுத்து வருகிறது. இதற்கு, தமிழக அரசு சார்பில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வருகிறது. இது குறித்து ஆய்வு செய்வதற்காக, முன்னாள் தலைமை நீதிபதி ஏ.எஸ்.ஆனந்த் தலைமையில், ஐந்து பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. அந்த குழுவினர், பல்வேறு ஆய்வுகளை நடத்தி, கடந்த ஏப்ரல் மாதம், உச்ச நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர். அதில், அணை உறுதியாக இருப்பதாகவும், நீர்மட்டத்தை உயர்த்தலாம் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், தமிழக அரசு சார்பில் உச்ச நீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.


இந்த மனுவை, நீதிபதிகள் டி.கே.ஜெயின், ஆர்.எம்.லோத்தா, தீபக் வர்மா, சி.கே.பிரசாத், அனில் ஆர் தேவ் ஆகிய ஐந்து பேர் கொண்ட குழு நேற்று விசாரித்தது. அப்போது,

முல்லை பெரியாறு அணையில், தமிழக அரசு மேற்பூச்சு பணி-களை மேற்கொள்ளலாம். அணையிலிருந்து, நீர், எந்தவித இடையூறுமில்லாமல் செல்லும் வகையில், கால்வாய் மற்றும் சுரங்கப் பாதைகளில் உள்ள கழிவுகள், இடிபாடுகள், குப்பை கூளங்கள், தண்ணீர் பாட்டில்கள் ஆகியவற்றை அகற்றும் பணிகளையும் தமிழக அரசு மேற்கொள்ளலாம். இந்த பணிகளை, கேரளாவின் கண்காணிப்பு பொறியாளர் மற்றும் மத்திய நீர் ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்ட உறுப்பினர் ஆகியோரின் மேற்பார்வையில், தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய செய்திகள்

## நிதிமோசடியில் எனக்கு சம்பந்தமில்லை

நித்தியானந்தா



அமெரிக்காவின் கலிபோர்னியா நீதிமன்றத்தில் தொடரப்பட்ட நிதி மோசடி வழக்கில் தனக்கு தொடர்பில்லை என்று நித்தியானந்தா கூறியுள்ளார்.

கலிபோர்னியா மாகாணத்தில் வேதப் பல்கலைக்கழகம் ஒன்றை தொடங்குவதற்காக நித்தியானந்தா பவுண்டேஷன் நிறுவனத்திற்கு பொபட் லால் சாவ்லா என்ற சீடர் ரூ.9. 35 கோடி கொடுத்தார்.

இந்நிலையில் நடிகை ரஞ்சிதா உடனான விவகாரம் வெளிவந்த பின்னர், ஆசிரமத்திலிருந்து வெளியேறியதுடன் தன் பணத்தை திரும்ப தரும்படியும் கலிபோர்னியா நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இவ்வழக்கு விசாரணையில், நித்தியானந்தா பவுண்டேஷன் மோசடியானது எனக் கூறியதுடன் அவரது பணத்தை திருப்பித்தரும்படியும் நித்தியானந்தா பவுண்டேஷனுக்கு உத்தரவிட்டது.

இந்நிலையில் சுவாமி நித்தியானந்தா, தனக்கும் இந்த நிறுவனத்திற்கும் தொடர்பில்லை எனக் கூறியிருக்கின்றார். மேலும் பிடதி ஆசிரமம் மட்டுமே தனக்கு சொந்தமானது என்றும் நிறுவனங்களுக்கும் தனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என தெரிவித்துள்ளார்.

மேலும் தனது சீடர்கள் மதுரை ஆதீனக் கட்டுப்பாட்டில் இருக்கும் வீடுகளில் வசிக்கும் மக்களை மிரட்டுவதாக வெளியான தகவல் உண்மையில்லை என்றும் மதுரை ஆதீன மடத்தின் சொத்துக்களை அபகரிக்க முயலவில்லை எனவும் கூறினார்.



பென்னிக்குக்கின் பேரனின் மகன் காலின் பென்னிகுக். இவர் தனது மனைவி மார்க்கரெட்டுடன் மதுரை வந்து பென்னிக்குக்கின் சிலையை பார்வையிட்டார்.

# பிரணாப் புத்திக்கூர்மை படைத்தவர் உலக மீடியாக்கள் புகழாரம்



இந்தியாவின் குடியரசுத் தலை-வராக தெரிவு செய்யப்பட்டுள்ள பிரணாப் முகர்ஜி, புத்திக்கூர்மை படைத்தவர் என உலக மீடியாக்கள் புகழாரம் சூட்டியுள்ளன.

**அமெரிக்காவின் வால் ஸ்டிரீட் ஜர்னல்:** மிகவும் புத்திசாலித்தனமும், புத்தி கூர்மையும் படைத்தவர் 76 வயதான பிரணாப் முகர்ஜி.

காங்கிரஸ் கட்சியின் பிரச்சினைகளைத் தீர்க்கும் முக்கியத் தலைவராக திகழ்ந்தவர் பிரணாப் முகர்ஜி. பல ஆண்டுகளாக காங்கிரஸ் கூட்டணியை பிரிந்து போய் விடாமல் கட்டிக் காத்த முக்கியஸ்தராக திகழ்ந்தார் பிரணாப் என்று கூறியுள்ளது.

**பி.பி.சி:** காங்கிரஸ் கட்சியின் தொண்டுக் கிழவனார் பிரணாப் முகர்ஜி. பல்வேறு கூட்டணிகளை சிறப்பாக அமைக்க உதவியவர். 2014 லோக்சபா தேர்தலில் எந்தக் கட்சியும் தனித்து ஆட்சியமைக்க முடியாது. அப்போது குடியரசுத் தலைவரின் பங்கு மிக முக்கியமானதாக அமையும் என்பதால் பிரணாபின் செயல்பாடுகள் கூர்ந்து கவனிக்கப்படவுள்ளன என்று கூறியுள்ளது.

மேலும் பிரணாபின் வெற்றி காங்கிரஸுக்குத்தான் பெரும் பலமாக அமைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

**பாங்காக் போஸ்ட்:** குழப்பம் மிகுந்த இந்திய அரசியலில் பிரணாப் முகர்ஜியின் செயல்பாடுகள் முக்கியத்துவம் பெறும். அதற்கு அவரது நீண்ட கால அரசியல் அனுபவம் உதவி புரியும் என்று கூறியுள்ளது.

**த அவுஸ்திரேலியன்:** பொருளாதார ஏற்றத்தாழ்வு, நாடாளுமன்றத்தில் தொடரும் குழப்பங்கள் ஆகியவற்றுக்கு மத்தியில், பிரணாப் முகர்ஜி, சற்று சிறப்பாக செயல்பட முனைவார் என்று கூறியுள்ளது.

மேலும் ஒரு படி போய், நாடாளுமன்றத்தில் ஸ்தம்பிப்பு நிலை வரும்போது குடியரசுத் தலைவர் என்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி மல்லுக்கட்டும் கட்சிகளை அழைத்து அவர் பேசக் கூடும் என்றும் த அவுஸ்திரேலியன் கூறியுள்ளது. இவ்வாறு பிரணாப் முகர்ஜியை உலக பத்திரிக்கைகள் புகழ்ந்து எழுதி உள்ளன.

# தி.மு.க.கல் எறிந்த சம்பவம்: எம்.எல்.ஏ.நீதிமன்றத்தில் ஆஜர்



தி.மு.க. ஆட்சியை விமர்சனம் செய்து பேசியதால், அ.தி.மு.க பொதுக் கூட்டத்தில் நடந்த கல் வீச்சு தொடர்பான வழக்கில், பொள்ளாச்சி நீதிமன்றத்தில், எம்.எல்.ஏ. ஜெயராமன் ஆஜரானார்.

பொள்ளாச்சி, திருவள்ளுவர் திடலில், கடந்த 10.12.2006இல், தி.மு.க. ஆட்சியை கண்டித்து, எம்.எல்.ஏ. ஜெயராமன் தலைமையில், பொதுக் கூட்டம் நடந்தது. கட்சியின் தலைமைக் கழக பேச்சாளர், மறைந்த எம்.எஸ்.சந்திரன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். இக்கூட்டத்தில், தி.மு.க. அரசை விமர்சனம் செய்து பேசியதால், தி.மு.க.வினர் கற்களை பொதுக் கூட்ட மேடையை நோக்கி வீசினர். டியூப் லைட்டுகள் உடைந்தன. சிலர் காயமடைந்தனர். இது தொடர்பாக, ஜெயராமன் பொள்ளாச்சி போலிசில் புகார் செய்தார். இவ் வழக்கில், சாட்சியமாக, கடந்த 21.11. 2011ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜரானார். தற்போது, உடுமலை தொகுதி எம்.எல்.ஏ.வாகயிருக்கும் ஜெயராமன், மறு விசாரணைக்காக, பொள்ளாச்சி மாஜிஸ்திரேட் நீதிமன்றம் எண் ஒன்றுக்கு வந்தார். அவருடன், வழக்கறிஞர் சம்பத்குமார் வந்திருந்தார். வழக்கு தொடர்பாக, மேலும் விசாரணை மேற்கொள்வதற்காக, 31.07.2012 ஆம் திகதிக்கு, மாஜிஸ்திரேட் லிங்கம் வழக்கை ஒத்திவைத்தார்.

## பிரதமர் அளித்த விருந்தை புறக்கணித்த சரத்பவார்



பதவியிலிருந்து ஓய்வு பெறவுள்ள ஜனாதிபதி பிரதீபா பாட்டீலை கௌரவிக்கும் வகையில், பிரதமர் மன்மோகன் சிங் நேற்று அளித்த விருந்தை, தேசியவாத காங்கிரஸ், தலைவர் சரத்பவாரும், அவரது கட்சியைச் சேர்ந்த அமைச்சரான பிரபுல் படேலும் புறக்கணித்தனர். அதே நேரத்தில், ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசில் இடம் பெற்றுள்ள அமைச்சர்கள் பலரும் பங்கேற்றனர். ஜனாதிபதி பதவியில் இருந்து ஓய்வு பெறும், பிரதீபா பாட்டீல், புதிய ஜனாதிபதியாக தேர்வாகியுள்ள பிரணாப் முகர்ஜி, பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் மத்திய அமைச்சர்களுக்கு இன்று வழி அனுப்பு விழா விருந்தளிக்கிறார்.

# நதிகளைத் தேசிய மயமாக்க வேண்டும்

கவிஞர் வைரமுத்து



இந்தியாவில் நதிகள் தேசியமயமாக்கப்பட வேண்டுமென்றும் இல்லையென்றால் நாட்டின் ஒருமைப்பாடு சிதறி விடும் என கவிப்பேரரசு வைரமுத்து கூறியுள்ளார்.

தமிழ்நாடு, தஞ்சாவூரில் தனியார் நிறுவன கடை திறப்பு விழாவில் கலந்து கொண்ட கவிஞர் வைரமுத்து இக்கருத்தை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது, தொழில்நுட்பம் நிறைந்த இக்காலத்தில் நதிகளை இணைப்பது சாத்தியமானது. நதிகளை தேசியமயமாக்க வேண்டும். இல்லையென்றால் இந்தியாவின் ஒருமைப்பாடு சிதறி விடும்.

ரஷ்யாவில் நதிகளை இணைப்பதில் சிரமம் ஏற்பட்டிருக்கலாம். அதேவேளையில் அந்த சிரமம் இந்தியாவில் ஏற்பட வாய்ப்பில்லை.

இந்தியாவிற்கு உபரிநீரும் உபரிமின்சாரமும் தேவைப்படுகின்றது. இதை ஏற்படுத்தினால் மட்டுமே இந்தியா வல்லரசாகும் எனவும் தெரிவித்தார்.

இதற்கு முன்பு, இந்தியாவின் அணு விஞ்ஞானி அப்துல் கலாம் இதே கருத்தையே தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வட மாகண பெண்கள் உதைபந்தாட்டம்: மன்னாரை வீழ்த்தி யாழ்ப்பாணம் சம்பியன்

வலிகாமம்

மன்னார் மாவட்ட பெண்கள் உதைபந்தாட்ட அணியின் பலத்த எதிர்பின் மத்தியிலும் யாழ். மாவட்ட பெண்கள் உதைபந்தாட்ட அணி வெற்றியை தனதாக்கி சம்பியனாகியது.

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய பெண்களுக்கான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட பெண்கள் உதைபந்தாடட அணியும் மன்னார் மாவட்ட பெண்கள் உதைபந்தாட்ட அணியும் ஞாயிறுக்கிழமை பிற்பகல் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் மோதிக்கொண்டன.

போட்டி தொடங்கி முடிவடையும் வரை இரு அணிகளும் கடுமையாக மோதிக்கொண்ட போதிலும் முதல் பாதி ஆட்டத்தில் போட்டி முடிவடைய பன்னிரெண்டு நிமிடங்கள் இருந்த நிலையில் யாழ். மாவட்ட அணியின் வீராங்கனை சுபா ஒரு கோலைப் பெற்று யாழ் மாவட்ட 1:0 என்ற கோல் கணக்கில் அணியை முன்னுக்கு கொண்டுவந்த நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் பெரும் உற்சாகத்துடனும் பெரும் எதிர்பார்ப்பின் மத்தியிலும் மோதிக்கொண்டார்கள்.



மீண்டும் யாழ். மாவட்ட அணிக்கு ஒரு கோல் பெறும் சந்தர்ப்பம் கிடைக்க அதனை உரிய முறையில் பயன்படுத்தி ஜசிந்தா ஒரு கோலை பெற்றுக் கொண்டார்.

போட்டி வேகம் பெற்றதுடன் இரு அணிகளும் மீண்டும் கோல் பெறுவதில் கண்ணாக இருந்து விளையாடிய போதிலும் மன்னார் மாவட்ட அணி கோல் பெறும் வாய்ப்பு கிடைக்கப்பெற்ற போதிலும் அதனை கோலாக தவறிய நிலையில் மீண்டும் ஒரு கோலை யாழ் மாவட்ட அணியின் வீராங்கனை சுபா மீண்டும் ஒரு கோலை பெற்று வெற்றி நிச்சயம் என்ற நிலையை ஏற்படுத்தினார். இந் நிலையில் போட்டியின் இரண்டாம் பாதிஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட இறுதியில் யாழ். மாவட்ட பெண்கள் உதைபந்தாட்ட அணி 3:0 என்ற கோல் கணக்கில் மன்னார் மாவட்ட பெண்கள் அணியை வெற்றி பெற்று வடமாகாண சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. வெற்றி பெற்றவர்களுக்கான பதக்கங்களையும் வெற்றிக்கிண்ணத்தையும் வட மாகாண கல்வி பண்பாட்டு அலுவலகள் மற்றும் விளையாட்டு அமைச்சின்செயலாளர் எஸ்.சத்தியசீலன் வழங்கி கௌரவித்தார்.

## யாழ்ப்பாணத்தில் மாற்று ஆற்றலுடையோரின் விளையாட்டுப் போட்டி

வலிகாமம்

மாற்று ஆற்றலுயுடைய மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை வட மாகாண மட்டத்தில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

முதல் தடவையாக நடைபெறும் இந்த விளையாட்டுப் போட்டியில் ஐநூறுக்கும் மேற்பட்ட வட மாகாண மாவட்டங்களைச் சேர்ந்த மாற்று ஆற்றலுயுடைய வீர வீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

இதற்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் வட மாகாண கல்வித் திணைக்களத்தின் விசேட தேவையுடைய மாணவர்களின் பாட இணைப்பாளர் திருமதி ஜே. நிஷாந்தி மேற்கொண்டுள்ளார்.

முதல் தடவையாக நடைபெறும் இந்தப் போட்டியில் 50, 75 ,100 , மீற்றர் ஓட்டப் போட்டிகள், நின்று நீளம் பாய்தல், குண்டெறிதல் உட்பட பலவேறு போட்டிகளும் வீர, வீராங்கனைகளின் தன்மைக்கு எற்ப நடைபெறவுள்ளது.

## கரம் இறுதியாட்டம் பல்கலையில்

யாழ்ப்பாணம் பல்கலைகழக விளையாட்டு அவையும் பல்கலைககழக கரம் அணியும் இணைந்து நடாத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான கரம் ஆண்கள் அணிகளுக் கான சுற்றுப்போட்டி - 2012 இன் இறுதிப் போட்டி இன்று பிற்பகல் 4.00 மணிக்கு யாழ். பல்கலைக் கழக உடற்கல்வி அலகில் பழைய மாணவி திருமதி. முரளிதரன் பானுரேகாவின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளது.

இந்த இறுதிப்போட்டியில் காமாட்சி விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து யாழ். பரியோவான் கல்லூரி அணி மோதவுள்ளது.

இவ்விறுதி நிகழ்வுக்கு பிர தம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட பௌதிகவியற்துறைத் தலைவரும் முன்னாள் யாழ். பல்கலைக் கழக கரம் வீரருமாகிய பேராசிரியர் பி.ரவிராஜன் அவர்கள் கலந்து கொள்ளவுள்ளார்.

## கலந்துரையாடல்

வலிகாமம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உடற்கல்வி விஞ்ஞான அலகினால் உடற்கல்வி பட்டம் பெற்று வெளியெறிய மாணவர்களுக்கா[ன] சந்திப்பு இன்று பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்து மக ளிர் கல்லூரிக்கு அண்மையரக வுள்ள யூனிவேசல் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

உடற்கல்வி பயிற்சி நெறியை பூர்த்தி செய்து தொழில்புரிபவர்களையும், தொழிலற்று இருப்பவர் களையும் இந்த கலந்துரையாடலில் கலந்து கொள்ளும்படி உடற்கல்வி மாணவர்களின் முன்னாள் தலைவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்கள்.

இந்தக் கலந் துரையாடலில் எதிர்கால கல்வி வளர்ச்சி, விளையாட்டுத்துறை வளர்ச்சி மற்றும் பல்வேறு விடயங்கள் சம்பந்தமாகவும் கலந்துரையாடப் படவுள்ளதால் அனைத்து உட[ற்] கல்வி அலகு மாணவர் களையு[ம்] தவறாது கலந்துகொள்ளும்படி வேண்டப்பட்டுள்ளது.

# பலமான இங்கிலாந்து தென்னாபிரிக்காவிடம் சரண்



இங்கிலாந் துக்கு எதிரான முதல் டெஸ்டில் தென்னாபிரிக்கா ஒரு இனிங்ஸ், 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடியது. முதல் இனிங்ஸில் 385 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந் தது.

அடுத்து விளையாடிய தென்னாபிரிக்கா 2 விக்கெட் இழப்புக்கு 637 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. இதில் ஆம்லா 311 ஓட்டங்களுடனும் கலிஸ் 182 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். அணித்தலைவர் ஸ்மித் 131 ஓட்டங்களை எடுத்தார்.

இதையடுத்து இரண்டாவது இனிங்ஸில் விளையாடிய இங்கிலாந்து ஆட்டத்தின் கடைசி நாளான திங்கட்கிழமை 240 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதன் மூலம் தென்னாபிரிக்கா இனிங்ஸ் வெற்றி பெற்றது.

2ஆவது இனிங்ஸில் வேகப் பந்து வீச்சாளர் டேல் ஸ்ரெய்ன் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தி இங்கிலாந்து அணியை நிலைகுலையச் செய்தார். இந்த டெஸ்ட்டில் இங்கிலாந்து வீரர்களால் தென்னாபிரிக்காவின் இரு விக்கெட்டுகளை மட்டுமே எடுக்க முடிந்தது. ஆனால் இங்கிலாந்து அணியின் 20 விக்கெட்டுகளையும் தென்னாபிரிக்க வீரர்கள் சாய்த்தனர்.

ஆம்லா ஆட்டநாயகனாக தெரிவானார். இந்த வெற்றி மூலம் 3 ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரில் தென்னாபிரிக்கா 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

# எஸ்.எல்.பி.எல் போட்டிகளில் விதிகள் இறுக்கமாகப் பேணப்படும்

இலங்கையில் இடம்பெற ஏற்பாடாகியுள்ள எஸ்.எல்.பி.எல். போட்டிகள் கண்ணியத்துடன் இடம் பெறும் என இலங்கைக் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. எஸ்.எல்.பி.எல். போட்டிகள் சர்வதேசக் கிரிக்கெட் சபையின் ஒழுக்க விதிகளுக்கு அமைவாகவே இடம் பெறும் எனத் தெரிவித்துள்ள இலங்கைக் கிரிக்கெட் சபை, இத் தொடரின் ஒழுக்க விதிகள் இறுக் கமாகப் பேணப் படும் எனவும் தெரிவித்துள்ளது.

சரியான முறையில் எஸ்.எல்.பி. எல். போட்டிகளுக்குரிய ஏல நிகழ்வு இடம்பெறுவதை உறுதிப் படுத்துவதற்காக இலங்கைக் கிரிக்கெட் சபை புதிய வகையான வெளிப்படையான ஏலத்தை ஏற்பாடு செய்திருந்ததாகத் தெரிவிக்கும் இலங்கைக் கிரிக்கெட் சபை, சம்பந்தப்பட்டுள்ள ஒவ்வொரு அணியும் அதிகபட்ச பெறுமதியைப் பெற்றுக்கொள்வதை இலங்கைக் கிரிக்கெட் சபை உறுதி செய்ததாகத் தெரிவித்துள்ளது.ஸ்ரீலங்கா பிறிமியர் லீக் தொட ரின் அணிகள், அவற்றின் நிலை குறித்து ஊடகங்களால் கேள் விகள் எழுப்பப் பட்டதையடுத்தே இலங்கைக் கிரிக்கெட் சபை இதைத் தெரிவித்துள்ளது.

அணிகளுக்குரிய ஒப்பந்தத்தின் படி அணியோ, அணியைச் சேர்ந்தவர்களோ சூதாட்டத்திலோ அல்லது அது சம்பந்தமான நடவடிக்கைகளிலோ ஈடுபட முடியாது என்பதோடு, அணியை விலைக்கு வாங்குவதற்கு அவர்கள் குறித்தளவு பணத்தைக் கொண்டிருப்பதை உறுதிப்படுத்தியிருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது..

# ஒலிம்பிக்கில் ஐந்தாவது தடவை...

"ஐந்தாவது முறையாக ஒலிம்பிக் போட்டியில் விளையாடும் வாய்ப்பு கிடைத்திருப்பது பெருமையாக உள்ளது," என, இந்திய ரென்னிஸ் வீரர் மகேஷ் பூபதி தெரிவித்தார்.

லண்டன் ஒலிம்பிக்கில், ஆண்களுக்கான இரட்டையர் பிரிவு ரென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மகேஷ் பூபதி, ரோகன் போபண்ணா ஜோடி விளையாடுகிறது. இது போபண்ணாவுக்கு முதலாவது ஒலிம்பிக் போட்டி. ஆனால் பூபதி, தொடர்ந்து ஐந்தாவது முறையாக (1996, 2000, 2004, 2008, 2012) ஒலிம்பிக்கில் பங்கேற்க உள்ளார். இதில் லியாண்டர் பயசுடன் ஜோடி சேர்ந்த பூபதி, அட்லாண்டா (1996) மற்றும் சிட்னி (2000) ஒலிம்பிக்கில் இரண்டாவது சுற்றுவரை முன்னேறினார். ஏதென்ஸ் (2004) ஒலிம்பிக்கில் அரையிறுதி வரை முன்னேறிய பயஸ்-பூபதி ஜோடி, பீஜிங் (2008) ஒலிம்பிக்கில் காலிறுதியோடு வெளியேறினார்.

இம்முறை நீண்ட சர்ச்சைக்கு பின், போபண்ணாவுடன் கைகோர்த்துள்ள பூபதி கூறியது:

ஒலிம்பிக் போட்டியில் தொடர்ந்து ஐந்தாவது முறையாக விளையாடுவேன் என ஒருபோதும் நினைத்துப் பார்த்ததில்லை. இதனை என் வாழ்வின் சிறந்த தருணமாக கருதுகிறேன். தவிர இது, எனது மற்றொரு சாதனைக் கல்.

பதக்க வாய்ப்பு குறித்து தற்போது எதுவும் கூற இயலாது. போட்டியில் எப்படி விளையாடுகிறோம் என்பதைப் பொறுத்தே பதக்கம் வெல்ல முடியும். ஏனெனில் ஒற்றையர் பிரிவில் விளையாடும் திறமையான வீரர்கள் இரட்டையர் பிரிவிலும் பங்கேற்பதால், ஒவ்வொரு போட்டியும் சவால் நிறைந்ததாக இருக்கும்.

இது, கிராண்ட்ஸ்லாம் போட்டிகளை விட கடுமையானதாக இருக்கும். இருப்பினும் இது குறித்து அதிகம் சிந்திக்கவில்லை. தொடர்ந்து போபண்ணாவுடன் இணைந்து நல்ல முறையில் பயிற்சி மேற்கொண்டு வருகிறேன். எங்களது பயிற்சி முறை திருப்தி அளிக்கிறது. போட்டி யில் முழுகவனம் செலுத்தி பதக் கம் வெல்ல முயற்சிப்போம் - என்றார்.

# டெஸ்ட் அணியில் மீண்டும் கெய்ல்

மேற்கிந்தியத்தீவுகள் டெஸ்ட் கிரிக்கெட் அணியில் மீண்டும் இடம் பிடித்துள்ளார் அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல். நியூசிலாந்து - மேற்கிந்தியத்தீவுகள் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி இன்று தொடங்குகிறது. இதற்கான அணியை மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

சுமார் 18 மாதங்களுக்குப் பின் கிறிஸ் கெய்ல் டெஸ்ட் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். கடைசியாக 2010 டிசம்பரில் அவர் இலங்கைக்கு எதிரான போட்டியில் விளையாடினார். முன்னணி வீரர் சிவநரைன் சந்தர்போலும் அணிக்குத் திரும்பியுள்ளார். இங்கிலாந்துக்கு எதிராக மேற்கிந்தியத்தீவுகள் விளையாடிய கடைசி டெஸ்ட் போட்டியில் காயம் காரணமாக சந்தர்போல் விளையாடவில்லை.

காயம் காரணமாக டெரன் பிராவோ அணியில் சேர்க்கப்படவில்லை. முன்னதாக நியூசிலாந்துக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடரை மேற்கிந்தியத்தீவுகள் 4-1 என்ற கணக்கில் வென்றது.

# பிக் பேஷ் தொடரில் அப்ரிடி, கெய்ல்

அவுஸ்திரேலியாவின் பிரபலமான பிக் பேஷ் லீக் ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டியில் விளையாட பாகிஸ்தான் அணியின் அதிரடி சகலதுறை வீரர் அப்ரிடி, மேற்கிந்தியத்தீவுகளின் அதிரடி வீரர் கெய்ல் ஆகியோர் மீண்டும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையால் நடத்தப்படும் பிக் பேஷ் லீக் ருவென்ரி-20 தொடர் 7 ஆம் திகதி இப்போட்டி தொடங்குகிறது. மொத்தம் 8 அணிகள் பங்கேற்கின்றன. இதில் சிட்னி தண்டர்ஸ் அணியில் கெய்லும், அப்ரடியும் விளையாட ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற முதல் பிக் பேஷ் லீக் போட்டியிலும் கெய்ல், சிட்னி தண்டர்ஸ் அணியில் விளையாடினார். இதில் ஓர் ஆட்டத்தில் 54 பந்துகளில் சதமடித்து அசத்தினார். கடந்த ஆண்டில் மெல்போர்ன் ரினிகேட்ஸ் அணியில் அப்ரிடி இடம் பெற்றிருந்தார். இப்போது அணி மாறியுள்ளார்.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 25.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது